கலைமுகம்

கலை இலக்கிய சமூக இதழ்

ஜனவரி - மார்ச் 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘சுனாமி’ ஆழிப்பேரலையில்
உயிரிழந்த அனைத்து உறவுகளுக்கும்
‘கலைமுகம்’ தனது அஞ்சலிகளைத் -
தெரிவித்துக் கொள்கின்றது.
அத்துடன்,
இவ் இயற்கைப் பேரழிவில்
உறவுகளை இழந்து
உடமைகளை இழந்து
நிர்க்கதி நிலையில் நிற்கும்
பல இலட்சம் மக்களின் துயரோடு
கலைமுகமும்
இணைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாண்டுச் சஞ்சிகை

கலைமுகம்

கலை, இலக்கிய, சமூக இதழ்

கலை 16 முகம் 01

ஜனவரி - மார்ச் 2005

பிரதம ஆசிரியர்
நீ. மரியசேவியர் அடிகள்

பொறுப்பாசிரியர்
கி. செல்மர் எமில்

உதவி ஆசிரியர்
வி. பி. தனேந்திரா

அட்டைப்பட ஓவியம்
ஓவியர் அ. இராசையா

அட்டைப்பட வடிவமைப்பு
அ. ஜுட்சன்

உட்பக்க ஓவியங்கள்
ம. டொமினிக் ஜீவா
அ. ஜுட்சன், பீ. சே. கலீஸ்

இதழ் வடிவமைப்பு
கி. செல்மர் எமில்

கணினிசார்ந்த சேவைகள்
ஜெயந்த் சென்ரர்
23, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு
ஏ. சி. எம். அச்சகம்
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு
திருமறைக் கலாமன்றம்
238 பிரதான வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
Tel. 021-222 2393
E-Mail: cpajaffna@sltnet.lk

Centre for Performing Arts
19-5/6, Milagiriya Avenue,
Colombo-4, Sri Lanka.
Tel. 0112-597245 Fax: 0112-556712
E-Mail: saveri@dynanet.lk

உள்ளே...

கட்டுரைகள்

நீ. மரியசேவியர் அடிகள்
தாமரை
செல்வி திருச்சந்திரன்
வி. பி. தனேந்திரா
[illegible]
பேரா. மௌனகுரு
சு. ஸ்ரீ பேரர் பாவலனா



கவிதைகள்

சோ. பத்மநாதன்
நீர்கொழும்பு முத்துலிங்கம்
மு. பாலன்
தான விஷ்ணு
வ.வ. கோவசிங்கம்
அம்பி
சோ. தேவராசா
பொன்னாளன்
ஷெல்மா
அரியநாதன்
எஸ். ஏ. அருட்செல்வம்

சிறுகதைகள்

ப. சுந்தரம்பாள்
செம்பியன் செல்வன்
தி. ஞானசேகரன்
தமிழ்



மற்றும்...

சாளரமலம்
நூலகம்
அஞ்சலிகள்
கலைஞருக்கு நேர்ந்த நிலை
பாடல்கள்
விருதுகள்
நூல் வெளியீடு

இதழ் 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதுவாழ்வின் நம்பிக்கைச் சின்னங்களாக மாறட்டும்

வணக்கம்!

அண்மைக்காலங்களில் இலங்கைத்தீவு வெள்ளப் பெருக்கின் வீச்சைக் கண்டிருக்கிறது. புயற்காற்றின் சீற்றங்களுக்கு முகங்கொடுத்திருக்கிறது. இடைக்கிடையே சிறிய அளவிலான நில அதிர்வுகளையும் அறிந்திருக்கிறது. ஆயின், ஆழிப் பேர் அடுக்கு அலைகள் என்னும் இயற்கையின் 'விளையாடலை', இயற்கைத் தாயின் அளக்க முடியா ஆற்றலை முதன் முதலாக இன்றைய சந்ததியினர் நேரடியாகவே உணர்ந்து கொண்டனர். அதன் பல்வேறு பரிமாணங்களையும் தெரிந்து கொண்டனர்.

பற்றற்ற ஒரு நிலையிலிருந்து பார்க்கும் பொழுது அறிவு படைத்த மனிதர்களாகிய நம்மால் எதையும் சாதித்துவிட முடியும் என்ற எண்ணக்கருவில் உறைந்து கிடக்கும் 'அகங்'காரத்துக்கு நம்மைப்பற்றிய உண்மை நிலையைப் புரிந்துகொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. சிற்றறிவு படைத்த மனிதர்களுடைய கூட்டு ஆற்றலைக் கடந்து அதற்கு அப்பால் நம்மால் கட்டுப்படுத்த முடியாத பேர் ஆற்றல்கள் உள்ளன என்னும் உண்மை 26.12.2004 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஐம்பெரும் பூதங்களுள் ஒன்றாகிய நீருக்கு இத்துணை ஆற்றல் உள்ளது என்றால், அதன் ஆதாரமாக விளங்கும் ஆதி முதலின் அளப்பெரும் சக்தியை எப்படி எடைபோட முடியும்! அறிவின் சிறகுடன் அண்டகோளங்களில் பறக்கும் மனிதன், 'முதற்பொருள்' ஊட்டும் 'ஞானத்'தைப் பெறுவதற்கு அவனது இருப்பை உலுக்கி உருக்கிய இந்நிகழ்ச்சி வழிகோலுகிறது. இஞ் ஞானத்தை நமது பண்பாட்டின் வேர்களுக்குள் புகுத்திச் சென்ற நம் மூதாதையரின் பொன் வாக்குகள் வாழ்வின் நிலையான இலக்கை நோக்கிச் செல்ல நமக்கு என்றும் துணைபுரியும் ஆற்றல் படைத்தவை.

அலைகள் பல பனை உயர எழுந்தன. அவை நொடிக்குள் உயிரின் பல தளங்களை அடித்தும் அழித்தும் சென்றன. இது அறியத்தருவது: நம் உலக வாழ்வு நிலையானதொன்றல்ல ஒரு நாள் ஏதோ ஒரு வகையில், தனிப்பட்ட மனிதவாழ்வு முடிவுக்கு வரும். அறிவு படைத்த மனித இனம் முதலாக இவ்வுலகில் வாழமுடியாச் சூழ்நிலை உருவாகும். மாபெரும் அணுசக்தி நிலையம் போல் செயற்பட்டு அதன் உட்பகுதியில் பதினைந்து மில்லியன் பாகை வெப்பத்தில் நொடி ஒன்றுக்கு அளக்க முடியா அணுக்கதிர்களை பரப்பிக் கொண்டும் உலகை வாழ்வித்துக் கொண்டும் இருக்கும் கதிரவன் 400 கோடி ஆண்டுகளில் தனது வெப்ப இயல்பை இழந்து குளிர்ந்து போகும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதே விதம் அண்ட கோளம் முதலாக நிலையானது அன்று என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். 'யாக்கை நிலையாது' என்று தெரியாமலா நமது முன்னோர்கள் கூறினார்கள்? ஆக, நம்மைச் சந்தித்த இயற்கை நிகழ்ச்சி நமது இருப்பின் நிலையற்ற தன்மை பற்றியும் சிந்திக்க வைக்கின்றது.

இயற்கை பாகுபாடு அறியாது. ஆழியின் அலைகள் ஊழியின் கருவிகளாக மாறி எழுந்த போது இனம், சமயம், சமூகநிலை, ஆண், பெண், குழந்தை, இளைஞர், முதியோர், கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று பாராது தனது செயற்பாட்டை முடித்தது! அதன் மூலம், மனிதத்தின் சமத்துவத்தை நிலைநாட்டிச் சென்றது. செயற்கை அடையாளங்களுடனும், முகவரிகளுடனும் வாழ்வது தவறல்ல, அதுவும் இயற்கையின் ஒரு நியதியே. ஆயின் அதன் மறுபக்கமான பொதுமைத் தன்மையிலே தான் தனித்துவ அடையாளங்கள் குத்தப்படுகின்றன என்ற உண்மை மறக்கப்படக் கூடாது. சமாதியில் மட்டும் அன்று, 'வாழ்விலும்' சமத்துவம் போற்றப்பட வேண்டும். கட்டிவளர்க்கப்பட வேண்டும்.

இயற்கையின் செயற்பாட்டைக் குறித்து ஆத்திரப்பட்டும், அச்சம் கொண்டும். 'அள்ளியும் தந்தாய்! கிள்ளியும் சென்றாய்' என அழுது புலம்பும் நாம், நமக்கும் இயற்கைக்கும் உள்ள ஆழ்ந்த உறவை மீள் ஆய்வு செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனைவரும்! இழப்புக்களை அவலமாக எழுதும் நாம் நுண்ணோக்கின் பெயரால் அதை மாசுபடுத்தக் கூடாதில்லை. அனுதாபத்தைத் தூண்டும் பிரச்சாரங்களைச் செய்கிறோம்; நம் பொருட்களை, [illegible] அழியாதிருக்கும் குழந்தை பொருட் குழுமங்களை, ஏன், கொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களின் அல்லது ஆதரவற்றவர்களின் உடல்களை படமெடுத்து விளம்பரம் செய்து காசுகளை கொட்டிக் கொள்ளும் பெருமக்களை அறிந்தும் பொருளீட்டுவதிலிருந்து அவசர மனப்பாங்கில் திட்டங்களை உருவாக்கி சிலருக்குக் கொடுப்பது என்பது இழப்புகளை உதாசீனப்படுத்துகிறோம்! இது பற்றி ஆழச் சிந்தனை செய்வது வருங்கால வாழ்வின் தேவை! இழப்புகளை மதியாது அதை மிதித்தால் 'நின்று கொல்லும்' அதன் சீற்றத்துக்கு அடங்கா ஆனால் வேண்டியிருக்கும்!

போரினால் பாதிக்கப்பட்டு சிதைந்து போயிருந்த இலங்கைக்கு மேலும் அழிவைக் கொண்டு வந்த கடல் அலைகள் தேடற்கரிய வாய்ப்புகளையும் விட்டுச்சென்றன. இனம், மதம், மொழி என்ற வேறுபாடுகளை மறந்து ஒரு தாய் பிள்ளைகள் போல செயற்படக் கூடியதொரு சந்தர்ப்பமாக சுனாமி இழப்புக்களின் நிகழ்ச்சி அமைந்திருந்தது. உண்மையில் மக்கள் தனித்துவமான நமது பல அடையாளங்களையும் மறந்து மனிதாபிமானத்துடன் செயற்பட்டார்கள். பல்லாண்டு காலத்தின் பின் அன்றைய நாளில் மனிதம் தனது உயிர்த் துடிப்பை நிலைநாட்டியது. சிங்கள மக்களும் புலிப் போராளிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் உதவிக்கரம் நீட்டியதையும், புலிப்போராளிகள் பல சிங்களக் குடும்பங்களுக்குத் துன்பத்தை மறந்து தமது நெஞ்சில் வலிக்கிடக்கும் அர்ப்பணத்துக்கு எடுத்துக்காட்டாக உதவிபுரிந்ததையும் நாம் அறிவோம். அன்று இலங்கைத்தீவின் வரலாறு மெய்மறந்து மெய்சிலிர்த்து வெற்றிப்புன்னகை பூத்திருந்தது. ஆனால் சில நாட்களில் அரசியல் குறுக்கீட்டால் அது மனித நேய உறவுகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தது. புலிப்போராளிகள் தமது இயந்திரங்களைக் கொண்டு பல இடங்களில் சென்றடையாது திகைத்து நின்ற படையினருக்கு உதவி செய்ததும், பொலன்னறுவையிலிருந்து சிங்கள மக்கள் சமைத்த உணவையும் புதுப் புடவைகளையும் மட்டக்களப்புத் தமிழ் மக்களுக்கு எடுத்துச் சென்று உடன் பிறப்புக் கொள்கையை நிலைநாட்டியதும் வரலாறுபடைத்துவிட்ட பாடம். இலங்கை வரலாறு இருந்தும் இன்றும் சந்தர்ப்பம் முற்றாக நழுவிவிடவில்லை. இனங்கள் நடுவில் புரிந்துணர்வையும், மனிதத்தைப் போற்றும் பக்குவத்தையும், பாகுபாடற்ற புனர்வாழ்வுச் செயற்பாட்டு முறைகளையும் காண்பிக்க அருமையான வாய்ப்புக்கள் இன்றும் உள்ளன. நீதியுடன் கூடிய அமைதியே மக்கள் கூட்டு வாழ்க்கையின் அத்திவாரம். இவ்வமைதியை நிலைநாட்ட உழைப்பது மனிதத்தை அன்பு செய்யும் மக்களின் கடன்! களத்தில் இறங்கித் துணிவுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் நமது பணி!

நிறைவாக, அழிவையும் ஆக்கத்தையும் ஒன்றிணைத்து மீண்டும் எழுச்சியின் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் உடையவர்கள் நாம். சாம்பல் மேட்டிலிருந்து சரித்திரம் வியக்கும் கோபுரங்களைக் கட்டி எழுப்பும் ஆற்றல் நம்மிடம் உண்டு. இழப்புக்களைச் சந்தித்தவர்கள் நாம்! இன்னல்களுடன் வாழப்பழகியவர்கள் நாம்! இரத்தக் கண்ணீரைச் சிந்திய இதயத்தில் நம்பிக்கையின் ஒளியை ஏற்றி வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்பவர்கள் நாம்! அழிவில் நின்று ஆக்கங்கள் பல உருவாக்குவோம்! அலைகள் உடைத்த படகுகளும், கட்டிப் பிடித்து இழக்க விருக்கும் [illegible] விளையாட்டாக துள்ளி மகிழ்ந்த பட்டங்களும், வேரறுந்த மரங்களில் கிளையிட்ட கூடுகளும், வனத்தொகையின்றிக் காவிச் செல்லப்பட்ட உயிர்களும் நாம் கட்டியெழுப்பவிருக்கும் புது வாழ்வின் நம்பிக்கைச் சின்னங்களாக மாறட்டும்.

நீ. மரியசேவியர் அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பொங்கி வந்த சுனாமியின் வேலியைப்
புரட்ட ஓடத்தொடங்கினம், கண்முன்னே
தங்கை போயினள், மைத்துனன் போயினன்,
தாயுடன் மணல் மேடொன்றில் ஏறினேன்.
திங்கள் காலைஅச் செய்தி செவிப்புக
தெருவெலாம் புரண்டழுது புலம்பினேன்
எங்கள் ஆருயிர் - இரண்டு பராயத்தள்-
இமைகள் மூடி விறைத்துக் கிடந்தனள்!"

எழுபதின்மரைப் புதைகுழி இட்டு, மண்
இட்டு விண்ணை நோக்கி நிமிர்ந்து, கை
தொழுதவன்தனைக் கண்டபொழுதுளம்
சுக்குநூறாய் உடைந்ததிச் சோகந்தான்
அழுது தீர்வதோ! ஆறுதல் வார்த்தையால்
ஆறக்கூடிய புண்களோ! நாம் பெரும்
பழிசுமந்த தலைமுறையோ! இதைப்
பார்க்க நேர்ந்ததெப் பாவம் இயற்றியோ!

ஆர்த்தெழுந்தது ஆழநெடுங்கடல்;
அலை உயர்ந்து கரையை நெருங்கிநாம்
பார்த்திருக்கவோர் பனையளவாகவே
படையெடுத்தது; வீடு மதிலெல்லாம்
பேர்த்துடைத்தது வேலி விராய்களை
பிய்த்தெறிந்தது; பின்னும் அளவிலா
மூர்க்க மாய்த்தாய் தந்தையைப் பிள்ளையை
மோதி மோதி உயிர்கள் குடித்தது!

பார் அறிந்திலா அழிவையப் பேரலை
பண்ணி நின்ற பயங்கரத்தால் எங்கள்
ஊர்சிதைந்தது; தோணி வலையெலாம்
உருக்கு லைந்தன; நொடியில் குடும்பங்கள்
வேர் அறுந்து மடிந்து மறைந்தன;
விளைநிலங்களில் பிணங்கள் நிறைந்தன!
யார் கண் ணீரினை யார்தான் துடைப்பது?
யார் குழந்தையை யாரோ எடுப்பது?

மனைவி மக்கள் - இருவர் மறைந்திட
மாதம் பத்தே ஆன குழந்தையோ
கணவன் கைகளில்! நெற்றியில் கட்டுடன்
கண்கள் நீரைப் பெருக்கிட நிற்கிறான்!
கனவிலே வருங் காட்சியும் அல்ல, என்
கற்பனைதரு கவிதையும் அல்ல, நான்
நனவிலே தென் புலோலியில் கண்டது
ஞாபகத்தை விட்டகல மறுக்குது!

இந்த வாறு கொடுமை நிகழ்ந்தது
எண்ணிலாத உயிர்கள் பிரிந்தன
நொந்து போய்நடைப் பிணமாய்த் திரிந்துள
நோய் பிடித்தபல் லாயிரம் பேருள்
இந்து முஸ்லிம் புத்தர் கிறிஸ்தவர்
என்ற பேதம் கடந்து சுனாமிதான்
தந்தபாடம் படிக்கமுன் நிற்பமோ?
சரித்திரத்தை இந்நாடு படைக்குமோ?

சோ. பத்மநாதன்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



26.12.2004 ஆழிப் பேரடுக்கு அலைகளின் அகோரத் தாண்டவம்

பேராசிரியர் ரீ. மரியசேவியர் அடிகள்

மின்னொளியை முழங்காவில்

[illegible] [illegible] [illegible] [illegible] அநர்த்தங்களுக்கு முகங்கொடுத்த [illegible] [illegible] [illegible] [illegible] காலத்தில் முன்பு வான், கடல், [illegible] குண்டுகளினால் இடிந்திருந்த தமது இல்லங்களைத் திருத்தி மீண்டும் குடியமரத் தொடங்கின பலர். வெளியூர்களில் தற்போது வசிப்பவர்கள் விடுமுறை நாட்களில், [illegible] தமது சொந்த பந்தங்களைச் சந்திப்பதற்கும் இல்லங்களைச் சீர் செய்து அமைப்பதற்கும் வருவதும் [illegible] வழக்கம்.

சென்ற ஆண்டு மார்கழித் திங்கள் [illegible] விழாவிற்கு அடுத்தநாள் ஞாயிறு, கதை என்னும் இளைஞன் [illegible] [illegible] கொண்டாடுகின்ற தனது வீட்டிற்கு வந்திருந்தான். காலை 8.25 [illegible] தன் வீட்டு மண்டபத்தில் உரையாடிக் கொண்டிருந்தான். [illegible] வருவது எதுவென்று பார்க்க எழுந்து முற்படும் முன் [illegible].

[illegible] [illegible] கணத்திற்குள் வெள்ளத்தினால் தான் தள்ளப்பட்டுச் செல்லுமுன், தனது பெரியப்பா கடல் அலைகளால் தூக்கி எறியப்பட்டு [illegible] மோதி [illegible] அவனால் உள்ளே [illegible] முடிந்தது. நீர் [illegible] முடிந்து [illegible] [illegible] [illegible] [illegible] அவன் [illegible] [illegible] [illegible] இழுத்துவந்த ஓர் கடை [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] செய்வதறியாது [illegible] [illegible] [illegible] வெள்ளமோ அகர வேகத்தில் முன்னே பாய்ந்து [illegible] இறந்தும் மரங்களை வேருடன் பெயர்த்தும் [illegible] [illegible] வெள்ளம்! முன்னேயும் வெள்ளம்! [illegible] [illegible] [illegible] [illegible].

அவனுக்கு முன்னே சென்ற [illegible] [illegible] [illegible] [illegible] நோக்கிப் பாய்ந்து [illegible] [illegible] [illegible] பற்றிப்படியும் [illegible] தொங்கிய [illegible] [illegible] நின்ற பெண்கள், பிள்ளைகள் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பெண்கள், குழந்தைகளின் [illegible] அவன் நெஞ்சை உலுக்கி [illegible] [illegible] [illegible] அழச்செய்தன. வெள்ளத்தால் [illegible] சென்ற தனது பெரியப்பாவின் [illegible] உடலைப் [illegible] [illegible] அவனுக்கு ஒருவகை நிம்மதியை அளித்தது.

தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்ட [illegible] [illegible] [illegible] கிபிர் விமானங்கள் குண்டுவீச வருவதைப்போன்றதாக இருந்தது என்று கூறினான். அவனுக்கு அருகில் நின்ற வேறொரு இளைஞன், கடல் அலைகளில் மக்கள் [illegible] "[illegible]" [illegible] [illegible] [illegible] இருந்த [illegible] பட[illegible] [illegible] [illegible].

இத்தகைய [illegible] [illegible] 26-12-2004 பல்வேறு [illegible] [illegible].

"பேர் இரைச்சல் [illegible] [illegible] நான் [illegible] [illegible] முன்பு [illegible] [illegible] ஒரு [illegible] [illegible] [illegible] என்னுடைய [illegible] [illegible] [illegible] [illegible] பிடித்துக் கொண்டிருந்தேன். நான் இறக்கப் போகின்றேன் என்பதை உணர்ந்தேன்." இது தாயகத்தின் [illegible] [illegible] பாதிக்கப்பட்ட ஒருவர் கூறிய அனுபவ வெளிப்பாடு.

"நான் எனது குடும்பத்தினரைத் தேடத் தொடங்கினேன். ஆனால் [illegible] அசைவற்ற விகாரமான உடலங்களினூடே பெரியவர்கள், [illegible] குழந்தைகளினதும் - உடலங்களை [illegible] [illegible] [illegible] பார்த்தேன். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பார்த்தேன்." [illegible] [illegible] [illegible] குடும்பத் தலைவர் கூறியது.

"[illegible] [illegible] [illegible] [illegible] பார்த்திருக்கிறோம். ஆனால் [illegible] [illegible] [illegible] சீறிப்பாய்ந்து வருவதை யாரும் பார்த்ததும் இல்லை, கேட்டதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை.'' இது பாதிக்கப்பட்ட இன்னுமொரு இந்திய மகனின் மனப்பதிவு.

காலன் வந்த கோலம்

26-12-2004! இந்தோனேசியாவைச் சேர்ந்த சுமாத்ரா தீவுக்கு அண்மையில் 7.58 மணிக்கு பூமி அதிர்வொன்று ஏற்பட்டது. அதன் விளைவாக எழுந்த கடல் அலைகளில் காலன் பவனி வரத் தொடங்கினான். சொற்ப மணித்துளிகளில் அத்தீவில் ஆயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து, தாய்லாந்து, மலேசியா, பர்மா, பங்களாதேஷ் அலைகளின் அகோரத்தை அனுபவித்தன. இரண்டுமணி நேரத்திற்குள் இலங்கையும் இந்தியாவும் பேரழிவைச் சந்தித்தன. நாலுமணி நேரத்துள் மாலைதீவுகள் , ஏழு மணி நேரத்துள் சோமாலியா, எட்டு மணி நேரத்துள் செய்ஷல் தீவுகள், கெனியா, தன்சனியா என்ற நாடுகளும் பாதிக்கப்பட்டன. இவை அனைத்தும் இந்திய பெருங்கடலை ஒட்டிய நாடுகள். இவைகளுள் பெரும் உயிர் இழப்புக்கள் நிகழ்ந்த நாடுகள்: முறையே இந்தோனேசியா, இந்தியா, இலங்கை. ஆழிப் பேர் அடுக்கு அலைகளின் விளைவாக நெஞ்சை உருக்கும் காட்சிகளும் வார்த்தைகளால் வடிக்க முடியா நிகழ்ச்சிகளும் வரலாற்றில் பதிவாகின. ஊருக்குள் ஆழ நுழைந்து அதை உழுது சென்று அழித்தொழித்த முல்லைத்தீவு போன்ற நகரங்கள், வயல்வெளிகளுள் தூக்கி எறியப்பட்ட சின்னா பின்னமான வள்ளங்கள், அடித்தளத்துடன் பெயர்க்கப்பட்ட கட்டடங்கள், திருச்சிலைகளும், கோபுர முகப்புகளும் தவிர்ந்த மற்றவை அனைத்தும் இடிந்து, உடைந்து, நொறுங்கி நிற்கும் கோவில்கள், ஆலயங்கள், குழந்தைகளின் இறந்த உடல்களை முத்தமிட்டுக் கதறியழும் தாய் தந்தையர், கட்டட இடிபாடுகளுள் மீட்டு எடுக்கப்படும் உருக்குலைந்த உடல்கள், நூற்றுக்கணக்கில் நிலத்தில் அடுக்கப்பட்டிருக்கும் பிணக்குவியல்கள், எஞ்சிய உறவுகளைக் கட்டித்தழுவி ஆறுதல் அடையும் அன்னையரும் தந்தையரும் உற்றாரும் உறவினரும், குடும்பத்தில் அனைவரையும் அல்லது பலரை இழந்து பைத்தியம் பிடித்து அலையும் உருவங்கள், தமது உறவுகளின் புகைப்படங்களைக் கையில் ஏந்தி "இவர்களைக் கண்டீர்களா'' என்று கேட்டுப் புலம்பி அலையும் தனி மனிதர்கள்; பல நாட்கள் அணிந்து கசங்கிய ஆடைகளுடன் நலன்புரி நிலையங்களில் இடக்குமுடக்கெனப் படுத்துறங்கும் அகதிகள் கூட்டம்... கிழக்கில், கல்முனையில் நான்கு மாதக் குழந்தையொன்றை தம்முடையதென்று அழுது புலம்பும் தாயும், தந்தையும், முல்லைத்தீவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எழுபதுக்கும் மேற்பட்டோரின் நினைவைத்தாங்கி நிற்கும் உறவினரின் சோகம்... இப்படி உள்ளத்தை உறையவைக்கும் பல காட்சிகள்! இச் சோகக் கதைகள் ஒருபுறம்! மறுபுறம், ஆச்சரியமான நிகழ்ச்சிகளுக்கும் குறைவில்லை. தாங்கள் முன்பின் அறியாத ஓர் அற்புதத் தாய் தம்மிருவரையும் நீரில் தாங்கி, தரையில் இறக்கினாள் என்று வியப்புடன் கூறும் சிறுவர்கள் இருவர், இறந்தவர்களின் உடல்களை பற்றைகளுக்குள் தேடிச் சென்றபோது அங்கு அழுதபடி கிடந்த பெண் குழந்தையை தூக்கியெடுத்து, "அலை அரசி'' எனப் பெயர் சூட்டி அதனைத் தமது நலன்புரி நிலையத்தில் நாயகியாக்கி வலம்வரும் பெருந்தகையோர்!

> **இயற்கையால் விளையும் பெரும் விபத்துக்கள் அல்லது பேரழிவுகள் தரும் நிகழ்ச்சிகளுள் ஆழிப் பேர் அடுக்கு அலைகள் என்பதுதான் அடிக்கடி நிகழாதது; கரவாகச் செயற்படுவது. பெரிதாகப் புலப்படாத நீர் வீக்கத்துக்குள் ஒரு நீர்வாயுக் குண்டின் அபார சக்தியை உள்ளடக்கி நிற்பது.**

புதுச் சொல் பழம் பொருள்

இன்று பன்மொழிகளிலும் அடிக்கடி பயன்படுத்தப்படும் "சுனாமி'' என்னும் ஜப்பானிய மொழிச்சொல், சென்ற நூற்றாண்டின் அறுபதுகளில் ஆங்கில மொழிவழக்கிற்கு அது அறிமுகப்படுத்தப்பட்டது. ஜப்பானிய மொழியில் "சு'' என்பது துறைமுகம், "னாமி'' என்பது அலை. ஜப்பான் நாட்டின் கரையோரங்களில் பல துறைமுகங்கள் உள்ளன. அந்நாட்டில் பல எரிமலைகளும் உள்ளன. அடிக்கடி பூமி அதிர்வுகளும் நடக்கின்றன. எரிமலைகள் வெடிக்கும்போது அல்லது பூமி அதிர்வுகள் நிகழும் போது அந்நாட்டில் கடற்கரைப்பகுதிகளின் துறைமுகங்களை பேர் அலைகள் தாக்குகின்றன. இவ் அனுபவப் பின்னணியிலேதான் "சுனாமி'' என்னும் பெயர் உருவாகியது. பெருங்கடல் படுக்கையில் ஏற்படும் அதிர்வினால் கடல் அலைகள் உருவெடுக்கின்றன. அவை நீளமானதாயும் உயரமானதாயும் பாய்ந்து அடுக்கு அடுக்காக வரும் என "சுனாமி'' என்னும் சொல்லுக்கு ஆங்கில ஒக்ஸ்வொட் அகராதி விளக்கம் தருகிறது. தமிழில், ஆழிப்பேர் அடுக்கு அலைகள் என வழங்கலாம்.

இயற்கையால் விளையும் பெரும் விபத்துக்கள் அல்லது பேரழிவுகள் தரும் நிகழ்ச்சிகளுள் ஆழிப்பேர் அடுக்கு அலைகள் என்பதுதான் அடிக்கடி நிகழாதது; கரவாகச் செயற்படுவது. பெரிதாகப் புலப்படாத நீர் வீக்கத்துள் ஒரு நீர்வாயுக் குண்டின் அபார சக்தியை உள்ளடக்கி நிற்பது.

ஆழிப்பேர் அடுக்கு அலைகளைத் தோற்றுவிப்பன நிலநடுக்கங்கள் மட்டும் அன்று. நிலச்சரிவுகள், குறுங்கோள்களின் (ஒரு கிலோ மீற்றரிலிருந்து ஆயிரம் மீற்றர் நீளமுள்ள, செவ்வாய்க்கும் வியாழனுக்குமிடையே கோள்களுடனொத்துக் கதிரவனைச் சுற்றிச் செல்லும் இரும்புக் கற்பாறையிலான கோள்கள்) வீழ்ச்சி, எரிமலையின் குமுறல் போன்ற நிகழ்ச்சிகளாலும் அவை ஏற்படலாம்.

திறந்த கடற்பரப்பிலே இவ்வலைகள் மூன்று அடி உயர எழும்பி விரைந்து சென்றாலும், அலைகளின் உயர்வான பகுதி நூறு மைல் பரந்து பாயக்கூடியவையாயின் அதனைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும். ஒவ்வொரு அலையும் கரையை வந்தடையும் நேரம் ஐந்து மணித்துளிகளிலிருந்து தொண்ணூறு மணித்துளிகள் வரை நீடிக்கலாம். முதல் அலை கரையை அடைந்து திரும்பிச் செல்லும்போது, எதிர் நிற்கின்ற அனைத்தையும் தன்னுடன் அள்ளிச் செல்லும். மரங்களிலும் மற்றைய உயர் கட்டடங்களிலும் தொங்கி அல்லது தங்கி இருப்பவர்களை கடலுக்குள்ளிருந்து நூறு மீற்றருக்கு மேல் தரைக்குள் புகும் அலைகள் அதே வேகத்தில் கடலை நோக்கித் திரும்பி வரும்போது இழுத்துச்செல்லும். கடல் அலைகளின் மடிப்பு அவைகளின் மேல் நுனிக்கு முன்பதாகக் கரையை அடைந்தால், நீர் வற்றத் தொடங்கும். இக்காட்சி அழகானதாயும் வியப்புடையதாயும் இருக்கும். அதைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பதற்கும், வசதிய கடலின்அடியில் பவளப்பாறைகளையும் பவளக்கொடிகளையும், அழகிய கற்களையும் அள்ளிவந்து குவித்து விட்டுப் போனது. (26-12-2004 இன் போது தமிழகத்தின் மாமல்லபுரக் கடற்கரையில் முன்பு கடலுக்குள் மூழ்கிய கோவில் ஒன்றினையும் சில சிலைகளையும் பார்க்கக் கூடியதாக இருந்தது எனக் கூறப்படுகிறது). இது அச்சத்துக்குரிய ஒரு அடையாளம் (இதுபோல் இலங்கை திருகோணமலையிலும் நடந்தது)

சுனாமி அடுக்கு அலைகள் என்பது "கடல் உலைவுகள்" என ஆங்கிலத்தால் அழைக்கப்படும் கடல் நீரோட்டத்துக்கும் ஒரு வகையில் வேறுபட்டது. கடற்கரையிலிருந்து நோக்கும்போது இரண்டும் ஒரே விதமாக தோற்றமளிக்கலாம். அத்தோடு சுனாமி அடுக்கு அலைகளால் ஏற்படும் பாதிப்பு கடல் நீரோட்டத்திலும் நடைபெறுவதுண்டு. ஆனால் இவற்றுக்கிடையில் ஒரு அடிப்படை வேறுபாடு உண்டு. "கடல் உலைவுகள்" சந்திரனின் ஈர்ப்புச் சக்தியால் விளைவது. சுனாமி அடுக்கு அலைகள் நீளமானவை. ஒரு அலை மேல் முனைக்கும் அடுத்த அலை மேல்முனைக்கும் நூறு மைல் தூரம் இருக்கலாம். ஆழ்கடலில் அவை ஒரு சில அடிகள் உயரம் மட்டும் இருக்கலாம். ஆனால், கடலின் ஆழம் குறையத்தொடங்க, அலைகளின் வேகமும் குறைந்து, அலை உயரம் பெருகத் தொடங்கும். அப்போது அலைகள் கரையில் மோதி பெரும் அழிவை ஏற்படுத்தும்.

ஆழ்கடலில் சுனாமி அலையொன்று அடையும் போது, அது தன் வேகத்தைக் குறைத்து குறுகி, தனது அபார சக்தியை அதிக வேகத்துடன் வெளிப்படுத்தும். அது உயரமான அலைகளாக வரலாம். அல்லது மெல்ல மெல்ல உயர்ந்து கொண்டு சமவெளிபோலத் அலைகள் தோன்றலாம். சிலவேளை நூறு மீற்றர் உயரமான அலைகள் கரையிலிருந்து ஆயிரம் அடி தூரம் வரை செல்ல முடியும்.

இயற்கையின் இயல்பு

26-12-2004 சுமாத்ரா தீவில் இருந்து 150 கிலோமீற்றர் தூரத்தில் தென்மேற்கில் உள்ள இந்தியப் பெருங்கடலில் பூமிக்கடியில் 30 கிலோமீற்றர் ஆழத்தில் பூமி அதிர்வு நடந்த போது பூமியின் சுழற்சி ஒரு கணம் ஆட்டம் கண்டது. இரண்டு பாறைத் தட்டுக்களின் மோதலினால் தோன்றிய இடப்பெயர்ச்சி காரணமாக மணிக்கு 500 மைல் வேகத்தில் கடலின் மேற்பரப்பில் அலைகள் எழும்பின. மணிக்கு 500 மைல் வேகத்தில் செல்லும் அலைகளை உருவாக்கிய இவ்வலைகளின் வேகம் சக்திவாய்ந்ததாக இருந்தது என்றால் கற்பனைக்கு அப்பாற்பட்டிருந்து கொண்டிருந்த முக்கியமான அடையாளக் கருவியை பொருத்தியிருந்தால் நாடுகள் பலவற்றை எச்சரிக்கை செய்திருக்கலாம்.



இயற்கையின் இவ் "விளையாட்டை" புரிந்துகொள்ள ஒரு சில புவியியலாளர் தரவுகளை அறிந்திருப்பது அவசியம்.

பூமியின் மொத்தப் பரப்பளவில், 29 வீதம் நிலப் பரப்பாகவும், 71 வீதம் நீர்ப்பரப்பாகவும் அமைந்துள்ளது.

பூமியின் மேற்பகுதி புவியோடு என அழைக்கப்படும். இதன் தடிப்பு பத்து கிலோமீற்றரில் இருந்து நூறு கிலோமீற்றர் வரை உள்ளது. இது, பூமியின் மொத்த பொருள் அளவுத் தொகையில் ஒப்பிடும் போது ஒரு அப்பிள் பழத்தின் தோல் அளவு எனலாம் அறிஞர் கூறுவர்.

புவியோடு இரண்டு வகையானது: கண்ட ஓடு, சமுத்திர ஓடு. சமுத்திர ஓடு, ஏறத்தாழ ஏழு கிலோமீற்றர் அளவிலான தடிப்பினை உடைய சமுத்திர ஓடு. கண்ட ஓடு கண்டங்களையும், கடற்கரைகளையும் கொண்ட பாறைகளை உடையது.

புவியோட்டின் கீழே, பூமியின் மேற்பரப்பிலிருந்து கிட்டத்தட்ட 2900 கிலோமீற்றர் வரை ஊடுருவும் இடை மேலுறை அமைந்துள்ளது. 3472 கிலோமீற்றர் தடிப்புடைய கோளவடிவ கருவம் உட்பகுதியில் அமைந்திருக்கின்றன.

புவியோடு, கடலிலிருந்து தனித்தனியான ஒரு புதிர் போன்ற சமநிலை பேணும் வகையில் பொருத்தப்பட்டு அமைந்த கட்டமைப்புகளில் மிதக்கின்றன. ஆனால், புவியோடு பூமியின் ஏற்படும் அசைவுகளால் உந்தப்பட்டு சிலவேளைகளில் மேல் உயர்ந்தும், சிலவேளைகளில் மறைந்தும், தாழ்ந்தும் பிளவுற்றும் மெல்ல மெல்ல நகர்ந்து உடைகின்றன.

இன்று பரவும் புவியியலின் "தகட்டு நகர்வுக் கோட்பாடு" பல ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி புவியோடு ஆறு பெரும் கவசத் தகடுகளாகவும் பல சிறிய தகடுகளாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. இவை நகரும் இயல்புடையவை. சிலவேளை நேர் நேரில் ஒன்றோடு ஒன்று முட்டிமோதியும் (ஒன்றையொன்று தாக்குகின்றன). சில வேளை ஒன்று மேலும் அல்லது கீழும் நகர்ந்தும் (அசையும் கவசத்தகடுகள்). சிலவேளை எதிர் எதிர் திசைகளில் ஒன்றைவிட்டொன்று விலகியும் விலகும் கவசத் தகடுகள் செல்லும்.

பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியப் பெருங்கடலில் ஒன்றோடு ஒன்று முட்டி மோதிக் கொண்டிருந்த இந்திய கவசத் தகட்டோடும், பர்மா கவசத் தகட்டோடும் அசியும் கவசத் தகடுகளாக மாறின. உண்மையில் அவுஸ்திரேலியா அசைவில் செல்கின்ற பர்மா கவசத் தகட்டினுள் இந்திய கவச ஓடு பெருமளவு அமிழ்ந்து கொண்டிருந்த நிலையில், மேலே உயர்ந்து நின்ற கவச ஓடு அதிர்வாக கடலின் கீழ் கிட்டத்தட்ட ஆயிரம் மைல் நீளமான கடற்கீழ் முகடு ஒன்றாக அறுபது அடிகள் உயர எழுந்தது. அவை அப்பாலுக்கும் சுழன்றன. அதனால் பர்மா கவசத் தகட்டின் சமுத்திர ஓட்டில் 600 மைல் நீள துண்டாடப்பட்டுள்ளது என்கின்றனர் ஒரு சிலர். இக்கடைசியாகிய அசைவு கடலின் மேற்பரப்பைக் குலைத்து, அதைக் கீழே இழுத்து பேரலைகளை உண்டாக்கின்றது. அவை வட்டவட்டமாக கரைகளை நோக்கி விரைந்து செல்லும் அலைகளை உருவாக்குகின்றன.

மாறிய பூகோள அமைப்பு

பூமி அதிர்ச்சி ஏற்பட்ட வைப்பகுதியில், கடலின் ஆழ்கடலின் கீழ் காணப்படும் சமுத்திர ஓடு முகட்டிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பது அடிகள் வரை இடம் பெயர்ந்துள்ளது என ஆய்வாளர்கள் கணிப்பிட்டுள்ளனர். சுமாத்ரா தீவு தெற்கே நூறு அடிகள் நகர்ந்துள்ளது எனச் சிலர் கருதுகிறார்கள். மேலும், பூமி அதிர்ச்சியின் மையத்திலிருந்து நானூற்றி அறுபது மைல் தூரத்திலுள்ள தாய்லாந்து நாட்டின் புக்கெட் தீவு 3. 9 அங்குலமும், சிங்கப்பூர் 0. 8 அங்குலமும் நகர்ந்துள்ளன என அதே ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பர்மா நாடு நாற்பது அடிகள் உயர்ந்திருப்பதாகவும் கருதப்படுகிறது.

நம் தாயகத்திலும் வடமராட்சி, முல்லைத்தீவுக் கரையோர விளிம்புகளின் தோற்றம் மாறியுள்ளது என மக்கள் கூறுகின்றனர். இதில் உண்மை இருப்பதாகத் தெரிகிறது. மேலும் இந்தியப் பெருங்கடலின் வெப்ப நிலை ஒன்று தொடக்கம் 2.5 பாகை வரை குறைந்துள்ளதாகவும், கடலின் மேற்பரப்பில் மணிக்கு இருபது கிலோமீற்றர்களில் இருந்து காற்றின் வேகம் இப்பொழுது நாற்பது கிலோமீற்றர்களாக அதிகரித்துள்ளதாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும், கடல்நீர் ஓட்டத்திலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என மீனவர்கள் முறையிடுகின்றனர்.

பட்டகாலிலே படும்

அடுக்கு அலைகளாக சீறிவருவது கடல்நீர் மட்டுமல்ல, அதன்பின் அலைகள்போல் வரும் நோய் நொடிகளும் தான். காற்றிலும் நீரிலும் உள்ள கிருமிகள் பேரழிவை ஏற்படுத்தும் சக்தி உள்ளன. நோய்களை ஏற்படுத்தும் உயிர் வகைகள் உணவு செரிமான அடிக்குழாய்க்குள்ளும், இரத்தம் ஓடும் வழிகளுள்ளும், மூச்சுச் செல்லும் வழிகளுள்ளும், மாசுகள் உறைந்த நீர் வழியாக நுளம்பாலும் மனித உடற்தொடர்புகளாலும் உடலிற்குள் செல்லுகின்றன. தூய்மையான தண்ணீர், மனித கழிவுகளை சீராக அகற்றும் வழிமுறைகள், நல்ல மருத்துவ மனைகள் முதலியன சரிவர இல்லாத அல்லது இயங்காத நாடுகளில், இயல்பாகவே தொற்று நோய் பரவும் வாய்ப்பு அதிகம் என்றால், இயற்கை அழிவினால் சேதமடைந்த இடங்களில் வாழும் மக்களுக்கு எத்தகைய அவலம் காத்திருக்கும் எனக் கூறவேண்டிய அவசியமில்லை. வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் பரவலாம். வாந்தியினால் ஒரு நாளைக்கு இரண்டு கலன் நீர் உடலிலிருந்து வெளியேறுகிறது. இந் நோய்க்கிருமியின் பிடியிலிருந்து தப்புவது மிகவும் கடினம். ஒரு சில மணிநேரத்தில் இறக்க நேரிடலாம்.

வெள்ளப் பெருக்கெடுப்பு ஓய்ந்த பின் அங்கும் இங்கும் நீர்க் குட்டைகள் காணப்படும். அவைகள் மலேரியா நுளம்புகள் பெருக்கெடுப்பதற்கு சிறந்த தளமாகும். தொற்றுநோய்களைக் கொண்டு செல்லும் சிற்றுயிரினத்தின் மூலம் வாந்தி, டெங்குக் காய்ச்சல், தசைநார் வலி, குளிர் நடுக்கம் முதலிய நோய்கள் பரவும். குறிப்பாக, இச்சந்தர்ப்பங்களில் இரவும் பகலும் அடைப்பற்று வெளியே காலத்தைக் கழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாவதால், இந்நோய்கள் தொற்றும் ஆபத்து அதிகமாகிறது.

> ஆழமற்ற நீர்ப்பகுதியை அலையொன்று அடையும்போது அது தன் வேகத்தைக் குறைத்து, குறுகி, தனது அபார சக்தியை அதிமிக வேகத்துடன் செலுத்துகிறது. அது உயரமான அலைகளாக வரலாம். அல்லது மெல்லமெல்ல உத்வேகம்கொண்டு சமவெளியொத்த அலைகள் தோன்றலாம். சிலவேளை நூறு மீற்றர் உயரமான அலைகள் கரையிலிருந்து ஆயிரம் அடி தூரம் வரை செல்லமுடியும்.

இல்லிடமின்றி முட்டுமுட்டான கூடாரங்களில் அல்லது பள்ளிக்கூடங்களில் பெரும் எண்ணிக்கையில் பகலிரவைக் கழிக்க வேண்டியிருப்பதால், மூச்சுடன் சம்பந்தப்பட்ட நோய்களான நுரையீரற் காய்ச்சல், தொற்றுக் காய்ச்சல் முதலியவை ஏற்படும் அபாயம் பெரிதாக உள்ளது. மற்றவர்களுடன் முட்டிக் கொள்வதாலும், தும்மல், இருமல் போன்றவைகளாலும் இவ்வாபத்து பல முறை அதிகரிக்கும். மேற்கூறப்பட்ட வருத்தங்களால் அதிகமாகப் பாதிக்கப்படுவது குழந்தைகளும் முதியவர்களுமே!

உடற் பாதிப்புக்களையும் விட உள்ளப்பாதிப்புக்களுக்கு பலரும் ஆளாக்கப்படுகிறார்கள். அச்சமூட்டும் கொடூரக்கனவுகள், நினைவாற்றலிழப்பு, முயற்சிசெய்ய விருப்பமற்ற போக்கு, அடிக்கடி மனக்கண்முன் தோன்றும் பயங்கரப் படிமங்கள், இவைகளால் பெரிய பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள்.

பலருக்கு இயல்பு வாழ்விற்குத் திரும்புவது கடினமாக இருக்கும். பெற்றோர் இல்லாமலும் குடும்பத்தினர் இல்லாமலும், ஏன் குடியிருந்த கிராமமே இல்லாமலும் வாழவேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளானவர்கள் காலஞ் செல்லச் செல்ல மனநோயாளிகளாகவே மாற வாய்ப்புண்டு.

26-12-2004 இனால் அதிகம் பாதிக்கப்பட்டது சிறுவர்கள்தான் என்பது உறுதியாகிவிட்டது. ஆழிப் பேர் அடுக்கு அலைகள் தொட்டழித்த நாடுகளில் இறந்தோர் தொகையில் மூன்றில் ஒரு பகுதி சிறுவர்களே! பல சிறுவர்கள், குழந்தைகள் பெற்றோரையும் உறவினரையும் இழந்து தனிக்கட்டைகளாக மாறி, நல்லவர்களினதும், தீயவர்களினதும் கவனத்தை ஈர்த்துள்ளனர். அவர்களைக் களவாக எடுத்துச் செல்ல முனைபவர்களும், விலைபேசி வாங்க வருபவர்களும் கொஞ்சமல்ல. மறுபுறம், தத்தெடுத்து வளர்ப்பதற்கு முண்டியடித்துக் கொண்டும் பலர் நிற்கின்றனர்.

எட்டுவயதிலிருந்து பதினைந்து வயதிற்குள்ளான பிள்ளைகள் உளப்பாதிப்படைய பெரிதும் வாய்ப்பிருக்கிறது. இவர்களுக்கு ஓரளவில் என்ன நடந்தது என்று தெரியும். உளவள ஆற்றுகை செய்யும் பணிகளில் ஈடுபடுவோர் இவர்களுக்குத் தகுந்தமுறையில் உதவி செய்யாவிடில், பின்னொரு காலத்தில் இவர்களிற் பலரும் குடி, போதை உட்கொள்ளல் போன்ற பழக்கங்களுக்கு ஆளாக நேரிடும். கணவனை இழந்த பெண்களும் தனியே நின்று குடும்பச் சுமை அனைத்தையும் தாங்கும் பொறுப்பில் உள்ளவர்களும் உள நோயின் பல வடிவங்களுக்கு ஆளாகலாம். அனைத்தையும் இழந்தவர்கள் தற்கொலை செய்ய முனைவதும் இயல்பு. ஆக, இச்சூழ்நிலையில் உளவள ஆற்றுகைக்கு செல்வோரின் பணி மிகவும் தேவையாக அமையும்.

இன்னும் ஒரு சோகக்குறிப்பு: மீனவக்குடும்பங்களில் பெண்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர். மீனவப் பின்னணியில் குழந்தைகளின் வளர்ப்பு முழுவதும் வீட்டிலுள்ள தாயில் தங்கியுள்ளது. மனைவி இல்லாத இல்லங்களும் தாயில்லாப் பிள்ளைகளும் நம் நாட்டு மக்கள் நடுவில் அதிகரித்துள்ளது. இந் நிலை பல சிக்கல்களை நாளைக்கு உருவாக்கப் போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்த அலைகள்

நம் வாழ் நாட்களில் நிகழ்ந்த இயற்கை அனர்த்தம் சுனாமி 26-12-2004 உலகம் முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அதைத்தொடர்ந்து வரலாறு காணாத வகையில் நாடுகளும் அமைப்புகளும் தனிப்பட்டவர்களும் பொருளாயும் பொருளாகவும் அள்ளி இறைத்தனர். விமானங்கள், உலங்கு வானூர்திகள், கப்பல்கள் உணவு, மருந்து, உடுதுணை உள்ளிட்ட பல்வேறு நிவாரணப் பொருட்களுடனும், மருத்துவ, தொழில்நுட்ப நிபுணர்களுடனும் இலங்கைக்கு விரைந்தன. பல்வேறு [illegible] பணிகள் [illegible] காரணங்களுக்கு உடனடியாக [illegible] விரைந்தாலும், ஒரு சில நாடுகளின் செயற்பாடுகள் மனிதாபிமான இலக்கத்தின் அடிக்குறிப்புகளாக இல்லாமலும் [illegible] வாழ்கின்றது. அனர்த்தங்களில் அவலங்களில் உண்மையாய் பங்கெடுத்து உதவும் [illegible] நாடுகளாக [illegible] இன்றைய உலகிற்கு [illegible] விருந்தை [illegible] வேண்டி நிற்கிறது.

நடந்ததும் நடக்கவிருப்பதும்

26-12-2004 போல் ஒரு நிலநடுக்கம் [illegible] இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவின் [illegible] காரணமாக இந்தியப் பெருங்கடலில் 36,000 உயிர்களைக் காவுகொண்டது.

ஐரோப்பாவின் பெரும் ஆழிப்பேரலை அடிக்கு அலைகள் [illegible] 1755ல் நடந்தது. போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் அத்லாந்திக் பெருங்கடலில் ஏற்பட்ட நில அதிர்வின் விளைவான பேர் அலைகள் உருவாகி லிஸ்பன் நகரத்தைப் பெருத்த [illegible] அதைத்தொடர்ந்து ஏற்பட்ட தீயினாலும் மொத்த இறப்புக்களின் தொகை 60,000.

120,000 ஆண்டுகளுக்கு முன் ஹவாயத் தீவுகளில் [illegible] லோவா எரிமலையால் ஆழிப்பேர் அலைகள் உருவாகி, அதே தீவில் [illegible] நூறு மீற்றர் உயரத்துக்கு மண்ணையும் [illegible] கொண்டு சென்றிருக்கிறது. அதே [illegible] 7100 மட்டில் [illegible] ஏற்பட்டு [illegible] மண்ணரிப்பை உருவாக்கியுள்ளது என ஆய்வாளர் [illegible].

[illegible] கடல் படுக்கையில் பாரிய அளவிலான [illegible] காணப்படுகின்றன. இவைகள் [illegible] விளைவு [illegible] இருக்கவேண்டும். இரண்டு மில்லியன் (2000,000) ஆண்டுகளுக்கு முன் ஹவாயத் தீவுகளில் [illegible] நிகழ்ந்த மண் சரிவால் 40,000 கனசதுர கிலோமீற்றர் [illegible] கடலுக்குள் [illegible] ஆழிப்பேர் அலைகள் உருவாகின.

[illegible] விரைவில் எதிர்பார்க்கக் கூடிய நிகழ்வு [illegible] தீவில் [illegible] உண்டு [illegible]

1949 இல் [illegible] பாறைப்பொருட்கள், [illegible] வெளியே வேகமாக வெடித்தது ஒரு பெரிய [illegible] உருவாக்கியுள்ளது. இன்னும் ஒரு [illegible] இடம்பெறலாம் கிலோமீற்றர் கொண்ட 400 கன சதுர கிலோமீற்றர் [illegible] மணித்தியாலத்துக்கு [illegible] வேகத்தில் [illegible] அந் நிகழ்ச்சி கடல் அலைகளை உருவாக்கி [illegible] ஆபிரிக்கக் கண்டத்து கரையோரம் 25 மீற்றர் [illegible] அமெரிக்கக் கண்டக் கரைகளிலும் [illegible].

[illegible] 1.0 கிலோ மீற்றர் நீளமுடைய [illegible] வேகத்தில் [illegible] [illegible]. அது அமெரிக்க, ஐரோப்பிய [illegible] உயரமான அலைகளை [illegible] கருதுகின்றனர்.

வருமுன் காத்தல்

1946 ஆம் ஆண்டில் [illegible] அலாஸ்காவுக்கு அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கம், [illegible] நோக்குகளுக்கு [illegible] ஹவாயத் தீவின் கரையில் பேரழிவை ஏற்படுத்தியது. இதன் விளைவாக 1948 இல் பசிபிக் பசுபிக் ஆழிப்பேர் அலைகளின் முன் எச்சரிக்கை மையம் அத் தீவில் அமைக்கப்பட்டது. அம் மையத்தில் [illegible] செயற்பட்டுக் கொண்டிருந்த கருவிகளால் 2004 டிசம்பர் 26 ஆம் நாள் [illegible] மணியளவில் இந்தியப் பெருங்கடலில் சுமாத்ராவுக்கு [illegible] தீவுகளில் [illegible] இருந்த நில அதிர்வு மானியில் ஒரு [illegible] அதிர்வுகள் பதிவுசெய்யப்பட்டன. அதன் [illegible] 8.0 ஆக கணிப்பிடப்பட்டது.

அந்நில அதிர்வினால் பேரழிவு [illegible] பசிபிக் சமுத்திரக் கரையோரங்களுக்கு [illegible] பி.ப. 3.14 மணிக்கு அன்று கடமையிலிருந்து [illegible] ஆழிப்பேர் அலை [illegible] நிலைமையுடன் வழமையாக [illegible] அனுப்பப்பட்டது.

[illegible] நிலநடுக்கத்தின் அளவு 8.5 இலிருந்து 8.5 [illegible] அதிகமாகும் ஆழிப் பேர் [illegible] உணரப்பட்டு, [illegible] எச்சரிக்கை [illegible] ஆனால் அச் செய்திகளால் பயன் ஏதும் கிட்டவில்லை, அன்றைய வேளையில் ஆயிரக்கணக்கில் உயிர்கள் பறிபோய் விட்டன!

சென்ற ஆண்டு ஆடி - ஆவணி மாதங்களில் சுமாத்ராத் தீவின் மேற்குப் பகுதிக்கு ஆய்வாளர்கள் குழுவொன்று சென்று "[illegible]" [illegible] நிலநடுக்கம் [illegible] மக்களால் அதை [illegible] முடியவில்லை. 1797, 1833, [illegible] ஆண்டுகளில் [illegible] நிகழ்ச்சிகள் நடந்துள்ளன [illegible] அப்படி நடக்கும்போது [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு உயரமான இடங்களுக்கு மக்கள் ஓடிச்செல்ல வேண்டும் என்றும் தற்காப்புப் பரப்புரைகள் வழங்கப்பட்டன.

பூமி அதிர்வை எதிர்வு கூற முடியாதது போல, ஆழிப்பேர் அடுக்கு அலைகள் பற்றியும் முன்கூட்டியே அறிந்து கொள்ள முடியாது. நூற்றாண்டுக்கு ஒரு முறையாவது ஒரே இடத்தில் நிகழுமா என்ற கேள்விக்கு பதில் அளிப்பது முதலாக கடினம். அது எப்போது, எங்கே, எப்படி வரும் என்று எதிர்வு கூறுவது இன்றைய அறிவியலில் சுலபம் அன்று. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. அதற்குக் காரணமான நில அதிர்வையும்விட அதிக அழிப்பு சக்தியைக் கொண்டது. அதன் தாக்கத்தின் எல்லை பற்றிக் கூறுவதும் கடினம். எடுத்துக்காட்டாக, அண்மையில் நிகழ்ந்த கடல் அலைகளின் தாண்டவம், பூமி நடுக்க மையத்திலிருந்து 1600 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள இலங்கைத்தீவை இபபடித் தாக்கும் என்பதை எந்த விற்பன்னரும் எதிர்பார்க்கவில்லை.

நில அதிர்வின் விசையிலிருந்து மட்டும் ஆழிப் பேர் அடுக்கு அலைகள் பற்றி அறிந்துவிட முடியாது. கடற்கரையிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரமாக அலைகளின் உயரத்தை அளவிடக் கருவிகள் பசுபிக் கடலோரத்தில் பொருத்தப்பட்டுள்ளன. அத்தோடு கரையிலிருந்து வெகுதூரத்தில் அலைகளின் அழுக்கத்தைப் பதிவுசெய்யக்கூடிய நுட்பமான கருவிகள் கடல்படுக்கையில் வைக்கப்படுகின்றன. இவைகள் அனுப்பும் சமிக்கைகள் செய்மதிமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டு ஆய்வுசெய்யப்படும். இத்தகைய கருவிகள் இந்தியப் பெருங்கடலில் இயக்கப்பட்டிருப்பின், 26-12-2004 இத்துணைப் பேரழிவை விளைவித்திருக்காது.

பூமி அதிர்வை எதிர்வு கூறமுடியாததுபோல் ஆழிப் பேர் அடுக்கு அலைகள் பற்றியும் முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியாது. நூற்றாண்டுக்கு ஒருமுறையாவது ஒரே இடத்தில் நிகழுமா என்ற கேள்விக்குப் பதிலளிப்பது முதலாக கடினம். அது எப்போது, எங்கே, எப்படிவரும் என்று எதிர்வு கூறுவது இன்றைய அறிவியலில் சுலபம் அன்று.

விடுகதைகள் அல்ல

தமிழ் மக்களுடைய இலக்கிய ஏடுகளில் "கடல் கோள்" பற்றிக் கூறப்படுகிறது. "ப.'.றுளியாற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" (மதுரைக்காண்டம், காடுகாண்காதை) எனச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோ அடிகள் வரலாற்றுத் தரவொன்றை பதிவு செய்துள்ளார். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குமரிக் கண்டத்தில் நிகழ்ந்த கடற்கோள் நாற்பத்தொன்பது நாடுகளை அழித்ததாக வேனிற் காதைக்கு செய்த உரையில் குறிப்பிடுகிறார். தமிழ் மக்கள் நடுவில் இத்தகைய "பழங் கதைகள்" - பாரம்பரியங்கள் - நிலவி வந்தது என்பது தெளிவு. முதற் சங்கம் கூறும் தென்மதுரை, இடைச்சங்கத்துடன் தொடர்புடைய கபாடபுரம், மற்றும் காவிரிப் பூம்பட்டினம், கங்கை கொண்ட சோழேஸ்வரம் முதலிய இடங்கள் கடற்கோளினால் அழிக்கப்பட்டவை என்ற செய்திகளும், மற்றும், திருநூல் போன்ற சமய ஏடுகளில் வெள்ள அழிவுகள் பற்றி எழுதப்பட்ட பழங்கதைகளும் நிராகரிக்கப்படக் கூடியவையல்ல என்பதை 26-12-2004 எடுத்துக்காட்டுகிறது.

ஆழிப் பேர் அடுக்கு அலைகளால் இலங்கையில் ஏற்பட்ட மனித இழப்புக்கள், பாதிப்புகள்

மாவட்டம்	இறப்பு	காயம்	காணாமல் போனோர்	பாதிக்கப்பட்ட குடும்பங்கள்	இடம்பெயர்ந்த குடும்பங்கள்
யாழ்ப்பாணம்	2,640	1,647	540	13,652	12,631
கிளிநொச்சி	560	607	-	2,295	318
முல்லைத்தீவு	3,000	2,590	552	-	6,007
திருகோணமலை	1,078	-	337	-	27,746
மட்டக்களப்பு	2,840	2,375	1,033	63,717	12,494
அம்பாறை	10,436	120	-	38,624	-
அம்பாந்தோட்டை	4,500	361	963	16,994	3,334
மாத்தறை	1,342	6,652	613	20,675	3,268
காலி	4,216	313	554	23,174	1,472
களுத்துறை	256	400	155	6,905	6,899
கொழும்பு	79	4	12	9,647	5,290
கம்பஹா	6	3	5	6,827	5,258
புத்தளம்	4	1	3	232	18
மொத்தம்	30,957	15,196	5,644	202,742	84,735

(நடவடிக்கைகளுக்கான மத்திய நிலையத்தின் ஜனவரி 24, 2005 வரையிலான மதிப்பீட்டின்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



ந. சத்தியபாலன்

ஒரு சொல்தான் ஒரே ஒரு சொல்! கோபத்தின் உச்சத்தின் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] பக்கங்களைத் தைக்கிற [illegible] [illegible] இதயத்தை ஊடுருவி ஆழமும் தாண்டி என்னுள் எங்கேயோ குத்தி ....கிழித்து..........

சொட்டுச் சொட்டாய் விழுகிறது குருதி ....!

[illegible] [illegible] [illegible] நெருடுகின்ற இறைப்பு [illegible] [illegible] [illegible] கண்ணீர்.

இயந்திரமாய் என் வேலைகளிற் பொருந்திப் பிறக்கிறேன் வீடு சுத்தமாகிறது. துணிகள் கழுவப்பட்டுக் கொடியில் தொங்குகின்றன. சமையல் நடந்து முடிகிறது. இளங்காலை முதிர்ந்து ....வெயிலேறி........... மதியப் பொழுதுமாகி வெயிலோடு நீண்டு ....இன்னும் சில மணிப் பொழுதில் நீ வந்து விடுவாய்......... உனக்குத் தேநீர் தந்து ...... இரவு உணவு தயாரித்து ...... இயந்திரமாய் ஓடும் இருவர்க்கும் நிலைத்தான் போகிறது நம் காலமும்......... நினைவுகளின் தொடர்ச்சியை அடைந்து ...... ஏறும் அந்த வலி......... மறக்க இயலாத அந்த ஞாபகம் உன்னுடைய கோபம் படபடத்து நீ உதிர்த்த வார்த்தைகள் .....

சினம் பொங்க நீ சொன்ன அந்தச் சொல்.......

அதன் கொடூரம் ...

அதற்கு எல்லாம் காரணமான [illegible].......

இதற்கு ஆதாரக் கேள்விகள் காரணமான என் நிலை ......

எல்லாம் வரிசை வகுக்கின்றன மனதில்-

முன்னரே ஒருவரையொருவர் அறிந்திருந்த நீயும் நானும் திருமணத்தில் ஒன்றானதும்.....

ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள நேர்ந்த மகத்தான கணங்களில் இருவர்க்கிடையிலான ஒன்றிப்பின் எதிரொலிப்பில் பூக்கள் உதிர்ந்த [illegible] இருவரும் அறிதலில் - [illegible] தாண்டிய இரண்டு 'நான்'களின் கரைதலில் கலந்த நிறைவில் என் வாழ்வின் பேரர்த்தமே முழுமையுற்றதாய் நான் உணர்ந்ததும்...

நாம் மணம் செய்து ஒரு வருடம் பூர்த்தி ஆகும் முன்னரே குழந்தைகளைப் பற்றிய உன் எதிர்பார்ப்பை நான் புரிந்துகொண்டபோது என்னுள் கனிந்த தாய்மை உன்னையே ஒரு குழந்தையாக்கித் தன்னுள் ஏந்திக்கொண்டதும்...

வருஷங்கள் இரண்டு கடந்த பின்னரும் உன் கனவை நனவாக்கும் பாக்கியம் கிடைக்கத்தவறியதில் நாம் இருவரும் வைத்தியரைச் சென்றதும், பரிசோதித்துக் கொண்டதும்.... மனமொப்ப முடியாத பேரதிர்ச்சியாய் அந்த உண்மையை எதிர்கொள்ள இயலாமல் நான் மயங்கிச் சாய்ந்ததும்...

நீ உள்ளூர உடைந்து வதைபட்டதும்... நான் ஒரு போதுமே தாயாக முடியாதென்னும் உண்மை உன்னைவிட என்னையே அதிகம் துயருறுத்தும் என்று புரிந்த கணத்தில் நீ எனக்கொரு உறுதியான ஆதரவாய் ஆனதுவும்...

[illegible] எந்த விதத்திலும் [illegible] [illegible] பின்னரும் பதினெட்டு வருடங்களைத் தாண்டிய எமது தாம்பத்திய வாழ்வின் கனவுகளாய் இதயத்தில் நிலைகொண்டிருக்கையில்... எவ்வாறு உன்னால் அவ்விதம் பேசமுடிந்தது? நீ எப்படி அவ்விதம் சொன்னாய்?

நம் வாழ்க்கை இனி இப்படித்தான் எனத் தெளிவானபோது நாமிருவருமே அதை மனமொப்பி ஏற்றுக்கொண்டோமே... பட்டும் படாமலும் - சில சமயம் நேரிடையாகவும் என்னை மற்றவர்கள் குத்திக்காட்டியபோது என் மனதை ஆற்றியதே நீ தானே...

யாரோ ஒரு நண்பர் குழந்தையொன்றைத் தத்தெடுக்கும் யோசனையைத் தெரிவித்தபோது நீ அதை முற்றாக மறுத்தாய்...

எங்கள் வீடு உனது அண்ணனுடைய குழந்தைகளுக்கும் தங்கையின் குழந்தைக்கும் நந்தவனம் ஆனது.

மாமா என்றும் சித்தப்பா என்றும் ஓடிவரும் அந்தக் குழந்தைகளே நமது மகிழ்ச்சிக்கு ஆதாரமானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் மகிழ்ச்சி எமது மகிழ்ச்சியானது.

அவர்களின் துயரம் நமது துயரமானது.

உன் அண்ணனின் கடைசிப்பையன் கொடிய காய்ச்சலில் அந்தச் சிறியவயதில் உயிர்விட நேர்ந்தபோது, நாம் துடித்த துடிப்பை என்னவர்களும் உன்னவர்களும் கூட நன்கு அறிவார்களே...

இன்னார் பிள்ளை என்றில்லாமல் ஏற்றுச் சீராட்டிக் கொண்டாடி ஒரு தாயென மகிழ்ந்த என்னை மற்றெல் லோரையும் விட மேலாய் நீயே புரிந்து கொண்டவன் என மனம் நிறைந்திருந்தேனே... உனது சின்னச்சின்ன மகிழ்ச்சிகளையும் ரசனைகளையும் இனம் கண்டு காரியமாற்றினேனே... குழந்தைகளைப் போலவே நீ நேசிக்கின்ற உனது புத்தகங்களை... கலைப்பொருட்களை... ஓவியங்களை ஒவ்வொன்றாய்த் தெரிந்து தெரிந்து நீ வாங்கி வந்து பொருத்தமான இடம் பார்த்து அவற்றை வைத்துவிட்டு ஒவ்வொரு கோணத்தில் அதை ரசிப்பதை எத்தனை நாள் நான் ரசித்திருக்கிறேன்...

இப்படித்தானே அந்தக் கண்ணாடிப் பொம்மையும் வீட்டுக்கு வந்தது. தவழ்ந்த நிலையிலிருக்கிற அந்தவெளிர் நீலக்கண்ணாடிப் பொம்மை... அதில் உனக்குச் சொல்லி மாளாத ஆசை... நீ சொல்லிச் சொல்லி ரசித்து ரசித்து அதன்மேல் எனக்கும் ஒரு மயக்கம்...

உனது 'கிளாஸ்பேபி'யைத் துடைக்கிற போது நான் எவ்வளவு ஜாக்கிரதையாய் இருந்திருக்கிறேன் தெரியுமா...

நேற்றுக்கூட அப்படித்தான் வழக்கம்போல கூட்டிமுடித்துத் தூசிதுடைத்து முடிந்து நிமிர்ந்தபோது ஜதீஷ் வந்தான். உனது தங்கையின் கடைசிமகன் எங்கள் யாவரினதும் செல்லக்குழந்தை. பத்து வயது - பால்முகம். அழகாய் விரியும் விழிகளின் எழில் மனசள்ளும்.

"எனக்கு இண்டைக்கு ஸ்கூல் லீவு... அத்தை வீட்ட போறனெண்டு சொல்லிப்போட்டு வந்தனான்..."

"அண்ணாமார் அக்கா எல்லாம் ஸ்கூல் போட்டினமோ...!"

"ஓ... எல்லோரும் போட்டினம். அவையள் பெரியவகுப்புத்தானே... எனக்குத்தான் நேற்று ஸ்போட்ஸ் நடந்ததால இண்டைக்கு லீவு..."

"குஞ்சு ஒண்டிலையும் பங்கு பற்றேல்லையோ?"

"நான் லோங்ஜம்ப் செய்தனான்... 'பான்சி ட்றெஸ்பரேட்'டிலும் இருந்தனான்... ஜம்பில் நான்தான் முதல். பான்சிட்றெஸ் கிடைக்கேல்ல..."

இதைச் சொல்லுகையில் அவன்முகம் வாடக்காண்பதே சகிக்கவில்லை. பேச்சை மாற்றினேன்.

"அண்ணா ஆக்களும் அக்காவும் வந்தவையளோ ஸ்போட்ஸ் பாக்க...?"

"ஓ...அம்மாவும் வந்தவ..."

நான் சமையலில் இறங்க அவன் தன்பாட்டில் ஏதோ விளையாடப் போய்விட்டான்.

குழந்தைகளைப்போலவே நீ நேசிக்கின்ற உனது புத்தகங்களை... கலைப் பொருட்களை... ஓவியங்களை ஒவ்வொன்றாய் தெரிந்து தெரிந்து நீ வாங்கிவந்து பொருத்தமான இடம் பார்த்து அவற்றை வைத்துவிட்டு ஒவ்வொரு கோணத்தில் அதை ரசிப்பதை எத்தனைநாள் நான் ரசித்திருக்கிறேன்....

இடையில் அவனுக்குப் பிடித்தமான மைலோவில் கூல்ட்ரிங் தயாரித்துவிட்டுக் குடிக்க அழைத்தேன்.

சந்தோஷத்தோடு இருகையாலும் கோப்பையை வாங்கி ரசித்து ரசித்துக் குடித்தான். சந்தோஷத்தில் ஒளிர்ந்த அவனது முகத்தின் பிரமையில் மயங்கினேன். மனசு கனிய அவனது தலையை வருடிக்கொடுத்தேன்.

இந்த நிறைவுகளை நாடித்தான் ஒரு பெண் தாய்மைப் பேற்றுக்கு ஏங்குகிறாளா? பிள்ளையின் குழைவில் பரிவு தேடலில் மெத்தென்ற அதன் மென்மையில் மனசும் உடலும் பொங்க உள்ளூர ஏதோ பெருகிநிறைகிறதே... என்ன அது...?

நான் சமையல் காரியங்களில் மீண்டும் இறங்கினேன். அவன் வெளியே விளையாடப் போனான். கைகள் காரியத்தில் ஈடுபட்டபடி இருந்தபோதும் மனசு அவனிடமிருந்தது. செல்லம் கொஞ்சுகிற அவனது குரல் காதில் ஒலித்துக்கொண்டு இருந்தது.

எதிர்பாராத ஒரு கணத்தில் என் மனதின் லயிப்பைச் சிதறடிப்பதாய் வெளியே 'சிலீர்' என ஒரு சத்தம். ஏதோ ஒன்று விழுந்து சிதறியதுபோல்... நான் வெளியே ஓடினேன். குழந்தைக்குத்தான் ஏதும் ஆகிவிட்டதோ எனப் பதறியது மனசு. வெளிமண்டபத்தில் ஜதீஷ் இருந்து விளையாடிய இடத்துக்குப் போனபோது அவன் இல்லை. ஜதீஷ்... என்று அழைத்தபடி திரும்புகையில் புத்தக அடுக்குகளின் அருகே... கீழே விழுந்து சுக்கல் சுக்கலாய்ச் சிதறியிருந்தது உனது பிரியத்தக்குரிய கண்ணாடிப் பொம்மை! சிதறல்களுக்கு நடுவே திகைப்பிலும் பயத்திலும் உறைந்தவனாக ஜதீஷ்.

"என்ர கடவுளே... இதென்ன நடந்தது...?" சிலகணநேரங்கள் என்னால் தொடர்ந்து எதுவும் பேசமுடியவில்லை.

குழந்தை கண்ணாடி உடைவுகளுக்கு நடுவே நின்று கொண்டிருக்கிறான் என்ற விஷயம் அறிவில் உறைக்க சிறிது நேரமாயிற்று...

"கவனமாய் முதலில் இஞ்சால வாராசா பிசுங்கான் காலில குத்தப்போகுது..."

முன்புறமாக அந்த உடைசல்களைத் தாண்டி வந்தவன் தலைகுனிந்தபடி நின்றான்.

"என்ன நடந்தது?"

"சும்மா தூக்கிப் பாப்பமெண்டு எடுத்தன் வழுக்கிக் கீழே விழுந்திட்டுது..."

எனக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை. கோபத்தைவிட ஏற்பட்ட கவலை என்னை ஏதும் பேசவிடவில்லை. வெறும் அலங்காரப் பொருள்தானே என அலட்சியம் செய்துவிடவும் முடியவில்லை.

"நீபோய் ஒரு இடத்தில இரு ராசா அத்தை எல்லாத்தையும் கூட்டி அள்ளிப்போட்டு வாறன்"

குனிந்திருந்து எல்லா வற்றையும் கூட்டி அள்ளியபோது ஏனோ என் துக்கம் உடைத்துக் கொண்டது. நான் கண்ணீர் பெருக்கியது ஜதீஷைத் திகைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்க வேண்டும்.

அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தும் பின் வளவுக்கு விரைந்தேன்.

என் சிந்தனை இப்போது உடைந்துபோன அந்தப்பொருளை விடவும் ஜதீசைப் பற்றியதாய் இருந்தது.

குழந்தை குழம்பிப்போய் விட்டான் அவனை ஆறுதல்படுத்தவேண்டும். மனசில் வலி ஏற்படாதபடி அவனை இதமாய் நடத்திப் பழைய மகிழ்ச்சியான பையனாய் ஆக்கவேண்டும் என்றெல்லாம் எண்ணியபடி உள்ளே நுழைந்தேன்.

முன் விறாந்தையில் அவன் இல்லை. அறைகளில் இல்லை.

கோடிப்புறக் கிணற்றடியில் எங்கும் அவன் இல்லை. குழப்பத்தில் குழந்தை வீட்டுக்குத்தான் சென்றுவிட்டானோ என எண்ணியபடி அவசர அவசரமாக எனது தங்கையின் வீட்டிற்குச் சென்றேன்.

"வதனா......" எனது முதல் அழைப்புக்கே கதவு திறந்தது.

"ஜதீஸ் வந்திட்டானா" எனது குரலின் நடுக்கத்தை நானே உணர்ந்தேன்.

"ஓமோம் வந்திட்டான். அங்கை வீட்டை என்னத்தையோ தெரியாமல் போட்டு உடைச்சுப் போட்டேன் எண்டு சொல்லிப்போட்டுக் கிடந்து அழுகிறான் என்ன எதையெண்டு கேட்டாலும் சொல்லுறானில்லை"

சாதாரணமாகச் சொல்ல முனைந்தாலும் தயங்கி நொந்து போயிருப்பது தெரிந்தது. நடந்த விபரத்தைச் சொன்னேன்.

"பிள்ளையை நான் ஒரு சொல்கூட கோபமாகச் சொல்லயில்லை பிறகேன் அழுகிறான்?"

என்றபடி அவனிருக்கும் அறைக்குள் போனேன். "என்ன ஜதீசா பயந்திட்டியளோ...? அதுக்கென்ன ஒரு கொம்பை உடைஞ்சால் இன்னொண்டு வாங்கிறது — அது பரவாயில்லை — நீங்கள் அழவேண்டாம் வாங்கோ..."

அவன் தலையணையிலிருந்து முகத்தை நிமிர்த்தக்கூட இல்லை. எனக்குக் கஷ்டமாயிருந்தது.

"குழந்தைப் பிள்ளையளெண்டால் இப்படித்தான் இருக்கும். இந்த வீட்டில என்ர பிள்ளையள் உடைச்சது சாமானே... அதையெல்லாம் பெரிசெண்டு நினைச்சுப் பிள்ளையளை அழவைக்கிறதே..."

குற்றம் சாட்டும் தொனியில் வதனா பேசினாள்.

"ஐயோ நாங்கள் நான் அவனை ஒண்டும் சொல்லயில்லை"

நொந்துபோன குரலில் நான் முறையிட்டேன். "நீங்கள் ஒண்டும் சொல்லாமல் அவன் ஏன் இப்படி அழப்போறான்..."

"குழந்தையளைப் பற்றி எல்லாருக்கும் விளங்காது. சரிசரி விடுங்கோ. அதைப்போலை பல பொருளைத்தான் பெரிசெண்டு எடுக்கிறியள்... அது இடியுகை தானே..."

என்னை அலட்சியப்படுத்தி விளங்கியோ தொடங்கித்து என்னைப் புரிந்துகொள்ளவில்லை.

"அந்த அந்தநேரம் அவையள்தான் ஓடிப்போடிவாறது... உங்களுக்கு எங்க அதுகளின்ர அருமை விளங்கப்போகுது..."

அடுக்களையில் நின்றபடி நெருப்பாய் உமிழும் வதனாவின் வார்த்தை. பொறுக்க முடியாமல் சட்டென எழுந்து வீட்டுக்கு வந்தேன்.

நிமலன்... நீ மட்டும்தான் என்னை உனது கண்ணைப்போல இவளுக்குள் இருக்கிற மனசைப் புரிந்து கொள்வாய்.

உன் வரவுக்காகக் காத்திருந்தேன். நீ வந்தாய் — முகம் கழுவி ஓய்வெடுத்து தேநீர் குடிக்கும் வரை எப்படிப் பொறுமை காத்தேன் என்பதே எனக்குப் பெரிய ஆச்சரியமாயிருந்தது.

வழமைக்கு மாறாய் நீயும் மௌனமாயிருந்தாய். களைப்பாயிருக்கும் என எண்ணினேன். உனது ஆசைக்குரிய பொருள் உடைந்து விட்டதை அறிந்தால் நீ எப்படி நடந்து கொள்வாயோ என எனக்குள்ளும் அச்சம் பரவியிருந்தாலும் மெல்ல மெல்ல நான் விஷயத்தை ஆரம்பித்தேன்.

"எங்கட கண்ணாடிப் பூச்சாடியை இன்னைக்கு உடைஞ்சு போச்சு..."

"ஓமோம் அறிஞ்சனான். அது எல்லாம் போகில சொன்னவள்"

"ஓ... எல்லாம் அறிந்துதான் மௌனமாய் இருந்தாயா...?"

"அதென் ஒரு சின்ன விஷயத்துக்கு ஒருவரை நோகப்பண்ணினாய்...?"

"கண்ணாடிச் சாமானெண்டால் உடையத்தானே செய்யும்... ஒரு நட்டத்துக்காக குழந்தையின்ர மென்மையான மனத்தை நோகப் பண்ணலாமா?"

நான் திகைத்துப் போனேன்.

"அவனை நான் ஒரு சொல்கூட கோபமாச் சொல்லேல்லை. உடைஞ்ச துக்கத்தில — உங்கட ஆசைப்பொருள் எண்டு நான் எனக்குள்ள கலங்கினேனே தவிரப் பிள்ளையை ஒண்டும் சொல்லயில்லை"

> வழமைக்கு மாறாய் நீயும் மௌனமாய் இருந்தாய். களைப்பாய் இருக்குமென எண்ணினேன். உனது ஆசைக்குரிய பொருள் உடைந்துவிட்டதை அறிந்தால் நீ எப்படி நடந்துகொள்வாயோ என எனக்குள்ளும் அச்சம் பரவியது.

"ஒண்டும் சொல்லாமல் தேடுவாலோ பிள்ளை அழுதுகொண்டு ஓடிப்போகுது .... அதுசரி ...... நீ பிள்ளையில்லாத பெண் உனக்கு அதுகளின்ர இயல்புகள் விளங்க ஏலாதுதான்......"

ஓ.... ஏன் ஏன் இப்படி தெறிக்கின்றன சொற்கள். தங்கை சொன்ன சொல்லை நம்ப முடிந்த உனக்கு எனது நியாயம் பொய்யாய்ப் படுகிறதா.....?

நான் மௌனமானேன் — பதிலே பேசமுடியவில்லை. எனக்குள் ஏதோ உடைந்து சிதைந்து போல போலவென உதிர்வதாய்...... எவ்வளவு நேரம் நாமிருவரும் மௌனமாய் இருந்தோமோ ...... ஞாபகமில்லை. சாப்பிட அழைத்தேன். பசியில்லை என்றாய். வேலைப் பயணக் களைப்பு படுக்கவேண்டுமென்று கொண்டுவந்து வைத்த பாலும் பாத்திரத்தோடு அப்படியே இருந்தது.

இருவருமே கலந்து பேசாமலே கட்டிலில் கிடந்தோம். எவ்வளவு நேரம் அழுதிருப்பேனோ தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation,
noolaham.org | aavanaham.org

உறங்கிப்போகும் வேளையில் என்னிடம் வந்தாய்.

கோபத்தில் நோகப்பண்ணி விட்டதாக மன்னிப்புக் கேட்டாய். இதமாய்ப் பேசினாய். கெஞ்சினாய். கொஞ்சினாய். விடிகாலைப் பொழுதில் இருவரும் உறங்கிப் போனோம். விழித்தபோது நன்றாய் விடிந்திருந்தது.

ஏதும் நடக்காத மாதிரி சகஜமாய்ப் பேசினாய். பதிலுக்கு நானும் ஏதோ பேசினேன். குளித்தாய். சாப்பிட்டாய். புறப்பட்டாய்.

இதோ பகல் கழிந்து மாலை சூழ்கிறது இனி நீ வருவாய் கணவனும் மனைவியுமாய் நம் வாழ்வு தொடரும். மாலை இரவாகும் – இரவு விடியும் – பகல் வளர்ந்து மாலை கவிந்து பின்னர் இருளும் விடியும்.....!

கடல் வரைந்த ஓவியம்

யாழ். திருமறைக் கலாமன்ற ஓவியக் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் **கடல் வரைந்த ஓவியம்** என்ற ஓவியக் கண்காட்சி ஏப்ரல் மாதம், 18 - 27 ஆம் திகதி வரை நாட்டின் பலபகுதிகளிலும் நடத்தப்படவுள்ளது.

டிசம்பர் 26, 2004 இல் உலகை உலுக்கிய கடற்கோள் அனர்த்தம், ஓவியக் கலைவட்ட இளம் ஓவியர்களின் மனங்களில் ஏற்படுத்திய தாக்கங்களை வெளிப்படுத்துவதாகவும், பேரலைகளால் பெயர்க்கப்பட்ட எங்கள் தாயகம் அழிவுகளுக்குள்ளும் காண்பிக்கும் அழகிய தோற்றங்களை வெளிப்படுத்துவதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, ஏனையவர்களுக்கும் புதிய நம்பிக்கையை வழங்கத்தக்கதாகவும் இக் கண்காட்சி அமையவுள்ளது.

18 ஆம் திகதி கொழும்பிலும், 21 ஆம் திகதி மட்டக்களப்பிலும், 23 ஆம் திகதி வவுனியாவிலும், 26, 27 இல் திருகோணமலையிலும் இக்கண்காட்சி இடம்பெறவுள்ளது

இந்தியாவில் கத்தோலிக்க மக்களின் பிரசித்திபெற்ற திருத்தலமாக இருப்பது நாகபட்டினம் மாவட்டத்தின் வேளை நகரில் (வேளாங்கண்ணி நகர்) உள்ள புனித ஆரோக்கிய அன்னையின் திருத்தலமாகும். வேளாங்கண்ணி மாதாவின் புதுமை களுக்குப் பேர்போன இப் புண்ணிய பூமியில் 1771 ஆம் ஆண்டில் இத் திருத்தலம் அமைக்கப் பட்டது. அன்றிலிருந்து அன்னையின் தரிசனத்திற்காகவும், அவள் மூலமாகப் பெற்ற ஆயிரமாயிரம் நன்மைகளுக்கு நன்றி சொல்லவும், தாங்கள் கேட்கும் வரங்களை நிச்சயம் பெறமுடியும் என்ற நம்பிக்கையிலும் கோடிக்கணக்கான யாத்திரிகர்கள் இத் திருத்தலம் நோக்கிச் செல்வது வழமை.

இந்திய மக்களுக்கு மட்டுமல்ல, இலங்கை மற்றும் பிறநாடுகளில் இருந்து இந்தியா செல்லும் மக்களும் இன, மத, மொழி பேதங்களைக் கடந்து இந்திய மண்ணில் தவறாது தரிசித்து வருவது இவ் அன்னையின் திருத்தலமாகும். இங்கு வரும் மக்களில் 60%க்கு மேலானோர் பிறமதங்களைச் சேர்ந்தோர் என்னும் அளவுக்கு அனைத்து மதங்களும் சங்கமிக்கும், மத ஒற்றுமைக்கே வழி சமைக்கும் இடமாக இத்திருத்தலம் விளங்குகின்றது.

தினசரி பல திருப்பலிகள் இங்கு நடந்தேறும். அண்ணளவாக 3000 வரையிலான மக்கள் தினமும் இங்கு வந்து செல்வார்கள். வருடத்தின் ஒவ்வொரு நாளுமே திருவிழா நாள் போன்றே இருக்கும்.

இத்தனை பெருமைகளையும், சிறப்புக்களையும் சுமந்துநின்ற இத் திருத்தலம் கடந்த டிசம்பர் 26 இற்குப் பின்னர் சோகத்தில் உறைந்து போய்க்கிடக்கும் காட்சி மனதை நெருட வைக்கிறது. அன்றைய நாளில் தெற்காசிய நாடுகளை கோரமாகத் தாக்கி பல இலட்சம் உயிர்களைக் காவுகொண்ட ஆழிப்பேரலைக்கு இந்தியாவில், மிக மோசமாக முகம்கொடுத்த பகுதியாக இத்திருத் தலம் அமைந்திருக்கும் நாகபட்டினம் மாவட்டமே அமைந்தது. பேரலைகளின் தாக்கத்திலிருந்து இத்திருத்தலம் காக்கப்பட்டபோதிலும் அதனைச் சூழ்ந்து வாழ்ந்த மக்களை ஆயிரக்கணக்கில் பேரலைகள் பலியெடுத்துச் சென்று விட்டன. நாகபட்டினம் மாவட்டத்தில் மட்டும் 1867 ஆண்கள், 2388 பெண்கள், 879 சிறுவர்கள், 866 சிறுமிகள் அலைகளின் கோரத்தாக்குதலுக்கு இரையாகிப் போனார்கள். இதில் 1000 இற்கு மேலானோர் ஆலயத்திற்கு வந்த பக்தர்கள் என அங்கு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

பேரலைகளின் வெறியாட்டத்திற்குப் பின் புதுவருடத் தினத்திலிருந்து வழிபாடுகள் அங்கு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மக்கள் வரவு மிகக் குறைவாகவே இன்று வரை காணப்படுகின்றது. பேரலை ஏற்படுத்திய அதிர்ச்சியில் இருந்து மக்கள் இன்னமும் விடுபட முடியாதவர்களாய் இருப்பது இதற்கு ஒரு காரணம்.

ஆக, வேளாங்கண்ணி தன் வரலாற்றில் கண்டிராத வெறுமையில் இப்போது இருக்கிறது. இந்நிலை மாறி மீண்டும் முன்னைய நிலையை அடையவேண்டும் என்பதே அனைவரதும் ஏக்கமாக உள்ளது. அங்கு மட்டுமல்ல இங்கு எம தாயகத்திலும், எங்குமே அலைகளின் வஞ்சகத்திற்கு உறவுகளைக் கொடுத்து விட்டு கண்ணீரோடு வாழும் இலட்சக்கணக்கான மக்களின் துயர் போக்கவும், வழமைநிலை விரைவில் வந்து சேரவும் ஆரோக்கியத் தாயே புதுமை செய்திட மாட்டாயா?

தார்மிகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரின் வன்முறையால் பாதிக்கப்பட்ட தனிப்பெண்களின் வாழ்வும் தனிப்பெரும் துயரங்களும்

செல்வி திருச்சந்திரன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

"அவதூறுக்கு ஆளாவதைப் பார்க்கிலும் அது மேல். ஆனால் எதிர்காலம் நல்லவராக இருக்க வேண்டும். என் பிள்ளைகளைத் தன் பிள்ளைகளாய்ப் பேணி வளர்க்க வேண்டும். குடிகாரனாய் இருக்கக்கூடாது".

திருமணங்கள் திருப்திகரமாய் அமைவதில்லை. வாழ்க்கையில் அநாவசியமாய் ஆபத்தை விலைக்கு வாங்க வேண்டுமா? இவ்வாறான எண்ணங்கள் அவர்களின் மனதில் வேரூன்றியுள்ளன. இருபத்தொரு பெண்கள் மறுமணம் செய்ய மறுப்புத் தெரிவித்தனர். தம் பிள்ளைகள் கொடுமைக்கு உள்ளாவார்கள் என்பதே பலரும் தம் மறுப்புக்குக் காட்டிய காரணம். மூன்று பேர் பின்வருமாறு சொன்னார்கள்.

"ஆண்கள் வேறொருவனுக்குப் பிறந்த பிள்ளைகளை விரும்புவதில்லை. அவர்களைத் துரத்தி விடுவார்கள்".

ஆறு பெண்கள், ஏழு வயதிற்கும் பதினைந்து வயதிற்கும் இடைப்பட்ட தம் பிள்ளைகள் வீட்டிலே வேறொரு தந்தை வந்து சேர்வதை விரும்பவில்லை என்று பலமுறை தெரிவித்ததாகச் சொன்னார்கள்.

"எனக்கு இன்னொரு அப்பா வேண்டாம். வேறொரு அப்பா வந்தால் அவனைக் கத்தியால் குத்துவேன். நீங்கள் கலியாணம் செய்யவேண்டாம்".

மூன்று சந்தர்ப்பங்களிலே இந்த வெறுப்பு வன்செயலாக வெடித்தது. "நான் அவனைக் குத்திக் கொல்லுவேன் துரத்தி அடிப்பேன்".

அம்மக்கள் இவ்வாறு தம் கருத்தை வெளியிட்டார்கள். அவர்களின் யோசனையை எவரும் கேட்கவில்லை. வீட்டிலே மற்றவர்கள் அதைப் பற்றிப் பேசிய சமயத்தில் அவர்கள் அறிந்து கொண்டார்கள்.

பத்துப் பெண்கள், தாங்கள் வயதுக்கு வந்த பெண்பிள்ளைகள் உள்ளபடியால் இரண்டாம் தாரத்தைப் பற்றிப் பேசுவது சமூகமுறைப்படி பிழையானதென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். எட்டுப் பெண்கள் திருமணத்தைப் பற்றி யோசிக்கும் நிலையில் தாம் இல்லையென்றும் தாம் கவலைப்படுவதற்கு வேறு பல பிரச்சினைகள் உண்டென்றும், வாழ்க்கையின் சந்தோசமான விசயங்களைப் பற்றி நினைக்கும் எண்ணம் தமக்கு இல்லையென்றும் சொன்னார்கள். இரண்டு பெண்கள் தம்மை மணஞ்செய்து கொள்வதற்கு ஆண்கள் முன்வந்த போதிலும் முடிவு செய்ய இயலாதிருக்கிறதென்றார்கள். காரணம், சரியான யோசனை சொல்ல அவர்களுக்கு நெருங்கிய உறவினர் எவரும் இல்லை. எல்லோரும் கொல்லப்பட்டோ, இடம் பெயர்ந்தோ பிரிந்து விட்டனர்.

அம்பாறைப் பெண்களின் பதில்களில் முக்கியமான அம்சம், கற்பு நெறி பற்றிப் பேசிய இரண்டு பேரைத் தவிர மற்றவர்கள், தாம் மறுமணஞ் செய்யாதிருப்பதற்கு நியாயபூர்வமான காரணங்களை முன்வைத்தனர் என்பதாகும். இதிலே மேலும் குறிப்பிடத்தக்க விடயம் பெரியவர்கள் அவர்களுக்கு மணஞ்செய்து வைக்க முன்வந்தார்கள் என்பதும், ஆண்கள் அவர்களை மணந்துகொள்ளத் தயாராய் இருந்தார்கள் என்பதுமாகும். இது திருகோணமலை நிலைமையிலும் மாறுபட்டதாகும். இந்த மாறுபாட்டுக்குக் கிழக்கு மாகாணத்தில் நிலவும் தாய்வழிப் பண்பாடு ஒரு காரணமென நாம் கொள்ளலாம்.

கடுமையான மனக்கவலை, பாரதூரமான பொறுப்புகள், வறுமை, வாழ்க்கையின் நெருக்கடிகள் ஆகியவற்றைச் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் இல்லையாயின் இப் பெண்களில் பெரும்பாலானவர்கள் மீண்டும் மணஞ் செய்திருப்பார்கள் என நாம் ஊகிக்கலாம். யுத்த நிலைமை, பயங்கரவாதம், வன்செயல்கள், குடும்பப் பொறுப்பைச் சுமக்கும் பெண்கள் எதிர்நோக்கும் அவலம் என்பனவும் இந்தப் பிரச்சினைக்கு மற்றுமொரு பரிமாணத்தை வழங்குகின்றன. இவை தொடர்பான ஆய்வு, பிள்ளைகள், பெண்கள் ஆகியோர் எதிர்நோக்கும் பன்மேறு தாக்கங்களை வெளிப்படுத்தியுள்ளன.

ஆயினும், மதச் சார்பான மங்கல வைபவங்களில் கைம்பெண்களை ஒதுக்கித் தள்ளி வைக்கும் விடயத்தைப் பொறுத்த வரையில் தமிழ்ப் பெண்களின் நிலைமையும், அனுபவங்களும் அம்பாறை, திருகோணமலை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் பெரும் ஒற்றுமையுடையதாகக் காணப்படுகிறது. இப் பெண்களை இழிவுபடுத்தும் வழக்கமும் உண்டு. விதவைகள் பூவும் பொட்டும்

> அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்தால் அத்தகைய பெண்கள் ஆண்களுக்குத் தம்மை விளம்பரப் படுத்துவதாகக் கணிக்கப் படுகின்றனர். ஒரு பெண்ணின் அனுபவம் மிகுந்த பரிதாபத்துக்குரிய தாகத் தோன்றியது. வெளியே போய் வந்தமைக்காக அப்பெண் அவதுறுக் குள்ளானாள்.

"இந்த நேரத்தில் எங்கே போகிறாள்? அவள் நடக்கும் கம்பீரத்தைப் பார். ஆண்களோடு அவளுக்கு என்ன பேச்சு? அவளுக்கு ஆண் பிள்ளைகளில் ஆசை போலும். ஆம்பிள்ளைகளை மயக்கப் பார்க்கிறாளோ.....? எனக்கு வெளியே திரிய மனமில்லை. இப்படியான அவதூறுகளை கேட்கும்போது பூமி பிளந்து என்னை விழுங்க மாட்டாதா? என்று நினைக்கிறேன்."

ஒரு சாபத்தோடு அந்தப் பெண் தன் கதையை முடித்தார்.

"நான் ஏன் துன்பப்பட வேண்டும். என்னை இப்படி வருத்துகிறவர்கள் கட்டாயம் கஷ்டப்படுவார்கள். நான் கடவுளிடம் மன்றாட முயற்சிக்கி றேன். அமைதியாக உட்கார்ந்து பிரார்த்தனை செய்தால் இப்படிச் சபிக்கும் எண்ணம் இல்லாமற் போகலாம். ஆனால் என்மனதில் அமைதியில்லை."

ஆண் துணையற்ற தனிப்பெண் என்னும் வகையிலே அவளின் பேச்சு, செயல், நடத்தை யாவும் கண்காணிக்கப்படுகின்றன. பொதுமக்களின் கண்ணும் கருத்தும் எந்நேரமும் அவள்மீது படிகின்றன. இவ்வாறு நடத்தப்படுவதால் அப்பெண்ணுக்கு ஏற்படும் மனத்துயர் அவளின் நடத்தையில் பொதுவாகவும் பிள்ளைகளை வளர்ப்பதில் குறிப்பாகவும் உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. தாம் கோபமாகவும் மனச் சஞ்சலத்துடனும் இருக்கும் வேளைகளில் பிள்ளைகளை திட்டித் தீர்ப்பதாக இப்பெண்கள் குறிப்பிட்டனர். தம் ஆத்திரத்தை பிள்ளைகள் மீது காட்டுவதே அவர்களுக்கு ஒரே வழி.

மறுமணம் தொடர்பான எண்ணப் போக்குகளை அதிகார அமைப்பின் பின்னணியில் வைத்து நோக்குதலும் வேண்டும். அத்துடன் சத்தியம், அறிவாற்றல் ஆகியன தொடர்பான உரையாடல்களுடன் அவற்றை இணைத்து நோக்கினால், அவை வல்லமையற்றோருக்குப் பாதகமாய் அமைந்திருப்பதைக் காணலாம்.

கலாசாரக் கோட்பாட்டினை முதன்மைப் படுத்தும் வகையிலே பெண்மை உருவகிக்கப்பட்டுள்ளமை, கருத்தொருமைப் பாடான சட்ட வரையறையினையும் ஒழுக்க விதிகளையும் பெண்களுக்கென வகுத்துள்ளன. பெண் தன் பாலுணர்ச்சியை கட்டுப்படுத்துதல் வேண்டுமென்பது இவ்வாறான கோட்பாட்டின் விளைவாகும். "என்வாழ்வில் ஒரு பெண்ணுக்கே இடமுண்டு" என ஆண் சொல்வதில்லை. இரண்டாந் தடவை, மூன்றாந் தடவை என அவன் மணஞ்செய்து கொள்ளலாம். அவனுக்கு அந்த அதிகாரமும் வல்லமையும் உண்டு. ஆண், வீரியம் மிக்கவன் என்பதால் அவனுடைய பாலுணர்ச்சி அடிக்கடி பூர்த்தியாகுதல் வேண்டும் என்னும் உண்மையின் அடிப்படையில் அவனுடைய ஒரு தலைப்பட்டசமான இச்செயல் இயல்பானதாகக் கொள்ளப்படுகிறது. பெண்ணோ சமுதாயத்தின் அங்கீகாரத்தைப் பெறும்பொருட்டு தன் பெண்மையைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இவ்விதமாகக் கற்பின் பெருமையையும் "உண்மையான பெண் என்னும் மாயையையும் அவள் நிலைநாட்டிக் கொள்கிறாள்."

திருகோணமலையைச் சேர்ந்த ஆறு சிங்களப் பெண்களும் அநேகமாக இத்தகைய கோட்பாட்டினை வெளிப்படுத்தினர். ஆயினும் அவர்கள் முன்வைத்த காரணங்களில் ஒரு வேறுபாட்டைக் கண்டோம். "பெண்ணின் வாழ்வில் ஒருவனுக்கே இடமுண்டு" என்று ஒருவரும் சொல்லவில்லை. மறுமணம் தொடர்பாக வெறுப்போ, மறுப்போ அவர்களின் பேச்சிலும் நடத்தையிலும் வெளிப்படவில்லை.

அவர்களின் மனப்போக்குக்கு வயதும் (20,49,42,40,27,29) ஒரு காரணமாய் அமைந்திருக்கலாம். நான்கு விதவையர் மறுமணம் பற்றிய எண்ணத்தை மறுத்தனர். தம் பிள்ளைகளின் நல்ல வாழ்வே தம் குறிக்கோள் என்றும், மறுமணம் பற்றிய சிந்தனையே தமக்குக் கிடையாதென்றும் சொன்னார்கள். ஐந்தாவது கைம்பெண் - அவளுக்கு வயது 40 - தன் கருத்தை விபரமாகச் சொல்ல முன்வந்தார்.

"ஐந்து வருட காலமாகக் காதலித்து அவரை மணந்து கொண்டேன். பதினொரு வருடம் அவரோடு சந்தோசமாக வாழ்ந்தேன். நாம் இருவரும் ஒருவரில் ஒருவர் அன்பு கொண்டிருந்தோம். ஒருவரை ஒருவர் மதித்தோம். இப்போது மீண்டும் மணஞ்செய்ய வேண்டுமென எனக்குத் தோன்றவில்லை." அவரின் தரித்திர நிலையும் அதனால் ஏற்பட்ட விரக்தி மனப்பான்மையும்கூட இவ்வாறான அக்கறையின்மையைத் தோற்று வித்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாரும் பல விதத்தில் ஒரே வகையான கலாசார மரபுகளைப் பின்பற்றும் ஒரு சமுதாயத்தினை மதிப்பிடுவதற்கு இந்த ஐந்து பெண்களின் கருத்துக்கள் போதுமானவையல்ல. சிங்கள மக்களின் கலாசார சமூகக் கருத்து நிலைகளை ஆதிசொற்றிய பெண்ணிய சிந்தனையில் பிராமணியச் செல்வாக்கு இடம் பெறாமை அவர்களின் மாறுபட்ட மனப்போக்குக்கு ஏதுவாயிருக்கலாம். கற்பு நெறி பற்றி அவர்களில் எவரும் ஆணித்தரமாகக் கருத்துத் தெரிவிக்கவில்லை.

கைம்மை தொடர்பான, கருத்தியல் சமூக அடிப்படையில் பல்வேறு இழப்புக்களுக்கு வழி வகுத்துள்ளது. பொருளாதார இழப்பு மற்றும் துணையும் தாபரிப்பும் அற்ற நிலைமை என்பன தவிர்ந்த ஏனைய துயரங்களையும் குடும்பத் தலைவிகளாக விளங்கும் கைம்பெண்கள் அனுபவித்து வருகிறார்கள். சமூகம் அவர்களை ஒதுக்கி வைப்பதன் காரணமாக சடங்குகள், கொண்டாட்டங்கள் போன்ற கலாசார வைபவங்களிற் பங்கு கொள்ளும் வாய்ப்பினை இழக்கிறார்கள். சமூகம் தங்களை ஒதுக்குகிறதென்ற எண்ணத்தில் இப்பெண்கள் தாங்களாகவே ஒதுங்கிக் கொள்கிறார்கள்.

கைம்மை தொடர்பாகச் சமுதாயம் வகுத்துள்ள ஒழுக்கநெறி ஒரு வகையான துறவு நிலையைத் தப்பானதென்பதை எமது ஆய்வு புலப்படுத்துகிறது. அகாலமாகக் கைம்மை அடைந்த பெண் தன் ஆசாபாசங்களை தன் புலனுணர்ச்சிகளை ஒறுத்து வாழ வேண்டுமென்ற சமுதாயம் எதிர்பார்க்கிறது.

"நான் கொண்டாட்டங்கள் சடங்குகள் ஆகியவற்றிற் கலந்து கொள்வதில்லை. என் அம்மாவை அனுப்புவேன்." அம்மா வயோதிப மாதாக இருந்தாலும் மங்கல்ய பாக்கியத்தோடு வாழ்வதால் சமுதாயத்தில் அவருக்கு ஓர் அந்தஸ்து உண்டு.

"அமங்கலி என்று மற்றவர்கள் என்னை ஒதுக்கி வைப்பதால் நான் நல்ல காரியங்களில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொள்கிறேன். இதுவே எனக்குப் பெரிய கவலை."

இது சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது என்ற கதைபோல பட்டுத்தெளிந்த ஒருவரின் அனுபவம். எனினும் அந்தப்பெண் மிக மனமுடைந்தவராகக் காணப்பட்டார்.

இந்த நிலைமைக்குச் சமுதாயமே காரணமாகும்.

"நல்ல காரியங்களில் நான் கலந்து கொள்கிறேன். ஆனால் தாலிகட்டுதலை கழிந்த பின்னரே போவேன். அப்படிப் போனால் மற்றவர்கள் என்னைக் கவனிக்கமாட்டார்கள்."

"நான் புருசனை இழந்தவள் என்பதால் நல்ல காரியங்கள் நடக்கும்போது முன்னால் நிற்பதில்லை. நடந்து முடிந்த மறுநாளே அவ்விடங்களுக்குப் போவேன். தாலியை இழந்த நான் அவர் முன் நிற்பது அழகல்ல. இதைவிட எனக்குப் பெரிய துக்கம்."

"நான் சுப வேளைகளையும் சுப காரியங்களையும் தவிர்த்துக் கொள்கிறேன். ஒதுங்கியே போவேன். மங்கல வைபவங்களை முற்றாக விலக்கிக் கொள்கிறேன். விதவையான என் சகோதரி இந்த மாதிரியான சமயங்களில் பட்ட அவமானத்தை நான் அறிவேன்."

விதவைகள் அமங்கலமானவர்கள், அதிர்ஷ்டம் கெட்டவர்கள் எனவும் கருதப்படுகிறார்கள். அவர்கள் ஒற்றை மரமாய் இருப்பதால் மற்றவர்களுக்குத் துர்ப்பாக்கியம் ஏற்படுத்துவர் என எண்ணப்படுகிறது. தமிழர்கள் இவ்வாழ்க்கை நிகழ்ச்சிகளை நல்லவை, கெட்டவை மங்கலம், அமங்கலம் என வகுத்துள்ளனர். வீடு குடிபுகுதல், பூப்பெய்துதல், திருமணம் என்பன சுபகாரியங்கள். இன்று பிறந்தநாள் வைபவங்களும் இவற்றுடன் சேர்ந்துள்ளன. இந்த வைபவங்களில் விதவைகள் பிரசன்னமளித்தல் அமங்கலமெனவும். சுப காரியங்களை நடத்துவோருக்குக் கெடுதல் உண்டாகுமெனவும் நம்பப்படுகிறது. எனவே விதவைகள் தாங்களாக ஒதுக்கப்படுகிறார்கள். அவர்களும் நிலைமையை உணர்ந்து தாமாக விலகிக்கொள்கிறார்கள். பார்க்கப்போனால் பாலுணர்ச்சி விடயத்தில் செயலற்றிருப்பதன் காரணமாக விதவைகள் அமங்கலிகள் எனக் கொள்ளப்படுகின்றனர். ஆனால் மறுபுறமாகப் பார்த்தால் பாலுணர்ச்சிக்கு வசப்படுதலையும் சமுதாயம் ஏற்றுக் கொள்வதில்லை. தவிரவும் பெண்களே தமக்கெனச் சில நெறிகளைக் கற்பின் பெயராலும் மனவுறுதியின் பெயராலும் கட்டுக்காத்து வருகிறார்கள். ஆணும் பெண்ணும் இணைந்த வாழ்வே முழுமை பெற்றது. ஆணில்லாப் பெண் அமங்கலி எனக்கொள்ளும் சமூகம் பெண்ணையிழந்த ஆணை அதே கண்ணோட்டத்தில் நோக்குவதில்லை.

கைம்பெண்களுக்கெனச் சமுதாயம் வரம்பிட்டபாங்கான கருத்தியலைக் கொண்டிருக்கிறது. அவர்கள் தம் பாலுணர்ச்சியையும் ஏனைய இன்பங்களையும் துறக்க வேண்டும். இதனை அவர்கள் தம் நடத்தை, நடையுடை பாவனை ஆகியன மூலம் வெளியுலகிற்குப் புலப்படுத்துதலும் வேண்டும். பாலுணர்ச்சியை அனுபவிக்க வாய்ப்பிழந்து வாழும் அவர்கள் ஒழுக்கமற்றவர்கள், கள்ளக் காதலில் ஈடுபடுவோர் என்றவாறான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாதலும் உண்டு. ஆகவே விதவையின் நடத்தை எந்நேரமும் கண்காணிக்கப் படுகிறது.

இந்தப் பெண்கள் இரு மடங்கு அல்லது மும்மடங்கான பளுவைத் தம்மீது ஏற்றுக் கொள்வதன் காரணமாக சமுதாயத் தவர்களுடன் ஊடாடக் கூடிப் பழகும்

சந்தர்ப்பங்கள் கிடைத்தல் அரிது. சமுதாயத்திலிருந்து ஒதுங்கி இருப்பதனால் உண்டாகும் இழப்புகள், உளவியற் பிரச்சினைகள்.

நான் குறிப்பிடும் உளவியற் பிரச்சினைகள் இப்பெண்களின் பேச்சு, அங்க அசைவுகள், முகபாவத்தினாலும், பெருமூச்சுக் களினாலும் வெளிப்படுத்திய உணர்வுகளைக் கூர்ந்து அவதானித்ததன் பயனாக அறிந்து கொண்டனவாகும். உண்மையில் அவர்களின் மௌனம்கூட பல உண்மைகளைப் புலப்படுத்தின. தம்வாழ்வில் ஏற்பட்ட துயரத்துக்குத் தாமே பொறுப்பாளிகள் என்னும் வகையில், சமுதாயம் தம்மீது பழி சுமத்துகிறது என்பதைப் பலர் உணர்ந்திருந்தார்கள். ஆயினும் தாமாகவும் சமுதாயத்தின் கட்டுப்பாடுகளுக்குப் பணிந்தும் தம்மை வருத்திக்கொள்கிறார்கள் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இப்பெண்கள் தம் உணர்வுகளையும், சமுதாயம் பற்றி தாம் கொண்டுள்ள கருத்துக்களையும் விளக்குதற்கு உபயோகிக்கும் சொற்றொடர்களும் நியாயங்களும் பெரும்பாலும் ஒரே தன்மையுடையவனாக அமைவதைக் காணலாம். எல்லோரும் அடிக்கடி பயன்படுத்தும் சொல் சமுதாயம் என்பதாகும்.

பெண்கள் அடிக்கடி பயன்படுத்தும் சொற்கள் சுமங்கலி, அமங்கலி என்பனவாயினும் அவர்களின் அனுபவங்களை நான்கு வகையாக வகுக்கலாம். தம் அமங்கலத் தன்மையை ஏற்றுக் கொள்ள மறுத்த இருபெண்களையும், அதனைப்பற்றி பேசாதுவிட்ட பத்துப் பெண்களையும் தவிர ஏனையோர் அனைவரும் தம் உணர்வுகளை வெகு தெளிவாக வெளிப்படுத்தினர்.

கணவனை இழந்த பெண் சுப காரியங்களில் முன்னால் நிற்பது, அவற்றில் பங்கு கொள்ளும்

இடைத்தங்கல் முகாம்களில் மகளிர்தின நிகழ்வுகள்

மார்ச் 08, அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு திருமறைக் கலாமன்ற மகளிர் அவையால் ஒழுங்கு செய்யப்பட்ட மகளிர் தின நிகழ்வுகள் இம்முறை ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இடருற்று மணற்காடு பகுதியில் இடைத்தங்கல் முகாங்களில் வாழும் மக்களுடன் இணைந்து, அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது.

இந் நிகழ்வுக்காக யாழ். திருமறைக் கலாமன்ற மகளிர் அவையுடன் இணைந்து, உரும்பிராய் திருமறைக் கலாமன்ற மகளிர் அவையினரும் மற்றும் யாழ். மன்ற இளைஞர் அவை, இளையோர் இசைப்பயிலக உறுப்பினர்களுமாக 75 பேர் வரையிலானோர் அன்றையதினம் காலையில் அப் பிரதேசத்திற்குச் சென்று மாலை வரை பல்வேறு நிகழ்வுகளை அப் பிரதேச மக்களுடன் இணைந்து நிகழ்த்தினார்கள்.

இதன்போது மகளிருக்கான சிந்தனைப் பகிர்வுகள், எழுச்சிப் பாடல்கள், பாரம்பரிய விளையாட்டுக்கள், கிராம மக்களுடன் இணைந்து வாசகங்கள் எழுதி காட்சிப்படுத்தல், விவாத அரங்கு, கவிதை மற்றும் குறுநாடக நிகழ்வுகள், என்பவற்றுடன் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், போட்டிகள் என்பனவும் இடம்பெற்றன. இவையனைத்தும் பாதிக்கப்பட்ட அம் மக்களுக்கு ஆறுதல் தரக்கூடியதாக அமைந்திருந்ததை அம் மக்கள் மூலமாகவே அறிந்துகொள்ள முடிந்தது. அன்றைய முழுநாளும் அக்கிராம மக்கள் இந்நிகழ்வுகளுடன் இணைந்து மகிழ்ந்திருந்தார்கள்.

இதேவேளை, ஏனைய பிரதேசங்களில் உள்ள திருமறைக் கலாமன்றங்களும் மகளிர் தின நிகழ்வுகளை சிறப்பாக நடத்தியிருந்தன. இளவாலை திருமறைக் கலாமன்றம், இளவாலை கன்னியர்மடம் ம. வி இல் பல்வேறு கலை நிகழ்வுகளுடன் மகளிர் தின நிகழ்வை நடத்தியிருந்தது.

இதேபோல் திருகோணமலை, மட்டக்களப்பு, மாவட்டங்களிலும் திருமறைக் கலாமன்றம் மகளிர் தின நிகழ்வுகளை நிகழ்த்தியிருந்தது. திருகோணமலையில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு உப்புவெளி, அலஸ்தோட்டம் முகாமில் தங்கியுள்ள மக்களுடன் மகளிர் தினத்தை மார்ச் 7, 8 ஆகிய திகதிகளில் திருகோணமலைத் திருமறைக் கலாமன்றம் கொண்டாடியது. போட்டிகள் கலை நிகழ்வுகள் என பல நிகழ்வுகள் இங்கு இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணப்பெண், மணவாளன், புதுமனை புகுவோர், பூப்படைந்த பெண் ஆகியோருக்கு அமங்கலமாய் அமைந்து விடலாம் என நம்பப்படுவதால் அத்தகைய சடங்குகளை நடத்துவோரும், பிறரும் தாலியும், பூவும் பொட்டும் சூடிய சுமங்கலிகளைத் தேடுதல் வழக்கம். அதாவது கணவனோடு வாழும் பெண்கள் சடங்கு செய்வோரின் நீடிய ஆயுளுக்கும் ஆனந்தத்திற்கும் சுப சகுனமாய் அமைவர் என நம்பப்படுகிறது. இந்தக் கௌரவம் கணவனை இழந்த பெண்களுக்கு மறுக்கப்படுகிறது. அத்துடன் அத்தகைய பெண்கள் சுபகாரியங்களில் பங்குகொள்ளலாகாது என்பதற்காகவும் சில சமயங்களில் கேவலமான முறையிலும் ஒதுக்கப்படுகின்றனர். சமய ஆசாரங்களும் சமூக நெறிகளும் இப்பெண்களை ஒதுக்கி வைப்பதன் காரணமாக அவர்கள் சுபகாரியங்கள் நடைபெறும் வேளைகளில் முன்னால் வராமல் ஒதுங்கிக் கொள்ளுதலை மரபாக்கியுள்ளனர். "நான் பின்வரிசையில் அமர்ந்து ஒதுங்கிக் கொள்வதை வழக்கமாகக் கொண்டுள்ளேன்" என்று ஒரு பெண் வாய்விட்டுச் சொன்னார்.

ஒதுங்கிக் கொள்ளுதல் எனும்போது மற்றவர்கள் தள்ளி இரு என்று சொல்வதற்கு இடம் வையாது தாமாகவே விலகுதலைக் குறிக்கிறது. அவர்களைப் பொறுத்தவரையில் இது அனுபவத்தால் கற்ற பாடமாகும்.

இந்தப் பெண்கள் ஏனைய பெயர்கள் பற்றியும் குறிப்பிட்டார்கள். கைம்பெண்கள்மீது கோபங்கொண்ட பிற பெண்கள் தம் வம்பு தும்புகளின்போதும், அவர்களுடன் சச்சரவு படும்போதும் கைம்மையைக் குத்திக்காட்டி அவமதிப்பார்கள்.

"நான் விதவையானதற்குக் காரணம் என்னுடைய அகங்காரமும் பொட்டுக் குணமுமே" என்று என் அயலவர் இப்பெண் சொன்னாள். "அவர்கள் என்னைப் பத்தினியான கைம்பெண் என்றும் அறுதலி என்றும் புருசனைத் தின்றவள் என்றும் குறிப்பார்கள்."

இவ்வாறு பரிகசிக்கப்படுவதாகக் கைம்பெண் ஒருவர் தெரிவித்தார்.

என் ஆய்வுக்குட்பட்டவர்களில் வயதில் இளையவர் இவரே. இந்த வசைச் சொற்கள் பேச்சு வழக்கிலே கையாளப்படுவன. அம்புபோல மனதைத் துளைக்க வல்லன. கைம்மை அடைந்தமைக்கு அப்பெண்ணே காரணம் என்று அச்சொற்கள் குறிக்கின்றன.

மற்றொரு பெண் பேச்சுக்குறித்த வார்த்தைகளைச் சொல்ல விரும்பவில்லை. சொல்வதால் மரியாதைக் குறைவாக இருக்குமென்று கருதினார். தன் மனதைப் புண்படுத்தும் வகையில் கதைப்பார்கள் என்று மட்டும் சொன்னார். அதற்கு மேல் விபரிக்க விரும்பவில்லை. ஆயினும் அவரின் முகபாவம் எவ்வளவு தூரம் மனம் வேதனைப்பட்டார் என்பதை புலப்படுத்தியது. அவருடைய மௌனம் அதைவிட உரத்து அழுதது. அதிஷ்டம் கெட்ட உன்னால்தான் உன் புருசன் செத்துப்போனான். உன் குலத்தை அழித்தவள். உன் கணவன் காணாமல் போனான். தற்கொலை செய்து கொண்டான். கைவிட்டுப் போனான். என்றவாறாக ஏனைய விதவைகள் பரிகசிக்கப்பட்டார்கள்.

ஒரு முறை ஒரு சிறுவன் என் காதில் விழும்படியாக "அது என் முன்னால் போய் நிக்குது" என்று கேட்டான்.

இவ்வாறாக கைம்பெண்ணானவள் காலக்கிரமத்தில் ஒரு சடப்பொருளாக மாறிவிடுகிறாள்.

சொல்லாலும் செயலாலும் அவர்கள் என்னைத் தள்ளி வைக்கிறார்கள். வேண்டாத பொருள்போல ஒதுக்கி விடுகிறார்கள். அவர்கள் என்னை அழைத்தாலும் நான் போவதில்லை. எனக்கு அங்கே வரவேற்பு இருக்காதென்று தெரியும். போனபிறகு துக்கப்படுவேன். அவர்களின் பேச்சும் நடத்தையும் குரூரமானவை.

ஆடை விடயத்திலும் விதவைகள் கட்டுப்பாட்டுக்கு உள்ளாகுகிறார்கள். நகை உடை பாவனை ஆகிய மூன்று அம்சங்களில் அவர்கள் வேறுபட்டு நிற்கவேண்டும் என்பது மரபு. அது பற்றி அப்பெண்கள் குறிப்பிடுகையில்,

"மற்றப்பெண்கள் வண்ணச் சேலைகள் அணிகிறார்கள் இந்தக்கோலத்தில் நான் எங்காவது போக ஏலுமா? எனக்குப் பொட்டோ, பூவோ, தாலியோ இல்லை. நான் அலங்காரமாக உடுக்கக்கூடாது. இதை நினைக்கும்போது எனக்குத் துக்கம். நான் விரும்பினாலும்கூட நன்றாக உடுப்பதில்லை பேய்க் கோலத்தோடு திரிகிறேன்" என்றார்.

பேய்க் கோலம் என்னும் சொற்றொடர் மூலம் அப்பெண் சமூகக் கட்டுப்பாடுகள் மீது தனக்குள்ள வெறுப்பை வெளிக்காட்டினார். "பேய்க் கோலத்தில் என்னைப் பார்ப்பதில் உங்களுக்கு எல்லாம் திருப்திதானோ?" என்று கேட்பது போலத் தோன்றியது.

விதவைகளின் நடத்தைமீது விதிக்கப்பட்டிருக்கும் தடைகளும் பல. சமுதாயத்தில் சீரழிவு ஏற்படாது அதனைப் பாதுகாக்கும் பொறுப்பு தம்முடையதெனக் கருதும் சிலருக்கு விதவைகளின் நடத்தையைக் கண்காணிப்பதே பொழுதுபோக்கு. இவர்கள் கைம்பெண்களின் போக்குவரத்துகளை உன்னிப்பாகக் கண்காணிப்பர். கைம்பெண்கள் துறவிகள்போல ஆசாபாசங்களையெல்லாம் ஒறுத்து வாழுதல் வேண்டுமென்பது இவர்களின் கோட்பாடு. இது விடயத்தில் அவதூறு, ஊர்வம்பு என்பன இந்த அபலைகளைக் கட்டுப்படுத்தும் ஆயுதங்களாகப் பயன்படுகின்றன. நாம் சந்தித்த பெண்கள் தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது
விற்பனையாகின்றது

ஆற்றுகை

நாடக அரங்கியலுக்கான
சஞ்சிகையின் 12 ஆவது இதழ்

நாடக ஆர்வலர்கள்,
நாடகத்துறையில் ஈடுபடுவோர்,
நாடக அரங்கியலைக்
கற்கும் மாணவர்கள்
அனைவருக்கும்
பயனுள்ள இதழ்.

விலை 40.00

வெளியீடு
நாடகப் பயிலகம்,
திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

உணர்வுகளை ஏமாற்றத்துடனும் அவநம்பிக்கையுடனும் தெரியப் படுத்தினார்கள்.

"நான் ஊர் வம்புக்கு அஞ்சி துறவிபோல் வாழ்க்கை நடத்த வேண்டியுள்ளது. நான் எவரோடும் அதிலும் விசேடமாக எந்த ஆணோடும் கிழவனோ, குமரனோ நெருங்கிப் பழக விரும்புவதில்லை."

"என் பெயருக்கு களங்கம் ஏற்படாதவாறு என்னைநான் காத்துக் கொள்கிறேன். ஊர்வம்பு அவதூறு ஆகியவற்றுக்கு நான் அஞ்சுகிறேன்."

விதவையின் காதில் எட்டத்தக்க கேள்விகளை ஒருவர் மற்றவரிடம் கேட்பதுண்டு. "அவளைப்பார்த்தால் கைம்பெண் மாதிரியா இருக்கு? அவளின் உடையென்ன நடையென்ன?"

"வீட்டில் முடங்கிக் கிடக்காமல் ஆட்டம் போட்டுத் திரியிறதைப் பார்."

உடை தொடர்பான ஒழுக்கம் பற்றியும் அவர்களுக்கென வகுக்கப்பட்ட நடத்தை பற்றியும் கைம்பெண் ஓயாது நினைவூட்டப் படுகிறார். இந்தச் செய்தி மறைமுகமாக அவரின் செவியில் எட்டும்படி மூன்றாவது ஆளோடு நடத்தும் உரையாடல் வடிவத்தில் நினைவுறுத்தப் படுகிறது. விதவைப்பெண் அதனைக் கேட்காதிருத்தல் இயலாது.

நான் ஆண்களோடு பழகினால் அதற்கு அர்த்தம் கற்பிப்பார்கள். அது என்னைத் துன்புறுத்தும். நான் வீட்டில் இருந்து எனக்குள் குமுறி அழுவேன்.

நான் ஒருவருக்கு மனைவிபோல் வாழ ஆசைப்படுகிறேன். ஆனால் சனங்கள் என்னைப் பற்றி அவதூறு சொல்கிறார்கள். என் நடத்தையைக் கண்காணிக்கிறார்கள். சில வேளைகளில் எனக்கு வில்லங்கம் ஏற்பட்டால் ஒருவர் ஓத்தாசை செய்யவருவார். அதைப்பற்றி இல்லாததும் பொல்லாதது மாக எவ்வளவோ கதைத்தார்கள். நான்அவரை வரவேண்டாம் என்று சொல்லி விட்டேன். கைம்பெண்களின் பரிதாப நிலைமை இதுதான். இப்போ எனக்கு உதவிக்கு எவருமில்லை.

பெரும்பாலான சந்தர்ப்பங்களிலே சமுகத்தினரின் கண்காணிப்பு ஊர் வம்பு மூலமாகத் தெரிவிக்கப்படும். கைம்பெண்ணுக்குரிய ஒழுக்க வரம்புகளை மீறிவிட்டாள் என்னும் செய்தி அவளுக்கு எப்படியோ எட்டி விடும். வீட்டிலே முடங்கிக்கிடக்காமை, வாய்ச்சொல்லால் இம்சித்தல், நடை உடை பாவனை தொடர்பான கண்டனம், அவதூறு மூலம் சமுதாயம் விதிக்கும் கட்டுப்பாடு ஆகிய நான்கு அனுபவங்களும் ஒரு விதவையின் மனதை வெதும்பச் செய்கின்றன. வழக்கமான சூழலில் ஒரு பெண் கைம்பெண் ஆனால் குடும்ப உறுப்பினர் ஆகியோரின் ஆதரவு கிடைக்கும். போர்ச்சூழலானது இத்தகைய நிலைமையைத் தலைகீழாக மாற்றியுள்ளது. ஆகவே இன்றைய பெண்கள் கைம்மைக்கு ஏற்பட்டுள்ள மேலதிக பிரச்சினைக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

ஆயினும் இந்த நியதிக்கு விதி விலக்குகள் இல்லாமலில்லை. இரண்டு பெண்கள் மற்றவர்களின் கட்டுப்பாடுகளை உடைத்தெறியத் துணிந்தனர். அவர்களில் ஒரு பெண் "நான் பெண் என்பதால் மற்றவர்களிலும் தாழ்ந்தவள் அல்ல. என் வீட்டில் எல்லாப் பிள்ளைகளின் சுப காரியங்களையும் நான் முன்நின்று நடத்துகிறேன்." என்றார்.

"மற்றொரு பெண் சந்திரனைப் பார்த்து நாய்கள் குரைத்தால் சந்திரனுக்கு கெடுதல் வருமா?" என்றார்.

"எனக்கு ஆறு பிள்ளைகள். ஒரு பொடியன், ஐந்து பெண்கள். நான் குவைத்துக்குப் போய்ச் சம்பாதித்தேன். பிள்ளைகளை அம்மாவோடு விட்டு விட்டு போனேன். நான் பாடுபட்டு உழைப்பதென்று முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திருக்கிறேன். வாழ்க்கையில் ஏற்படும் விலங்குகளுக்கு ஈடுகொடுக்கத் தயாராக இருக்கிறேன். எனக்கு நிலமும் கிணறும் உண்டு. நிலத்தில் பயிர் செய்து எனது சொந்தக்காலில் நிற்பேன்."

முஸ்லிம் பெண்களைப் பொறுத்த வரையில் அவர்களின் நடத்தையில் வேறுபாட்டினைக் காண்கிறோம். பெண்கள் ஒதுங்கி வாழுதல் அதிகமென்றாலும் தனித்துப்போன பெண் மறுமணஞ் செய்தல் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பெற்றோர், சகோதரர்கள், மச்சான்மார் ஆகியோர் தம் பெண்களுக்கு மறுமணஞ் செய்துவைப்பதில் தீவிரமாக ஈடுபடுவர். ஆயினும் இருவரைத்தவிர ஏனையோர் மணம் புரியவில்லை. இருவர் இழப்பு பற்றி கவலையோடு யாவரையும் போரில் இழந்தவர்கள். இந்தப் பெண்கள் மறுமணம் பற்றிக் கவலையின்றி உரையாடினர். ஆண்கள் நேரடியாகத் தம்மிடம் மணம் பேசி வந்தார்கள் என்றும் சொன்னார்கள். சில பெண்கள் பிள்ளைகளே தம் கவலை என்றனர்.

உதாரணமாக, ஒரு பெண் இவ்வாறு சொன்னார்.

"எனக்கு இரண்டும் பிள்ளைகள் பிறந்தால் நான் மேலும் வறியவள் ஆவேன். என் இரண்டாம் கணவனும் வெளிநாட்டவன். ஒன்றுமே நிச்சயமில்லாமல் இருக்கிறது."

மற்றொரு பெண் சொன்னார்.

"பிள்ளைகளை விட்டுக்கொண்டு நான் சந்தோஷமாக மறுமணம் செய்யஇயலாது. எனக்குத் தாய் தகப்பன் இருந்தால் பிள்ளைகளை அவர்களோடு விடலாம். அப்போது நான் துணிச்சலாகக் கலியாணம் செய்யலாம்."

மூன்றாவது பெண் சொன்னார்.

"என் வாழ்வை பழுதாக்கிவிடுவதை ஒருவரை கண்டுபிடித்தார் எனக்கு அவரைப்பிடிக்கவில்லை."

இன்னொரு பெண்:

"என் சகோதரர் தன் தனி நண்பரை கலியாணம் செய்யும்படி சொன்னார். ஆனால் அவர் வரவில்லை."

வேறு சிலர் தங்களின் உடல் மற்றும் உளநலங்களின் நிமித்தம் மறுமணம் செய்து கொள்ளவில்லை என்றனர். இன்னும் சிலர் மறுமணம் செய்வதற்கு தங்களுக்கு வயது போய்விட்டதென்றார்கள். மற்றும் இருவர் தங்கள் பிள்ளைகளின் எதிர்ப்பு காரணமாக மறுமணம் செய்யவில்லை என்றனர். எங்களைச்சந்தித்த கலைமகள் சம்பவம் முப்பத்தெட்டு வயதான கைம்பெண் ஒருவர் பற்றியதாகும். உரையாடலின்போது மறுமணம் பற்றிய பேச்சு எழுந்தது. அந்தப் பெண் தனக்கு அதில் ஆர்வமில்லை என்றார். ஆனால் ஆய்வாளர், அவள் வீட்டுப் படலையை அண்மித்தபோதுமே, அந்தப் பெண் அவர் பின்னே சென்று, பிள்ளைகளின் முன்னிலையில் தன் உணர்வுகளை வெளிப்படுத்த முடியவில்லை என்றார். தனக்கு வயது ஆக முப்பத்தெட்டு மட்டுமே என்றும் தெரிவித்தார் "நான் கலியாணம் செய்தால் என்ன? தனிமை உணர்வு என்னை வாட்டுகிறது." என்றும் சொன்னார்.

அவரை நாம் தேற்றினோம். மறுமணஞ் செய்தல் தவறல்ல என அவருக்கு ஆறுதல் கூறி மறுமணஞ் செய்து கொள்ளுமாறு தூண்டினோம்.

இங்கே இரண்டு பிரச்சினைகள் உள்ளன. பிள்ளைகளுக்கு முன் அவர் மனம் திறந்திருக்கக் கூடாது. ஆனால் சிறு பிள்ளைகளை தாயிடமிருந்து பிரிப்பது சிரமமாயிற்று.

இரண்டாவது பிரச்சினை: அவரின் தனிமை உணர்வும் துணையற்ற நிலைமையும். தனிமை தொடர்பான உணர்வுகளும் உண்மையில் பரிதாபத்திற்குரியனவே. தனிமரமாகிவிட்ட பெண் பல்வேறு முனைகளில் துன்பப்படுகிறார். அத்தகைய பெண்களில் உள்ளுணர்வுகளைத் தற்செயலாகவே நாம் அறிந்து கொண்டோம். இந்த உணர்வுகளை அவர்கள் பிறருடன் பகிர்ந்து கொள்ள விரும்புவதில்லை. அவர்களை தனிப்பட்ட சொந்த விடயங்களாய் நோக்குகிறார்கள். இரண்டு பெண்கள் தம் உணர்வுகளை வெவ்வேறு வகையில் வெளியிட்டனர். அவர்கள் உடலால் சோர்வுற்றும் உள்ளத்தால் துன்புற்றும் அவதிக்குள்ளாகியிருந்தமையால் மணவாழ்க்கை பற்றிய எண்ணமே எழவில்லை. இந்தப் பெண்கள் மத்தியிலே தமிழர் (இந்துக்கள்) போல மறுமணம் என்பது சமூகத்தவர்களால் மறுக்கப்படவில்லை. தடுக்கவோ விலக்கப்படவில்லை. வேறு காரணங்களின் நிமித்தமே அவர்கள் மறுமணஞ் செய்யாதிருந்தனர். மற்றொரு விடயம் நம் கவனத்தைக் கவர்ந்தது. உறவினர்கள் அதிலும் குறிப்பாக பெற்றோர் இப்பெண்களை காபந்து பண்ணினர். அவர்களின் ஆதரவு அப்பெண்களுக்கு போதுமானதாயிற்று. பெற்றோர் உயிருடன் இருந்தால் பேரப்பிள்ளைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டு மகள் சந்தோசமாக வாழ வழி செய்கிறார்கள். புதிய தந்தையின் அந்நியமானவர் தன் பிள்ளைகளைப் பாதிக்குமோ எனத் தாய் கவலைப்படவேண்டியதில்லை. ஒரு பெண் பிறரின் ஆலோசனையைப் பெற்ற பின் ஒரு முடிவுக்கு வந்தாள்.

முந்திய கணவன் மூலம் பெற்ற பிள்ளைகள் இருக்கவும் மறுமணஞ் செய்து கொண்ட பிற பெண்களை விசாரித்தபோது அவர்களின் அநுபவங்கள் பொருந்துமாறுபட்டுவிலையான அமைந்ததை அப்பெண் அறிந்து கொண்டார். மூன்று பெண்களை விசாரித்த போது மூவரும் தம் வாழ்க்கை மிகவும் கடினமானதென்றனர். முன்னைய கணவன் மூலம் பெற்ற பிள்ளைகளை இரண்டாவது

கணவனும் பிள்ளைகளும் கொடுமைப்படுத்தினர். உணவு, உடுதுணி, விளையாட்டுப் பொருட்கள், கல்வி வசதிகள் ஆகியவற்றில் அப்பிள்ளைகள் வேற்று மனிதர்கள்போல ஒதுக்கப்பட்டனர். இதைக் கேள்வியுற்ற அந்தப் பெண் தான் இவ்வாறான துன்பத்தில் சிக்காதிருந்தமை விவேகமான செயல் என்று நினைத்தார். தன் பிள்ளைகள் இம்மியளவும் துன்பப்படக் கூடாதென்று அந்தத்தாய் விரும்பினார்.

தமிழர், முஸ்லிம்கள் ஆகிய ஈர் இன விதவைகளுக்கும் உறவினர்களிடமிருந்து கிடைத்து வந்த ஆதரவு சீர்குலைந்தமை பெரியதொரு பிரச்சினையாகும். அவர்கள் உள்ளத்தாலும் உடலாலும் வலுவிழந்துள்ளார்கள். இதைத் தொடர்ந்து மற்றோர் அம்சமும் முனைப்புப் பெற்றுள்ளது. இன்றைய நெருக்கடி நிலைமையில் கூட்டுக்குடும்ப அமைப்பும் சீரழிந்துள்ளது.

ஆற்றாமையினாலும் வறுமையினாலும் உந்தப்பெற்ற பதினைந்து பெண்கள், தம் பெற்றோர், தாய்மார், மாமன், மாமிமார் வீடுகளில் தஞ்சம் தேடினர். இத்தகைய நடவடிக்கையையிட்டு அவர்கள் பிற்பாடு வருந்துதல் வழக்கம்.

"அம்மா வீட்டிலே, என் பிள்ளைகள் குழப்படிகாரர். சத்தம் போடுவோர் என்று அம்மா நினைத்தார். வேறு இடம் பார்க்கும்படி சொன்னார்."

சற்று வயது முதிர்ந்து தனிமரமான பெண்கள் மண வாழ்க்கை நடத்தும் தன் மகள் மாருடன் வாழச்சென்ற வேளைகளில் சொற்ப நாட்களில் மீண்டும் தம் சொந்த வீடுகளுக்கு திரும்ப நேர்ந்தது.

தாய்மார் தங்களோடு வந்துசேர்ந்தால் செலவு அதிகமாகி விடும் என மகள்மார் நினைக்கிறார்கள். மருமகன் மாரும் மாமிமார் வரவால் ஏற்படும் மேலதிக செலவை ஏற்றுக்கொள்ளப் பின்வாங்குகிறார்கள். ஆண் பிள்ளைகளும் பெண் பிள்ளைகளும் கலியாணத்திற்கு முன்னர் தமக்கு ஒத்தாசையாக இருந்தார்கள் என்றும் கலியாணம் ஆனதும் நிலைமை முற்றாக மாறிவிட்டது என்றும் பல தாய்மார் குறைப்பட்டார்கள். பிள்ளைகள், பெற்றோர் தமக்குப் பாரமெனக் கருதி அவர்களைப் புறக்கணிக்கின்றார்கள். இவ்வாறான நிலைமை போரின் விளைவாக எல்லா இனத்தவர்களுக்கு மிடையில் பொதுவான தொன்றாகக் காணப்படுகின்றது.

கைம்மை என்னும் கருத்தியலினுள்ளே பெண்ணானவள் பாலுணர்ச்சி அற்றவளாய் ஒழுகுதல் வேண்டும் எனச் சமூகம் எதிர்பார்க்கிறது. இதனால் ஏற்படும் சிக்கல்கள் மற்றொரு பரிமாணத்தைப் புலப்படுத்துகின்றன. இப்பெண்கள் மறுமணம் செய்துகொள்வதற்கு மதமோ, சமூகமோ தடை விதிக்காதபோதிலும் இவர்களும் பல்வேறு இம்சைகளைத் சகித்துக் கொள்ள வேண்டியுள்ளது. ஆயினும் இது விடயத்தில் தமிழ் பெண்களுக்கும் முஸ்லிம் பெண்களுக்கும் வேறுபாடுகள் உள. தமிழ்பெண்கள் அதிக துன்பங்களை அனுபவிக்கிறார்கள். இரண்டு குழுவினருக்கும் பொதுவான ஓர் அம்சம் பாலுணர்ச்சி சார்ந்த இன்பத்தில் ஈடுபடலாகாதென்பதாகும். அவதூறு, அதைச்சார்ந்த ஊர்வாய் என்பன பாலியல் இன்பம் துறந்த வாழ்வு தொடருதல் வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றன. முஸ்லிம் பெண்களின் முறைப்பாடு கீழ்கண்டவாறாய் அமைந்தது.

"அவன் ஏன் அடிக்கடி அவள் வீட்டிற்குப் போய்வாறான்?"

"ஆம் பிள்ளைகள் இல்லாத வீட்டில் அவனுக்கென்ன அலுவல்? எந்த ஆணிடமிருந்தும் எந்த உதவியும் பெறமுடியாது. என் மூத்தமகனின் வயதுப் பையன்களைக்கூட எந்த உதவியும் செய்யும்படி நான் கேட்கமுடியாது."

"அவள் கைம்பெண். அவள் என்ன செய்கிறாள் என்று ஆருக்குத் தெரியும்? யார் யார் அவளைச் சந்திக்கிறார்களோ?"

"அவள் இளம் விதவை. வடிவானவளும்கூட. தலையில் முக்காடு போட்டுக் கொண்டாலும் மனதில் என்ன இருக்கின்றதென்று யாருக்குத் தெரியும்?"

கன்னிப்பெண் திருமணமாகாமல் வீட்டில் இருப்பதென்பது பெற்றோருக்குப் பெருந்துயர். இது விடயத்தில் தமிழர், முஸ்லிம்கள் எனும் வேறுபாடு கிடையாது. எல்லாத் தாய்மாரும் வீட்டிலே குமர்ப்பெண்களை வைத்துக்கொண்டிருப்பது மடியிலே நெருப்பைக் கட்டிக்கொண்டிருப்பது போல என்னும் கருத்தை கொண்டிருந்தார்கள். பதினான்கு வயதைத் தாண்டிய கன்னிப்பெண் குமர் எனக் குறிக்கப்படுகிறாள். இந்தப் பருவத்தை எய்திய பெண் பாலுணர்ச்சி வசப்படும் இயல்பினள். எவரும் அந்த உணர்ச்சியை துஷ்ப்பிரயோகம் செய்தல் கூடும். ஆகவே அப்பெண் கட்டுப்படுத்தப்பட வேண்டியவள். பாரம்பரிய மரபுகளும் சட்டதிட்டங்களும் வகுத்த வழியில் அப்பெண் வழிநடத்தப்படல் அவசியம்.

இத்தகைய பெண்களையிட்டு தாய்மார் சஞ்சலப்படுவதுண்டு.

"மூன்று குமர்ப் பெண்களை கரைசேர்க்க வேண்டும்."

"இரண்டு குமரை வீட்டிலே வைத்துக்கொண்டு நான் வயிற்றில் நெருப்பை வைத்திருக்கிறேன்."

"இரண்டு வளர்ந்த பெண்களை வைத்திருப்பது தான் எனக்குப் பெருங்கவலை."

"பிச்சைக்காரருக்குக் கூட கட்டிக்கொடுக்கத் நான் தயார். ஆனால் அவர்கள் கூட வீடு வேணும் என்பார்களே."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்த கருத்துடைய பழமொழிகளையும் அறிவுரைகளையும் அடிக்கடி மேற்கோள் காட்டுவதானது, இப்பெண்கள் பெண்ணின் பாலுணர்ச்சி பற்றிச் சமுதாயம் வரையறுத்துள்ள கட்டுப்பாடுகளுக்குப் பணிக்கிறார்கள் என்பதை புலப்படுத்தியது. பெண்ணின் உடற்தேவைகளை மட்டும் இந்த வரையறைகள் கட்டுப்படுத்துவதில்லை. இதனைத் தவிர வேறு அம்சங்களையும் துணையற்ற தாய்மார் வெளிப்படுத்தியுள்ளனர். பாதுகாப்பற்ற மகள், தகப்பனில்லாத மகள், கைம்பெண்ணின் மகள் இப்படிப் பல வகையில் தம் நிலையைத் தெளிவுபடுத்தினர். சமுதாயத்திலுள்ள நாம் பெண்களென்றால் [illegible] பாதுகாப்பற்ற இடமாக [illegible] பெண்களின் இருப்பிடம் கருதப்படுகிறது. எனவே குடும்பத்தில் ஆண் துணையில்லாத போது பெண்ணின் பாலுணர்ச்சி பிரச்சினைக்குரியதாகிறது.

இராணுவத்தினர் பாடசாலை செல்லும் சகோதரியைக் கடத்திக்கொண்டுபோய் பலாத்காரம் [illegible] படுத்தியதுபோல, அல்லது பொலிசாரின் நடவடிக்கைகளைப்போல அல்லது [illegible] விருந்தாளிகளாய் நுழையும் ஆண்களின் செயல்கள் ஏற்புடையதாயிருக்க, அவ்வளவும் பார்த்திருந்தும் அதில் இருந்தும் [illegible] தன் காதலை மறந்து, குழந்தைக்குத் தானே தந்தையல்ல எனப் பெண்ணைக் கைவிடும்போது பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன.

மனைவிமார், மகளிமார், சில சமயங்களில் மச்சாளிமார் ஆகியோரின் பாலுணர்ச்சியைப் பாதுகாக்கும் வேலியாக உடல்வலு, அதிகாரபலம் ஆகியனகொண்ட ஆண் விளங்குகிறான். தாய்மாரையும், மூத்த சகோதரிகளாயும் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தும் பெண்கள் தம் கன்னிப்பெண்கள் அல்லது தங்கைகளின் பாலுணர்ச்சியைக் கட்டுப்படுத்தி ஒழுக்கம் நிறைந்தவர்களாய் பாதுகாக்கும் சமுதாயப் பொறுப்பினைச் சுமக்கிறார்கள். இந்தப் பொறுப்பு எல்லோருக்குமே பெருஞ்சுமை. இதற்கு அவர்களிடம் பரிகாரமும் இல்லை; இப்பெண்கள் தம் மகள்மாரினதும் மனைவியினதும் கற்புக்கு இரவு பகலாய் காவல் இருந்து சமூக மரபுகளும் கலாசார எல்லைகளும் மீறப்படாமல் கண்காணிக்க வேண்டியுள்ளது.

இங்கு எம் கேள்வி; மகளானவள் ஆண்களோடு பழகி தனக்கு தகுந்த துணையைத் தேடும் சுதந்திரத்தை வழங்கினால் என்ன? என்பதாகும். குமர்ப் பெண்ணுக்கு மணமகனைத் தேடுவதுபோல வயதுவந்த பெண்களுக்கும் கல்யாண ஏற்பாடுகளை மேற்கொண்டால் என்ன?

தம் கலாசார பாரம்பரியங்களை அறியாத அந்நியருக்கு மேற்சொன்ன கேள்விகள் நியாயமானவையாகத் தோன்றும். கல்யாணமாகாமல் முடங்கிக்கிடக்கும் பெண்களின் பிரச்சினைக்கான பதிலும் மேற்படி கேள்விகளில் தொக்கியுள்ளது. ஆயினும் இப்பெண்கள் அளிக்கும் பதிலும் நியாயமானவையாகவே காணப்படுகின்றன. அதிலும் ஆணாதிக்க சமுதாயப் பின்னணியில் வைத்துப்பார்க்கும்போது அவர்கள் சொல்லுவது சரியாகவே படுகின்றது. ஆண்களோடு [illegible] பெண்கள், ஆண்களின் இச்சையைப் பூர்த்தி செய்யும் [illegible] பிரச்சினை எழுகிறது. சில சமயங்களில் கர்ப்பிணிகளாய் கைவிடப்படும் அபாயமும் உண்டு. இது நிலைமையை மோசமாக்குகிறது. இன்றைய சமுதாய அமைப்பிலே இத்தகைய பெண்கள் [illegible] ஒதுக்கப்படுகிறார்கள். வம்பிலே பிள்ளைபெற்றவள் என்னும் அவச்சொல் தாய்மீதும், வம்பிலே பிறந்தவன்(ள்) என்னும் அவமானம் பிள்ளைமீதும் பாய்கின்றன. இறுதியில் குமர்ப்பெண் வீட்டில் இருப்பது வெளியே ஆடவரோடு பழகுவதிலும் பார்க்க மேலானது எனத் தோன்றுகிறது. தமக்குப் பிடித்த ஆணைத் தேர்ந்தெடுக்க இடமளிக்கும் வகையில் இளம் பெண்களோடு கூடிப்பழகச் சுதந்திரமளித்தல் ஆபத்தானதென இளம் பெண்களே நினைக்கிறார்கள். இந்த ஆபத்தை எதிர்நோக்க அவர்கள் விரும்புவதில்லை. ஆகவே கன்னிப் பெண்களைப் பாதுகாக்க வேண்டியதாகிறது. பேசிச்செய்யும் கல்யாணங்களால் ஏற்படும் மற்றொரு பிரச்சினை சீதனமாகும். அப்படியானால் தன் துணையைத் தானே தேடும் பெண்ணுக்குச் சீதனப் பிரச்சினை இல்லை என்று அர்த்தமாகாது. காதல் திருமணங்களில் பெண்ணின் பெற்றோர் தாளவிழ்த்த பேரம்பேச வாய்ப்புண்டு. காதல் வயப்பட்ட ஆண் சீதனத்தைப் பார்க்கிலும் காதலியே பெரிதென எண்ணி விட்டுக்கொடுக்க இடமுண்டு.

பேசிச் செய்யும் திருமணங்களில் [illegible] என்று துண்ட இரண்டு என்ற வகையில் முன்னரே தீர்மானிக்கப் படுகிறது. இவ்வளவு ரொக்கம், இவ்வளவு காணி பூமி இவ்வளவு நகைநட்டு என்று மாப்பிள்ளை வீட்டார் நிபந்தனை விதிக்கிறார்கள். காதலர்கள் சீதனப் பிரச்சினையிலிருந்து விடுபடுவதில்லை. தொகை வித்தியாசப்படி குறையலாம். [illegible] சீதனம் கொடுத்தே ஆகவேண்டும். இரண்டு அல்லது மூன்று பெண்களைப் பெற்ற தாய்மார் இன்றைய சூழலில் தம் பெண்களுக்குச் சீதனம் கொடுப்பதைப்பற்றி நினைக்க முடியாதவர்களாய்த் திண்டாடுகிறார்கள்.

அவர்களின் அச்சத்துக்கும், கவலைக்கும், ஏக்கத்துக்கும், விரக்திக்கும் இவையே காரணம். வறுமை, ஆணாதிக்கக் கலாசாரம் ஆகிய சக்திகளின் பிடியிலிருந்து பெண்கள் தம்மீது சுமத்துள்ள பொறுப்புகளால் தாங்கி தவிக்கிறார்கள். ■

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானுடக்கேள்வி:

இயற்கை அன்னையே!
உனக்குமா இத்தனை வெறி...!

"சுனாமி" என்ற பெயரில்வந்து
இத்தனை ஆயிரம் உயிர்களையெல்லாம்
சூறையாடிச் சென்றதேன்....?

இத்தனை காலமாக..... உன்
கடல்மடிதான் தங்கள்
கர்ப்பக் கிரகமென்றெண்ணி...உன்னோடு
கலந்து வாழ்ந்தோரை;
பால் நுரைகள் அள்ளிவரும்
பட்டுப்போல் அலைகளுக்குள்
கால் நனைத்து விளையாடி
கை நனைத்துச் சிரித்தாடி
நாளெல்லாம் உன்மடியை
நம்பிக் கிடந்தோரை;

கள்ளமிலாச் சிரிப்புகளாய் - உன்
கால்களுக்குள் அணைந்து நின்ற
வெள்ளை மனப் பிள்ளைகளோடு...ஏன்
அள்ளி விழுங்கினாய்...?

சின்னஞ்சிறிய என் அறிவுக்குத்
தெரியவில்லை! தெளிவுமில்லை!
என்னதான் உன் வெறி....அதை
உலகறியச் சொல்வாயா....?

இயற்கைத்தாய் இயம்பினாள்:

ஆயிரம் ஆயிரம் கோடிகளாய்
அள்ளித் தெளித்த உயிரினங்கள்
அழகுகள்.... ஆனந்தங்கள்
அளித்தேன்.... மறுப்பாயா....?

அவற்றையெலாம் அனுபவித்து
ஆண்டுகொண் டாடிவாழ
ஆறாம் அறிவையும் உனக்கென்று
அமைத்தேனே.....! அந்த
ஆதார சுருதிக்குள் நீ வகுத்த
ஆதனங்கள் தானென்ன....?

ஆணவம் அகம்பாவம்
ஆண்டவன் இருப்பை மறக்கின்ற
அடாவடித் தனங்கள்....இவைகள்தானே...?

மதவெறிகளாய்
இனவெறிகளாய்
நீ செய்யாத எந்த அக்கிரமங்களை
நான் செய்து விட்டேன்...?

காற்றாக நிலைத்தேன்
கார்மழையாய்ப் பொழிந்தேன்.
நிலத்தடியின்
ஊற்றுக்களாயும் பிளந்து வந்து
உயிரினங்கள் வாழவைத்தேன்
இன்னும்....எத்தனை வடிவங்களால்
நேற்றாகி இன்றாகி
நாளைய பொழுதுகளும் நானாகி
தோற்றாத துணையாக உலகத்தை
தோள்மீது சுமப்பவள் நான்

எந்தன் சக்திகளுக்கு முன்னால்:

மண்டையிலிருந்து உதிரப்போகும் ஒற்றை
மயிருக்குக்கூடப் பெறுமதியில்லாத
மனிதனே...! உனக்குள் எத்தனை
மமதைகள்...!

இயற்கையின் விதிகளை யெல்லாம்
இல்லாமல் செய்வேன்....வெல்வென்...இந்த
உலகத்தைச் சுமந்து நிற்பேன்...காப்பேன் என்று
எத்தனை
அகங்காரக் கூச்சல்கள்...!

உன்னை நீயே
உருட்டி மிரட்டிக்கொள்ள....;
அழித்து வதைத்து ஆனந்தங்கொள்ள...;
எத்தனை அணுகுண்டுகளை
ஆக்கிரமிப்பு வெறிதரும் ஆயுதங்களையெல்லாம்
என்னுடலில் வீசிப்பார்த்து
ஆனந்தம் கொண்டாய்...ஆட்டம்போட்டாய்...?
என்னுடலில் இணைப்புகளை யெல்லாம்
இற்றுப் போகச் செய்து எகிறிக் குதித்தாய்...?

என்
அமைதியை
ஆனந்த மோனத்தை
சிருஷ்டித் தவத்தை யெல்லாம்
சீண்டிப் பார்க்கின்ற உந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமைகளற்றவன் என்னைச்
சிறைமடையச் செய்கின்றன.
நாளும்
உன்னுடையதா...? என்னுடையதா...?

பாதுகாக்கத் தெரிந்திருக்கிறாயா...?

மலையாய் வளர்ந்திருந்த தனிமனிதனை
மற்றும் உறவுச் சுவர்களையும் இழந்து
தோற்றுக் களைத்தவனாய்... இறுதியில்
நீர் கரைகளுள் ஒளித்துக்கிடக்கிறான்...தன்
நீர் உயிரைக் காத்துக்கொள்ள.

அக்கினி அணைந்திருந்தால் நீரை
வற்றிவிடச் செய்து அவனை
வதைக்கிறேன் என்று அரக்கனாய்
வளைக்கிறான் மீண்டும்
தடுக்கிறான் அதுவும்.

"அம்மா...!
இயற்கையைப் பிழை வழுப்பவரே! உன்
பொய்ம்மையும் [illegible]
மறுவதும் நீ மட்டுமல்ல...
வதைக்கப் பரிவது
மண்ணாளனின் மறுத்தான்
அமைதியாயிருக்கும்
அவன் மேனி வழிந்தால்
உயிரினம் அனைத்தும் உலர்ந்துவிடும்
அறிந்துகொள்!" என்கிறான்.

அவன் அறிந்த மனிதர்கள்
அதிகாரம் வாய்ந்த அன்மையா காலத்தில்
பல அவையே
அமைவதை இழப்பட்டதில்லை.

மரம் வெட்டிய துண்டுகள்
மாற்றக்கூடாப் பதுக்குக் கொண்டு போய

மனிதர்களால்
இன்றேன் அமைதியை
அழிக்கும் இருக்கிறேன்
அவனும் அழுகிறது.

மனிதன்:

நிறைந்து...உன் பெற்றுவை
நிறைவேற்றுத உன் ஆத்திரத்தால்
அழிந்ததும்
அழுவதும்
அடங்கிக் கொண்டாலே...
அவர்கள் செய்த பாவங்களை...?

இயற்கை:

மனிதனே!
எனது ஆசனங்களும்
எனது மேகங்களும்
மழையின் மறைந்து பாவங்கள் மலிந்த
எந்த மண்ணிலேயும்
இரட்சகர்கள் பாவிகளல்ல...

எல்... இருக்கின்ற நாயகன்...?

விழிப்பேற்கை சொல் மனிதா
விழி நனையக் கிடக்கவை இல்லை.

மனிதனே! காலங்கள்...
இரக்கமுடன்
எனது அமைதியிலே
உயிர்ப்புடனான உற்றாரைகள்
அமைதியுடன் மனங்களுமே போதிக்கின்ற
ஆண்டவன் கற்றுவைப்பதின்
நியதிமுறை படைத்தான்.
தெரிந்து கொள்! எழுந்து நில்!
இனியேனும்... உன்னை உணர்ந்து
உலர்ந்து வாழ்!

நீர்கொழும்பு திருமலைலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

விடிகாலைப் பொழுதில் தெருச் சங்கடப் படலையைத் 'தடதட' வெனத் தட்டி, சுப்பிரமணியத்தார் கூறிய அந்தச் செய்தியைக் கேட்ட கனகசபைக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. இவர் என்ன கூறுகிறார் என்பது போல் விழிகளை இடுக்கிக் கொண்டு அவரை உற்றுப்பார்த்தார்.

"விசுவலிங்கத்தாற்றை சுவிஸ் பொடியனல்லே நேற்று மோசம் போயிற்றானாம். இன்றநெற்றில தகவல் வந்ததாம். பொடியன்ர 'பொடி'யைக் கொண்டுவாறதைப் பத்தித்தான் கனக்க யோசனை பண்ணுகினம்."

கனகசபைக்கு காலைத்தூக்கம் கலைவதற்குப் பதிலாகக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. 'இவர் என்ன சொல்கிறார்? நேற்று இரவு நீண்ட நேரம் விசுவலிங்கத்தாரோடு பேசிக்கொண்டிருந்த போதும் இதுபற்றி எள்ளளவும் பேச்சு எழவில்லையே? இதென்ன நாசமாய்ப் போன இழவுச்செய்தி'.

'அப்ப நான் வாறன். வீட்டபோய் விசயத்தைச் சொல்லிப்போட்டு நானும் அங்க வரவேனுமே!' – சுப்பிரமணியத்தார் கதவினைத் திறந்து கொண்டு வேகமாகப் போவது தெரிந்தது.

கனகசபயர் அவசரமாகக் கிணற்றடிக்குச் சென்று இரண்டு வாளித் தண்ணீரை இழுத்து முகத்தைக் கழுவிக்கொண்டு தலைவாசல் கொடியில் கிடந்த வேட்டியையும், சால்வையையும் உருவிக்கட்டிக் கொண்டார்.

உள்ளும் புறமும்

செம்பியன் செல்வன்

"பிள்ளை நானொருக்கா விசுவலிங்கத்தாற்ற வீடு மட்டும் அவசரமா போட்டுவாறன். நீ வீட்ட பத்திரமா பாத்துக்கொள்....." – அவர் வாய் வார்த்தை முடியவில்லை மகள் கண்மணி கையில் மூக்குப் பேணியுடன் அவசர அவசரமாக வந்தாள்.

"அப்பா! நீங்கள் போனா போற இடம். வந்தா வந்தவிடம். இப்ப தேத்தண்ணியும் குடியாம வெறும் வயித்தோட வெளிக்கிட்டா.. எப்பதான் சாப்பிட வாறது... இதையென்டாலும் குடிச்சிட்டுப் போங்க...'

அவர் அவசர அவசரமாக தேநீரை வாயில் ஊற்றிக்கொண்டு 'அப்ப.. வாறன்' – என்றவாறு தலைவாசல் இறப்பின் மூலையில் தொங்கிய குடையை எடுத்துக்கொண்டு வெளியே பாய்ந்தார். அவர் அவசரம் கண்டு கண்மணி வியப்புடன் பார்த்தாள்.

அவர் காலை எட்டிப் போட்டார். காலில் தடக்கிய எட்டுமுழ வேட்டியைச் சற்று உயர்த்திக் கட்டினார்.

பாவம். விசுவலிங்கம் என்ன செய்கிறானோ? அவனுக்கு ஆர் ஆறுதல் சொல்லப் போகினம். அவனை விளங்கிக் கொண்டவை அந்த வீட்டில எத்தனை பேர்? அவன் பேச்சுக்கு எப்பனெண்டாலும் ஆராவது மதிப்புக் கொடுக்கினமே? பாவம் தானும் தன்ர சாய்வு நாற்காலியுமாகச் சுருண்டு கிடப்பான்.

நடையில் வேகம் கூடியது. வாகனங்கள் அவரை விலத்திச் சென்றன. அவர் மனமோ அவருக்கு முந்தி மரண வீட்டிற்குச் சென்று விடுகின்றது.

விசுவலிங்கத்தார் தனது பிரம்பு சாய்வு நாற்காலியில் துவைத்துப்போட்ட துணிபோல் சுருண்டு கிடந்தார். அவர் விழிகள் பக்கத்து 'டீபோயில்' கண்ணாடி இடப்பட்ட புகைப்படமாக சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் எடுத்த தோற்றத்தில் மகன். அறியாமை... அச்சம்... பாமரத்தனம் பொலிய இடுப்பளவு உயரமாக காட்சியளித்துக் கொண்டிருந்தான்.

"...ம்..." – விசுவலிங்கத்தாரிடமிருந்து நீண்ட பெருமுச்சு எழுந்தது. 'பாவி...பாவி கடந்த பத்து வருசங்களாக வீட்டிற்கெண்டு என்ன..என்ன... எத்தனை பொருட்களை அனுப்பினான். தன்ர புகைப்படம் எதாவது அனுப்பினானா? கடைசிக்காலத்தில் கூட அவன்ர முகத்தைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லையே! அவன்ர முகம் இப்ப எப்படி இருக்கும்.......?

வரண்ட விழிக்குளத்தில் வண்டலும், மண்ணும் கலந்தது போல் ஈரப்பசையற்று வெம்மை காட்டிற்று பாலை.. வரட்சி... வெம்மை.... மரணம்.... ஏனோ அடுக்கடுக்காக மனக்கண்களில் காட்சியாக வணக்கம் சொல்வதான பிரமை ஏற்பட, 'ஐயோ!' என்றலறினார். யார் யாரோ தேடி வந்தார்கள். முதலில் வந்தவள் மூத்தவள் அகிலா.

அவனை வெளிநாட்டுக்கு அனுப்பி விட அவர் ஓடியாடி அலைந்து திரிந்த போது அகிலா இரண்டு பிள்ளைகளின் தாயாகி விட்டாள். மூத்தவனுக்கும் வயது பத்துக்கு மேலாகிவிட்டது. தன்னை நல்ல சீதன, பாதனத்தோட கட்டிக்கொடுக்காத குறை, நிறைய.

"இப்ப இவனை அனுப்பி வைக்க இப்படி அலையிறவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ..ராம்பிளைப் பிள்ளைகளுக்கு என்ன பெரிசா செய்து போட்டார்? கடைகண்ணியில எடுபிடியாளா இருக்கிற இவரைக் கட்டி என்ன சுகத்தைக் கண்டன். என்ர குழந்தைகள் ஆறாவ சாப்பாட்டைக் கண்டு எத்தனை நாளாப் போச்சு... பாரன் வளர்ற பிள்ளையள் எலும்பும் தோலுமாத் திரியிறதை.. பெரப்பிள்ளையள் பாவம் என்டு ஏதாவது நல்லதை நறியதை வாங்கிக் கொடுத்திருப்பாரா... இப்ப போனை அனுப்பிவைக்கிற காசிலைதான் எப்பவாவது என்ர பிள்ளையளில கவனிச்சிருப்பாரா...?

அவளின் பின்னால் இருபது வயது இளைஞனும், பதினாறு வயது மங்கையும் ஓடிவந்தார்கள்.

"அப்பா! என்னப்பா செய்யிறது? தன்னைக் கொஞ்சமும் கவனியாது... தன்ர பிற்கால வாழ்க்கையைக் கொஞ்சமும் யோசியாது குடும்பத்துக்கு உழைத்த தம்பி போய்விட்டது பெரிய இழப்புத்தான். என்னப்பா செய்யிறது? அவன் வைப்பிறான் என்று என்ர மகள் எல்லா ஆசைக்கூடும் செய்து வைத்திருந்தாள். இப்ப எல்லாம் கைவிட்டுப் போச்சு... ஐயோ!... தம்பி போனாலும் போனாய்... இந்த அக்காவை கொஞ்சமும் யோசியாமல் போயிட்டியே?.. என்ர பிள்ளைக்கெண்டு நல்ல மாப்பிள்ளையா... சீதன பாதனத்தோட கட்டிக்கொடுப்பாய்... உன்ர மருமகனை உன்னோட கூட்டி வைச்சிருப்பாய் என்று கனவு கண்டனே எல்லாம் பாழாய்ப் போச்சே."

விமலசிங்கத்தார் அந்த வேதனையிலும் உதடுகளை சாய்த்துச் சிரித்துக் கொண்டார்.

"என்ன மாய்மாலம் எல்லாம் பண்ணுறாய் இந்த ராக்கண்ணீர். அவனை அனுப்புற செலவை எல்லாம் சீதனமா தந்தா என்ன என்டு கலியாணம் கட்டி பத்து வரியங்களுக்குப்பின் குத்தலாய் சுட்டி நாண்டு கொண்டு நின்டவள்... இப்ப என்ன துக்கம் விசாரிக்கவோ வந்தவள்...? என்ன நினைப்போடு வந்திருக்கிறாளோ..., கடவுளே!.."

விக்கல் மெல்ல மெல்ல விழித்தார். கும்பல் கும்பலாக சொந்தம், பந்தம், அயல் சனக்கூட்டம் ஆங்காங்கே சிதறியிருந்தது. மறைந்தவனின் பெருமைகளை – அவன் முகமறியாதவர்கள் கூட அனுதாப அலைகளில் படகு விட்டுக்கொண்டிருந்தனர். தகவல் வந்ததிலிருந்து அவர் வாய் மூடி மௌனியாகி விட்டார். அழுகை. துயரம். இழப்பு எல்லாம் உறைந்து போய்...

மனைவி பக்கத்திலிருந்து பலமுறை அவரை உசுப்பி எடுத்துக் கொண்டிருந்தாள்.

"நெஞ்சுக்குள்ள கவலையை வைச்சிராதேயும். வாய்விட்டு அழுங்கோ..... இஞ்சருங்கோ சொல்லுறதைக் கேளுங்க... எனக்குப் பயமா இருக்கு..."

'பயமா? வாழ்க்கையில் பயப்பட இனி என்ன இருக்கு?... எங்களை பிள்ளைக்கு வைத்தும் காப்பாற்றுவான். அவன் நல்லா இருக்கவேண்டும் என்ட பயம் தானே இவ்வளவு நாளும் இருந்தது... இப்ப அவனே போய்விட்டான் ஆசையும்..., பயமும் போயிட்டுது...' அவர் மனதிற்குள் சிரித்துக் கொண்டார்.

வீடு சனங்களால் நிறையத் தொடங்கியது. யாரோ வந்து அவர் மனைவியைக் கேட்கிறார்கள்.

"அக்கா வறவைக்கு வெத்திலை... பாக்கு... சுருட்டு... சிகரெட் வாங்க வேணும். கதிரைக்கு சொல்லி விடவேணும்... தோரணம்... மாவிலைகட்ட வேண்டும்... வாசலில காப்புக்குலையோடு வாழைமரம் கட்டவேணும்... தெருவில எந்தளவு தூரம் வரை சோடிக்க வேண்டும்... மேளத்துக்கு சொல்லுறதா, வேண்டாமா..? எல்லாத்துக்கும் மேலாக 'பொடி' இல்லாமல் இழவென்னும் ஆயத்தப்படுத்தி என்ன பிரயோசனம். பேப்பருக்கு மரண அறிவித்தல் கொடுக்கவேணும்... மரணச்சடங்கு எப்ப.. எங்க.. எப்படி... யார்பேரில பேப்பருக்குக் கொடுக்கிறது... எல்லாத்துக்கும் மேலாக செலவுகாரியத்துக்கு ஆர் பொறுப்பாயிருப்பினம்... ஒண்டும் தெரியாம... இங்க இருந்து என்ன செய்யிறது... எழும்பு அக்கா... எழும்பு... எழும்பி வா!..." – யாரோ அவர் மனைவியை அழைத்துச் செல்கின்றனர். அகிலா அவசரம் அவசரமாகத் தாயைப் பின்தொடருகிறாள்.

'கனகசபையாருக்கு இப்பதான் சொல்லி அனுப்பிச்சினமோ?..' யாரோ அக்கறையுடன் விசாரிப்பதுபோல் எங்கோ 'குத்து' விடுகிறார்கள். அவர் ஒன்றையும் கவனிக்காதவராய் தொண்டைக் குழியிலிருந்து வாய்வழியே வரத்துடிக்கும் விம்மலை சால்வையால் பொத்தியபடி விசாலாட்சியின் சாய்வு நாற்காலியை நோக்கி ஓடுகிறார். விமலசிங்கத்தாருக்கு அந்தச் சூழ்நிலையிலும் காரியம் நல்லா நடக்குமென்ற நிம்மதி பிறக்கிறது. தன்ர கரத்தைப் பரிவுடன் பற்றிய அவர் கரத்தால் ஆசுவாசம் அடைகிறார்.

'என்னதான் நடந்தது?..'

'அதுதான் எனக்கும் புரியவில்லை... இராத்திரி பேசும்பொழுதுகூட ஒன்றுமே நடக்கேல்ல. ஆனால் பன்ரெண்டு, ஒருமணிபோல இப்படி செய்தி வருது...'

"ஆர் செய்தி அனுப்பினது...?"

'அவரோட வேலை செய்யிற.. ஒரே 'சுவீட்'டில இருக்கிற பிரெண்ட்டாம்... ஆனால் விபரமாக ஒன்றுமில்லை...' – விம்மல் வார்த்தைகளைத் தடை செய்கிறது.

கனகர் அவர் முதுகைத் தடவிக்கொடுக்கிறார். "பதட்டப்படாதை... நீயும் பிரஷர்காரன்... உனக்கும் ஏதாவது இல்லையொன்று வந்திட்டா... வீட்டில இருக்கிற பொம்பிளையளும், பெட்டையளும் அநாதையாகிறது..."

'ஓமடா கடைசிக் காலத்தில கை விட்டுவாறான்... தம்பி, நம்பிக்கையாயிருந்தான் கொஞ்சம் கடமையிருக்கு செய்ய... அக்காவின்ர குடும்பத்துக்கு வீடு வளவு என்டு நிறையச் செய்தாச்சு... இனி என்ர பிறகான வாழ்க்கையும் சிந்திக்கத்தானே வேண்டும்..?' என்று கூறியவன் இப்ப இல்லை என்டு..." – அவரின் பேச்சு குழறியது.

யாரோ அவசரமாக வந்து குறுக்கிடுகிறார்கள்.

'போனாம்... அங்கிருந்து போனாம். தம்பியைப் பேசட்டாம்...'

விமலர் அவசரமாக எழுகிறார். இடுப்பால் வேட்டி நழுவப்பார்க்கிறது. இந்த ஆவேசமும் துடிப்பும் எங்கிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தன. கனகரின் கைத்தாங்கலுடன் சென்று டெலிபோனை எடுக்கிறார். 'போனில்' பேசப் பேச மேனி நடுங்குகிறது. வியர்த்துக்கொட்டுகிறது. வாய் குளறுகிறது... அவரால் பேசமுடியவில்லை... அப்படியே... சரி... சரி... என்று சொற்களின் தெறிப்பில்தான் உரையாடமுடிகிறது. அவரைச் சூழ்ந்து எல்லாரும் ஆவலுடன் அவர் பதிலுக்காகக் காத்திருக்கின்றனர். அவர் 'போனை' வைத்துவிட்டு நிமிரவும்... 'என்னவாம்' என்பதுபோல் எல்லாரும் பார்க்கிறார்கள்.

"சிநேகிதப்பெடியன்தான் பேசினான். ஊருக்குத் திரும்ப எல்லா ஆயத்தங்களும் செய்து கொண்டிருந்தானாம். எல்லாருக்கும் என்ன என்ன தேவையெண்டு தேடி தேடித் சேமித்துக்கொண்டிருந்தவன் இரவு படுக்கையில... ஆரோ என்னவோ செய்திருக்கவேண்டும். பிள்ளை பிணமாக... ஐயோ!.." – விசுவம் வாய் விட்டுக் கதறினார்.

"அப்ப பொடி?..."

"அதைக்கொண்டுவர நாங்கள் ஆராவதுதான் போகவேணும்..."

"ஆர் போய்வாறது...?"

"போய்க் கொண்டுவார்றதெண்டால் கனக்கச் செலவழியுமே?..." – யாரோ கூட்டத்திற்குள் இருந்து குரல் கொடுக்கிறார்கள்...

கனகருக்குப் பற்றிக்கொண்டுவருகிறது.

"இந்த நேரம் பார்த்து காசு பணத்துக்கு கணக்குப்பாக்கிறியளே!..."

"இப்ப பாக்காம எப்ப பாக்கிறது? இப்ப உடம்பைக் கீறிக்கிழித்து இருப்பான்கள். முழு உடம்பையும் முழுமையாகப் பார்க்க முடியுமா? பாக்கப் பாக்க வேதனைதான் பெருகும்..." மூத்த மாப்பிள்ளை கூறுகிறார்.

யாரோ பலமாக அழுகிறார்கள். விசுவர் அங்கே பார்க்கிறார் தம்பியும், தங்கையும் தமயனின் வரவு பிணமாகக் கூட நிகழாது போலிருக்கிறதை எண்ணியா?... இனி இவர்களின் படிப்பும், கலியாணமும் என் கையிலா... என்னால் முடியுமா?.. இப்போதுதான் மூத்தவனின் 'இழப்பு மலைபோல்' தெரிகிறது...

அகிலாவின் குரல் குறுக்கிடுகிறது.

"அப்பா... அவர் சொல்லிறதிலும் நாயம் இருக்கு... இப்ப தம்பியின்ரபொடியைக் கொண்டு வாறதெண்டால் ஏராளமாகச் செலவாகும். இனி அவன்ர சம்பாத்தியம் வரும். சுகமாகக் காலம் தள்ளலாம் எண்டும் நினைக்க இடமில்லை. இங்கு வீட்டிலும் இரண்டுபேர் படிப்பு, கலியாணம் என்று காத்திருக்கினம். இருக்கிற சேமிப்பை இப்ப பொடியைக் கொண்டுவர செலவு செய்துவிட்டால்... பின்னால் எப்படி வாழ்க்கை நடத்திறது...

எங்கும் நிசப்தம் நிலவுகிறது. ■

அஞ்சலிகள்

நா. சுந்தரலிங்கம்

ஈழத்தின் தமிழ் நவீன நாடக மரபின் மூலவர்களில் ஒருவராக திகழ்ந்த நா. சுந்தரலிங்கம் அவர்கள் 03.03.2005இல் காலமானார். இவர் 70களில் கொழும்பை மையமாகக் கொண்டு வளர்ச்சியுற்ற நவீன அரங்க மரபில் தீவிரமாகச் செயற்பட்டவர். 'நடிகர் ஒன்றியம்' என்னும் அமைப்பு கொழும்பில் உருவாக்கம் பெறுவதற்கு மூலகாரணமானவர்களில் ஒருவர். இவரது 'விழிப்பு', 'அபசுரம்' போன்ற நாடகங்கள் பெரும் வரவேற்பைப் பெற்றவை. மிகச் சிறந்த நாடக நெறியாளர்கள் சிலரில் முக்கியமான ஒருவராகக் கருதப்படும் இவர், யாழ் பல்கலைக்கழகத்தின் நுண் கலைத்துறையின் வருகை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். சிறந்த வகையில் ஒளி விதானிப்பு, ஒப்பனை போன்றவற்றையும் மேற்கொள்ளக்கூடிய கலைஞனாகவும் விளங்கிய இவரின் இழப்பு நாடக உலகிற்குப் பேரிழப்பாகும். ○

செ. ரங்கன்

"கான இசை மணி" என அழைக்கப்பட்ட யாழ் மண்ணின் பிரபல்யம் வாய்ந்த இசைக் கலைஞரான ரங்கன் (செல்லத்துரை தனேந்திரக்குமாரன்) 10-03-2005 இல் காலமானார். 70,80களில் ஈழத்தின் மெல்லிசை உலகில் பிரகாசித்து நின்ற ரங்கன் அவர்கள் கிற்றார், ஓர்கன், புல்லாங்குழல், ஆங்கில மென்டலின், வீணை, சித்தார் எனப் பல இசைக் கருவிகளையும் மீட்டும் ஆற்றலை ஒருங்கே கொண்டு விளங்கியவர். அத்துடன், ஏராளமானவர்கள் இசை உலகில் சஞ்சரிக்க வழிசமைத்த பெருமைக்கும் உரியவர். அவரது 'ரங்கன் இசைக்குழு' இம் மண்ணிற்கு நன்கு பரிச்சயமானது. இவற்றுக்கப்பால், பல்வேறு இசைக்கருவிகளையும் திருத்தத்தக்க ஆற்றலையும் அவர் கொண்டிருந்தார். பல பக்தி இசை நாடாக்களுக்கு இசையமைப்பும் செய்துள்ளார். அவரது மறைவு இம் மண்ணின் இசை உலகில் வெற்றிடத்தை ஏற்படுத்தி உள்ளது. ○

இலக்கியப் பெருவிழா

இலங்கை கலாசாரம் மற்றும் தேசிய மரபுரிமைகள் அமைச்சின் ஏற்பாட்டில் இவ்வாண்டு செப்ரெம்பர் மாதத்தில் தேசிய கலை இலக்கியப் பெருவிழா நடத்தப்படவுள்ளது. இதற்கு முன்னதாக நாடளாவிய ரீதியில் பிரதேச, மாவட்ட, மாகாண மட்டங்களில் இவ்விழா நடைபெறவுள்ளது. இவ் விழாக்களில் இலக்கிய உரைகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், புத்தக, கலைக்கண்காட்சி என்பன இடம்பெறவுள்ளது. இவற்றுடன், கவிதை, கட்டுரை, சிறுகதை, குறுநாடகப் பிரதி, சித்திரம், நாட்டுப்புறப் பாடல், நடனம் ஆகிய போட்டிகளும் அனைத்துமட்ட விழாக்களின்போதும் நடத்தப்படவுள்ளது அனைவரும் பங்குபற்றக்கூடியதாக ஒழுங்கு செய்யப்படும் இப்போட்டிகளுக்கான பரிசில்கள் அந்த அந்த மட்டங்களில் நடைபெறும் இலக்கிய விழாக்களின்போது வழங்கப்படவுள்ளது.

இப்போட்டிகள் தொடர்பான விபரங்கள், படிவங்களை பிரதேச செயலகங்களில் உள்ள கலாசார உத்தியோகஸ்தர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும். ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கைகளை மற்றும் நம்பியவர்களாக நடப்போம்

[illegible]

[illegible]

காற்றோடு போனது

[illegible]

[illegible]

மனிதம் புதைந்து போனது

உடலை கொண்டு போனது

அறிவியலில் வல்லவரும் வாயடைத்துவிட்டனர்.

அழிந்தன தெய்வங்களும்

மலைமலையாய் உடைந்தனர்.

எங்கிருந்து தவிக்கின்றோம் உறவுகளை — கடல்

எங்கிருந்தும் கொண்டு [illegible] அழுகையை.

சொல்லுங்களேன்!

சொல்லிவிடு!

"சுனாமி" ஒரு பூனையை

[illegible]!

சுனாமியே பின்னர் ஏன்

சுருண்டு போனாய்?

இயற்கை

இயற்கை எழுந்த போதா

இந்த அனர்த்தம் நிகழ்ந்தது?

இல்லையே

நாங்கள்

செயற்கைச் சாதனைகளால்

இயற்கையைப் பூட்டி

தூங்க நினைத்த போதே

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இயற்கையிடம்

[illegible] நாங்கள்

அழிந்தும் மீள வேண்டுவோம்

நிலவில் காலூன்றி

நிலத்தடியில் வெடிவைத்து

[illegible]

நாங்கள் [illegible]

[illegible]

அறிவோம் - நாங்கள்

[illegible]

[illegible]

[illegible]

இன்று நாங்கள்

சொந்தங்களை இழந்து

சோகங்களை சுமந்து

வெந்து நொந்து

வேதனையில் வாடி

சோதனையில் மூழ்கி

நீந்தி நிலைக்கொள்ளாமல்

[illegible].

இனி என்னசெய்வோம்?

அழுதழுது ஆறுவது எதை.

எழுவோம்

புது உலகமைப்போம்,

[illegible]

இயற்கையோடு

வாழத்தொடங்குவோம்.

[illegible]

நீரைத் துடைத்தும்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

நாளை ஜெயம்.

மு. யாழவன்

திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைமுகம் நேற்றும், இன்றும்...

வாசகர்களுக்கு வணக்கம்!

'கலைமுகம்' கலை இலக்கிய சமூக இதழ் 16 ஆவது ஆண்டில் கால் தரிக்கும் வேளையில் - அதன் தொடர்வருகைக்கான பொறுப்பை புதியவர்கள் நாம் ஏற்றிருக்கின்றோம். ஈழத்தில் சஞ்சிகை வெளியீடு என்பது மிகுந்த சிரமத்திற்கும், கடினத்திற்குமுரிய பணி என்பது உணரப்பட்ட போதிலும் – ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் - அப்போதிருந்த காலத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு – திருமறைக் கலாமன்றம் தனது பன்முகப்பட்ட பணிகளில் ஒன்றாக 'கலைமுகம்' என்ற கலை, இலக்கிய, சமூக இதழை முத்திங்கள்களுக்கு ஒருமுறை வெளியிட ஆரம்பித்தது.



திருமறைக் கலாமனறம் என்ற கலை பண்பாட்டு நிறுவனத்தின் உத்தியோகபூர்வ வெளியீடாக அமைந்த 'கலைமுகம்' சஞ்சிகையின் முதல் பிரசவம் 1990 தை – பங்குனி இல் நிகழ்ந்தது. எனினும், அதே ஆண்டின் சித்திரை – ஆனி வரை இரண்டு இதழ்கள் வெளிவந்த நிலையில், யாழ் நகரில் மையங்கொண்ட மிக மோசமான போர்ச் சூழலால் சிறிது காலங்களுக்கு அதன் வரவு தடைப்பட்டு, மீண்டும் தை – பங்குனி 1992 முதல் 1996 ஆம் ஆண்டின் இறுதிவரை தொடர்ச்சியாக காலாண்டுக்கொருமுறை வெளிவந்தது. அதன் பின்னர் இன்றுவரை கலைமுகம் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தாலும் பல்வேறு காரணங்களால் காலாண்டுக்கொருமுறை அதன் வரவு நிகழவில்லை. எனினும் இந்த இதழுடன் சேர்த்து 40 இதழ்கள் இதுவரை வெளிவந்துள்ளது என்பதே மனதிற்கு நிறைவையும் மகிழ்ச்சியையும் தருகின்றது. அதிலும் இன்னுமொரு சிறப்பு யாதெனில், திருமறைக் கலாமன்றம் கலைக்கான பணியில் 40 ஆண்டுகளை நிறைவு செய்யும் இவ் ஆண்டில் 40 ஆவது இதழும் பொருந்தி வந்திருப்பதுதான்.



தனியே சஞ்சிகை வெளியீட்டுடன் மட்டும் நின்றிருந்தால் அதன் தொடர் வருகையில் முழுக்கவனத்தையும் செலுத்தலாம். திருமறைக் கலாமன்றம் தனது பன்முகப்பட்ட பணிகளில் ஒன்றாக இதனையும் செயல்படுத்தும்போது தவிர்க்க முடியாமல் அதன் வரவில் தாமதங்கள் ஏற்படுகின்றன.

அதற்கான காரணங்கள் அனைவராலும் புரிந்துகொள்ளக்கூடியவையே இதுவரை வெளிவந்த கலைமுகம் அனைத்து இதழ்களையும் ஒருசேரப் பார்க்கின்றபோது அவை ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் பெறுமதி மிக்கவையாக வெளிவந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிடுவதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









மகிழ்வடைகின்றோம். அதற்கு ஒரு உதாரணமாக, 'கலைமுகம்' முன்னைய இதழ்கள் காலம் கடந்தும் இன்றுவரை விற்பனையாகிக் கொண்டிருப்பதைக் குறிப்பிடலாம். ஆய்வு முயற்சிகள், இதர தேவைகளுக்காக மாணவர்கள் உட்படப் பலர் பழைய இதழ்களைத்தேடி மன்ற அலுவலகத்திற்கு வந்து செல்கின்றனர். ஒரு வகையில், இச்சமூகத்தின் தேவையுடன் இணைந்து கலைமுகம் வெளிவருகின்றது என்பது நிறைவைத் தருகின்றது.

இதுவரை வெளிவந்த இதழ்களில் நாட்டுக்கூத்து, கிராமியக் கலைகள், நாடகம், சிற்பம், ஓவியம், கவின் கலைகள் என்பவற்றுக்குச் சிறப்பிதழ்கள் பல வெளியிடப்பட்டுள்ளதுடன், சிறுவர் சிறப்பிதழ், சிறுகதைச் சிறப்பிதழ், ஐரோப்பியக் கலைப்படைப்புச் சிறப்பிதழ்களும், மாவட்டச் சிறப்பிதழ்களாக திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டச் சிறப்பிதழ்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றுடன் 1996 ஆம் ஆண்டின் முதல் மூன்று இதழ்களும் இலங்கைக்கு அப்பால் லண்டன், கனடா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் அந்தந்த நாடுகளில் இயங்கும் திருமறைக் கலாமன்றங்களின் ஊடாக அச்சிடப்பட்டு வெளிவந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில், கடந்த காலங்களில் 'கலைமுகம்' இதழின் பொறுப்பாசிரியர்களாக இருந்து அதனை வெளியிட ஆர்வமுடன் உழைத்தவர்களையும், அதன் இதர பணிகளில் இணைந்து நின்றவர்களையும் நன்றியுடன் நினைக்கின்றோம்.

அத்துடன் ஒவ்வொரு இதழ்களையும் தங்களது ஆக்கங்களால் அணிசெய்த அனைத்து ஆக்க கர்த்தாக்களையும் நன்றியோடு நினைக்கின்றோம்.

இவற்றுக்கப்பால், கலைமுகத்தின் ஆரம்பம் முதல் இன்று வரை அதன் பிரதம ஆசிரியராக இருந்து, அதன் வாழ்வுக்குப் பிரதான உந்து சக்தியாக இருந்துவரும் திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேரருட்திரு நீ. மரியசேவியர் அடிகளாரை நன்றியோடு நினைக்கின்றோம். கலைத்துறை தளத்தில் என்றைக்கும் காலத்தின் விழுதாகி, வேரூன்றி நிற்கும் அவரின் வழிகாட்டலில் 'கலைமுகம்' தொடர்ந்தும் பயணிக்கும். காலத்திற்கேற்ப புதிய புதிய மாற்றங்களை தன்னுள் புகுத்தும் அனைவராலும் விரும்பப்படுகின்ற ஓர் இதழாக அது தன்னை நிலைநிறுத்திக்கொள்ளும்.

உங்களது ஆதரவுகளையும் எதிர்பார்த்தபடி

அன்புடன்,

கி. செல்மர் எமில்

(பொறுப்பாசிரியர்)















ஆற்றுப்படுத்தலில் நம்பிக்கையை வளர்த்தல்

வி. பி. தனேந்திரா

தெற்காசிய நாடுகளில் ஏற்பட்ட சுனாமியின் தாக்கத்தினால், அநேகர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலர் தமது மனவடுக்களை மறந்து மீண்டும் தமது இயல்பு நிலைக்கு திரும்பி வருகிறார்கள். இன்னும் ஒரு சிலர் தமது மனவடுநிலையில் இருந்து இயல்பு வாழ்வுக்குள் செல்ல நீண்டகாலம் எடுக்கும். இவ்வுலகத்தில் மனிதர்கள் பல எதிர்பார்ப்புடனும் ஆசைகளுடனும் வாழ்கின்றார்கள். இவை கிடைக்காமல் போகின்றபோது அவற்றை தாங்கிக்கொள்வது மிகவும் கடினம். ஆனால் சுனாமி திடீரென்று ஏற்பட்டது. ஒரு நொடிப்பொழுதில் உயிர்களையும் - சொத்துக்களையும் அழித்துச்சென்றது. இந்த எதிர்பாராச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் உடனே தமது இயல்பு வாழ்வுக்கு திரும்புவார்கள் என்று கூறிவிட முடியாது.

எனினும் இச்சூழ்நிலையில் தமது மனச்சோர்வு நிலையில் இருந்து விடுபடல் வேண்டும். அதனைக் குறித்து வேதனைப்படுவதினால் பயனில்லை, ஆகவே, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவவேண்டும் என்ற உணர்வுள்ள மக்களும் இருக்கிறார்கள். இவர்களது வாழ்வு பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. ஜனவரி மாதம் இலங்கை வந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானிடம் சுனாமியில் உங்களைப் பாதித்த விடயம் எது என்று கேட்டபோது "சுமாத்திராவில் ஒருவர் தனது குடும்ப அங்கத்தவர்கள் அனைவரையும் இழந்துவிட்ட போதிலும் ஏனைய மக்களுக்கு உதவவேண்டும் என்பதற்காக சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணியில் ஈடுபட்டு வந்தமையே" என்று கூறியிருந்தார்.

சுனாமியின் தாக்கத்தினால் மனதளவில் பாதிக்கப்பட்ட மக்களே இன்று அதிகம். குடும்ப வருவாயை ஈடுசெய்த கணவனின் இழப்பும் – பெற்ற குழந்தையை கண்முன்னே கடல் அள்ளிக்கொண்டு சென்றதும் – கடினப்பட்டு சேர்த்த சொத்துக்களை ஒரு நொடிக்குள் கடல் சூறையாடியதும் – வாழ்வுக்கு உறுதுணை என்று - நம்பியவைகளின் இழப்பும் – சமூக வாழ்வுக்கு முக்கியமானது என்று கருதி தமது நேரம், பணம் முதலியவற்றை அர்ப்பணித்து சேர்த்த, அரியபொருட்களின் இழப்பும், இவ்வாறு பாதிப்புக்கள் நீளும். இவை மனதிலே மீள மீள ஏற்படும்போது மனச்சோர்வு ஏற்பட்டு, பல பக்கவிளைவுகளை உருவாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. இதற்கு தீர்வு காண்பது அவசியம். தீர்வு காணாவிட்டால் பெரும் தாக்கங்களை உள – உடல் ரீதியில் உண்டுபண்ணும். அத்துடன் மருத்துவசிகிச்சை முறைகளையும் மேற்கொள்ள வேண்டிவரும். இங்கு மனோரீதியில் வலுவை ஏற்படுத்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆற்றுப்படுத்துனர்கள் - மற்றும் சமூக மக்களினதும் பொறுப்புணர்வு அவசியம். இதை மறந்து யாரும் செயற்பட முடியாது.

நாம் ஒற்றையர் அல்ல

பொதுவாக துன்பங்கள் நம் வாழ்க்கையில் ஏற்படுகின்றபோது, ஏமாற்றத்தையும் – தவறான தீர்மானத்தையும் – தனிமையுணர்வையும் - கோபத்தினையும் – தற்கொலை முயற்சிகளையும் உண்டாக்கின்றது. இச்சந்தர்ப்பங்களில் மற்றவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகவும் முக்கியம். ஒருவர் துன்பம் அடைகின்றபோது, "ஒருவரின் ஆதரவற்ற உணர்வே மிகப்பெரிய தீயசக்தி செயல்படுகிறது என்ற எண்ணத்தை அவரில் ஏற்படுத்துகின்றது" என்பார் சரித்திராசிரியர் ஜோஸப் பார்டன்.

பல்வேறு காரணங்களுக்காக மற்றவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை. நாம் முற்றிலும் தனித்து வாழ முடியாது. விலங்குகள் இயல்புணர்ச்சியினால் கூடிவாழ்கின்றதை காணலாம். யானைகள் தங்கள் குட்டிகளை பாதுகாத்துக் கொள்வதற்காக கூட்டம் கூட்டமாகச் செல்கின்றன. காகங்கள் உணவு உண்ணும்போது ஏனைய காகங்களை அழைத்து உண்ணுவதையும் காணலாம். இவ்வாறு விலங்குகள் அநேகம் கூடி வாழ்வதை பார்க்கும்போது மனிதர்கள் தனித்து ஒதுங்கி வாழ முடியாது. ஏனெனில் மனிதன் சமூகப்பிராணி. இதனால் மற்றவர்களின் உதவி அவனுக்குத்தேவை.

மனிதர்களிடம் வளர்ந்து வருகின்ற மிகப்பெரிய பிரச்சினை தனித்து வாழ்வது. தம்மிடம் இருக்கின்ற உணர்வுகளை பகிர்ந்து கொள்ளாது மரத்துப் போனவர்களாக இருப்பது. இதனால் துன்பம் ஏற்படும்போது அதனைத் தாங்க முடியாது வாழ்வே வெறுத்துப்போனது போன்ற உணர்வு ஏற்பட்டு, அதனை எதிர்கொண்டு வாழசக்தி அற்றவராக இருக்கின்றார்கள். தற்கொலை முயற்சிகளுக்கு காரணமும் இதுவே ஆகும்.

"நம்முடைய வாழ்க்கையையும் நம்முடைய நடவடிக்கைகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது, கிட்டதட்ட நம்முடைய எல்லா செயல்களும் ஆசைகளும் மற்றவர்களுடைய வாழ்கையோடு பின்னிப் பிணைந்திருப்பதை நாம் விரைவில் அறிந்து கொள்ளுகிறோம்.... மற்றவர்கள் விளைவித்த உணவுப் பொருட்களை உட்கொள்கிறோம். மற்றவர்கள் நெய்த ஆடைகளை அணிகிறோம். மற்றவர்கள் கட்டிய வீடுகளில் வசிக்கிறோம் .... ஒரு நபர் அந்த நபராக இருப்பதற்கும், அந்த நபராக முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கும் தலையாய காரணம் அவருடைய ஆள்த்தன்மை அல்ல. ஆனால், அவர் மனித சமுதாயத்தின் பாகமாக இருப்பதே ஆகும். இந்த சமுதாயமே தொட்டில் முதல் சுடுகாடு வரை அவருடைய உலக மற்றும் ஆன்மீக வாழ்க்கை மீது செல்வாக்கு செலுத்துகிறது." இவ்வாறு பிரபல விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூறுகின்றார்.

ஒருவரின் பிறப்பில் இருந்து இறப்பு வரை, சமூகச் செல்வாக்கு அவரிடம் பிரதிபலிக்கின்றது. இதனால் சமூகத்தில் இருந்து ஒதுங்கி வாழமுடியாது. அத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமும் ஒரு தனிநபரை ஒதுக்கி வைக்கக்கூடாது. பல காரணங்களுக்காக சமூகம் சிலரை ஒதுக்கி வைக்கின்றது. இது ஆரோக்கியமற்ற தன்மையே ஆகும்.

ஒன்றுபாய தனித்து வாழ்கின்றபோது, கருத்துப் பரிமாற யாரும் இருக்கமாட்டார்கள். அவர்களுக்குரிய பாதுகாப்பு கேள்விக்குறியாகவே இருக்கும். அவர்கள் இழைக்கின்ற குற்றங்களை கண்டித்து திருத்த யாருமில்லாதபடியால் குற்றங்கள் பெருக வாய்ப்பிருக்கின்றது. இல்லாமல் அவர்கள் செய்கின்ற நல்லசெயல்களைப் பாராட்ட – தட்டிக்கொடுக்க யாருமே இல்லாத பெரும் அவலமும் காணப்படும்.

இத்தகைய நிலைமைகளில் இருந்து ஏற்பட்டபோதும், தனிப்பட்ட வாழ்விலும் மனத்தெளிவற்ற துன்பியல் அனுபவத்தை ஏற்படுத்துகின்றது. அவை அவர்கள் வாழ்வியலில் பலவேறு மனநிலை உணர்வுகளையும் - நடத்தைகளையும் தோற்றுவிக்கின்றன.

- ❖ பதட்டம்
- ❖ இனம்புரியா அமைதியின்மை
- ❖ உணவில் நாட்டம் இன்மை
- ❖ பாலியல் உறவில் ஈடுபாடற்ற தன்மை
- ❖ எதிலும் ஆர்வமற்றநிலை
- ❖ உடலில் சக்தி குறைந்தது போன்ற உணர்வும் அசதித்தன்மையும் காணப்படுதல்
- ❖ இறந்த உறவுகளை மீள மீள நினைவுபடுத்திக் கொள்ளுதல்
- ❖ பாதுகாப்பற்ற உணர்வு
- ❖ முன்பு விரும்பியவை தற்போது விரும்பாத ஒன்றாக இருத்தல்
- ❖ முடிவுக்கு அடையாதல்
- ❖ மற்றவர்களுடன் உறவாட விருப்பமின்மை
- ❖ தற்கொலை முயற்சி
- ❖ வாழ்வதற்கு என்று எந்தக் காரணமோ இல்லை என்னும் நிலை
- ❖ எல்லாமே துண்டிக்கப்பட்ட அனுபவம்
- ❖ வெறுமை தனிமை நெருடும் பயம்
- ❖ வாழ்வு வெறுத்தது போன்ற உணர்வு

இப்படிப்பட்ட மனநிலை தன்மைகொண்ட தனியன்களுக்கு உடனடியாக ஆற்றுப்படுத்தல் நடவடிக்கையில் இறங்கவேண்டும். இங்கு கார்க்கவ் (Carkhuff) என்பவரின் சிகிச்சை அளிக்கும் மாதிரியானது ஆற்றுப்படுத்தலுக்கு உறுதுணையாகும். "உடனிருந்து கவனித்தல், - உள் நிலை வெளிப்படுத்த பதிலளித்தல், - அவர்கள் எப்படி இருக்கிறார்கள் எப்படி இருக்க விரும்புகிறார்கள் என்று அறிவுறுத்தல், வழிகாட்டுதல், செயற்படத் தூண்டுதல்" என்பனவாகும்.

ஒத்துப்போதல்!

துன்பங்களில் இருப்பவர்களுடன் ஒத்துழைக்கும் தன்மையும், ஓர் ஆற்றுப்படுத்தும் வழி முறையாகும். இதை யாரும் செய்யமுடியும். மற்றவர்களின் நிலையை, உணர்வுகளை, உள்நோக்கங்களை புரிந்துகொண்டு இயல்பாக ஒத்துப்போகும் தன்மை என்று அகராதி கூறுகின்றது. மற்றவரின் துன்பநிலைகளை உற்று நோக்கி பொருத்திப் பார்த்துக்கொள்வது, அத்துன்பம் எனக்கு ஏற்பட்டால் எப்படி இருக்கும் என்ற நிலையை அறிதல் ஆகும். எப்போதும் ஒத்துப்போதல் என்பது மற்றவரின் சூழ்நிலையை புரிந்து கொள்ளுதல். அந்த சூழ்நிலை காரணமாக அவருக்கு ஏற்படும் உணர்ச்சிகளை புரிந்துகொள்ளுதல், மற்றவருக்கு ஏற்படும் அந்த வலியை புரிந்து கொள்ளுதலும் ஆகும்.

"மற்றொருவரின் வேதனையை உங்களால் தணிக்க முடிந்தால் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை வீணாகவில்லை" என்பார் ஹெலன் கெல்லர். வாழ்கின்ற இந்த உலகத்தில் பலருக்கு மற்றவர்களின் துன்பங்களைக் கண்டு தெரியாது இருப்பது ஏனோ? மற்றவர்களுக்கு ஏற்படும் துன்பங்களை துடைக்க வாய்ப்புக் கிடைக்கும்போதும் நாம் அதனை உணராது இருந்திருக்கலாம். இதற்கு காரணம் மற்றவரின் தேவை என்னவென்பதை உணராத்தன்மை ஆகும்.

ஒத்துப்போகும் தன்மை எம்மிடம் இருந்தால் மற்றவரிடம் நிச்சயமாக கருணை – கரிசனை – அன்பு – அனுசரிப்பு என்ற தன்மைகள் உருவாகும். பிறருடைய இடத்தில் எம்மை வைத்துப் பார்க்கத் தேவையில்லை

எதிர்பார்க்கின்றோம்...

'கலைமுகம்' காலாண்டு கலை, இலக்கிய, சமூக இதழுக்கு படைப்பாளிகளிடமிருந்து சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், கலை இலக்கியம் சார்ந்த சமகால நிகழ்வுகளின் பார்வைகள், தகவல்கள் என்பவற்றை எதிர்பார்க்கின்றோம். அடுத்த இதழுக்கான உங்களது ஆக்கங்களை 31.05.2005 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். மற்றும் கலைமுகம் பற்றிய உங்களது கருத்துக்களையும் எதிர்பார்க்கின்றோம். ஆக்கங்கள் மற்றும் கருத்துக்களை அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
'கலைமுகம்',
திருமறைக் கலாமன்றம்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால், நம்மைப்போல பிறரை நேசிக்க முடியாது. பிறர் வாழ்வு மீது கரிசனை காட்டவும் முடியாது.

ஒத்துப்போகும் தன்மை எம்மிடம் இயல்பாக இருக்கும் ஒன்று. இவற்றை வளர்த்துக் கொள்வது அவசியம். எடுத்துக்காட்டாக ஒருவர் உடல்மெலிந்து – சீழ்வடியும் புண்களுடன் வீதியால் செல்லுகின்றபோது, எமது மனம் நெகிழ்ந்து போகின்றது. இத்தன்மையை வளர்த்துக் கொள்வது சிறப்பானது.

உற்றுக்கேட்டல்!

துன்பங்களும் துயரங்களும் ஒருவரை மனோரீதியாக நிலைதடுமாற வைக்கின்றது. இங்கு அவர்களுடன் உரையாடுகின்றபோது, அவர்கள் கூறுகின்ற மொழிகளை உற்றுகேட்டல் வேண்டும். நாம் எந்தளவு மற்றவரிடம் கதைகளை உற்றுக்கேட்கின்றோமோ அந்தளவு அவரும் ஆர்வமாக தனது கருத்தியல்களை, உணர்ச்சிகளை கொட்டித் தீர்த்துவிடுவார். உற்றுக்கேட்பதன் மூலம் அவருக்கு நம்பிக்கை பிறக்கும். தன்மீது கரிசனை காட்ட ஒருவர் இருக்கின்றார் என்ற உணர்வு தோன்றும்.

பாதிக்கப்பட்டவர் தற்கொலை உணர்வுக்கான காரணம் எதுவாக இருந்தாலும் சரி, பொறுமையும், புரிந்துகொள்ளும் பக்குவமும், அனுதாபமும் மிகுந்த ஒருவரிடம் மனதிலுள்ளதை கொட்டிவிடுவது மிகவும் நல்லது. இவர்களுக்கு செவிகொடுத்துக் கேட்டும் மனமுள்ள குடும்ப அங்கத்தவர்களும் நண்பர்களும் உதவலாம் அன்பும் - அனுதாபமும் காட்டுவதன் மூலம் உதவி செய்ய முடியும்.

நன்றாக செவிகொடுத்துக்கேட்கும்போது, அவரது நடத்தை உணர்ச்சிகள் என்பவற்றையும் கூர்ந்து கவனித்தல் வேண்டும். இன்னுமாக இங்கு கவனிக்கவேண்டிய விடயம் ஒருவர் தனது அந்தரங்க விடயங்களை கூட, உங்கள் மீது நம்பிக்கை கொண்டு கூறுகின்றபோது, நீங்கள் இரகசியம் பேணுவது அவசியம் ஆகும். மாறாக, அவர் கூறிய கருத்துக்கள் – உணர்ச்சி வெளிப்பாடுகளை கேலிக்கூத்தாக மாற்றக்கூடாது. இவ்வாறு செய்தால் பாதிக்கப்பட்டவர் இன்னும் அதிகமாக பாதிக்கப்படுவார் இத்தன்மைகள் இன்று அதிகமாகிச் செல்வதினால்தான் யாரும் தங்கள் இரகசியங்களை யாரிடமும் சொல்லாது மனதுக்குள் பொத்தி வைத்திருக்கின்றார்கள். தனிமையுணர்வுக்கும் இதுவே காரணம். பொதுவாக பலர் இன்று தமது மனதுக்குள் இருக்கும் துன்பக்கனலை வெளிப்படுத்த முடியாது தவிக்கின்றார்கள் என்பது உண்மை. ஒருவர் தன்னை வெளிப்படுத்துவதற்கு மற்றவர் மீது நம்பிக்கை பிறக்கவேண்டும் இந்த நம்பிக்கைக்குரிய பாத்திரமாக நாம் மாறவேண்டும்.

யதார்த்த நிலைகுறித்து விமர்சனம்!

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி வழங்குவது எவ்வளவு முக்கியமோ, அந்தளவுக்கு அதிமுக்கியமாக காணப்படுவது உள ஆற்றுப்படுத்தல் முறைகள் ஆகும். இன்று அரசாங்கமும் – அரச சார்பற்ற நிறுவனங்களும் ஏராளமான நிவாரணங்களை கொடுக்கின்றது. அந்தளவுக்கு உளநலச்சேவைகள் நடைபெறுகின்றனவா என்றால் அவை கேள்விக்குரிய

ஈரம் அற்ற புன்னகை

கடல் மணலின் சிறு குழிகளெங்கும்
நிறைந்து போயிருந்த
எனது முன்னைய பாடல்களை
அள்ளிப் போயிற்று அலை

கரையில் திட்டு மணல் மேல்
அசையாமல் இருந்தபடி
பாடிக் கொண்டிருக்கிறேன்.
மீண்டும் அது
அள்ளிப் போகிறது
எனது பாடல்களை

பாதச் சுவடுகளை மணலில்
பதித்து வீடு திரும்புகிறேன்
அதனையும் எடுத்துப் போகிறது அலை

என் தூக்கத்தை கலைத்து விட்டு
துள்ளிச் சிரிக்கும் சிறு பிள்ளையாய்
என்னுள் விரிக்கிறது தன்னை

என் பாடல்களையும், பாதச் சுவடுகளையும்
விழுங்கிய பின்னும்
படர்த்த முனைகிறது
என் முன்
தன் புன்னகையை.

தானா - விஷ்ணு
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகவே இருக்கின்றது.

"இது அழுவதற்கான நேரம் அல்ல. எழுவதற்கான நேரம். எல்லாத் தரப்பினரும் அனைவரும் உடனடியாக செயற்படவேண்டும். இலங்கை அரசு வெறுமனே நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று கோஷத்தை போதிப்பதைப்போல நாமும் வெறும் கோஷங்களை எழுப்பக்கூடாது. நாங்கள் அமைதியைக் கட்டியெழுப்புவோம் என்ற வாசகத்தை மனதளவில் உறுதியாக்கிச் செயலிலும் காட்டுவோம். மக்களது மனோநிலை மிகவும் மோசமாக இருக்கின்ற நிலைமையில் இவர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும்." என்கின்றார் சர்வோதய நிறுவனத்தின் பணிப்பாளர் அருள்தந்தை மி. ஜெயன் அடிகளார். (யாழ். தினக்குரல் 30 ஜனவரி 2005)

இவ்வாறு பணியாற்றுகின்ற அறிவுறுத்துநர்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பணியாற்றுவதற்கு பயிற்சிபெற்றவர்கள். 'சுனாமி' இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்ற முறையில் செயற்பட இவர்களால் முடியாது. இதற்குரிய உளவியல் பயிற்சிகள் அவசியம் வேண்டும் என்பதை உளவியல் மேதைகள் கூறுகின்றார்கள்.

அநேக நிறுவனங்கள் வாரக்கணக்கான பயிற்சிகளை கொடுத்து உடன் அனுப்பிவைக்கும் முயற்சியை மேற்கொண்டது, மேற்கொண்டுவருகின்றது. இது வரவேற்கத்தக்கது. ஏனெனில் உடனடித்தேவைக்கு இதுவே போதுமானது. இதனைத்தான் செய்யமுடியும். எனினும் ஒரு நீண்ட காலத்திட்டம் கொண்டு செயற்படுத்தல் மிகவும் ஆரோக்கியமானது. இதற்குச் சில நிறுவனங்கள் முன்வந்து செயற்படுகின்றது. பாதிக்கப்பட்ட பிரதேச மக்களில் இருந்து தெரிந்தெடுத்து அவர்களுக்கு போதிய பயிற்சியினைக்கொடுத்து வருகின்றார்கள். இதற்கு அவர்கள் கூறும் காரணம், இந்த பாதிக்கப்பட்ட மக்களுடன் வாழப்போகின்றவர்கள் இவர்கள். இவர்களுக்கு ஏற்படுத்தும் பணி இலகுவானதாக இருக்கும். உரிய முறையில் செயற்படுத்தக் கூடியதாக இருக்கும். மாறாக வெளிப்பிரதேசங்களில் இருப்பவர்களுக்குத் தினமும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்குச் சென்று அறிவுறுத்தும் பணியினை மேற்கொள்வது மிகவும் கடினமானதாகும். இதனால் இம்முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறுகின்றனர். இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளக்கூடியது. இதற்கு அரசு முழுமூச்சுடனும், ஆதரவையும் கொடுத்து, வேண்டிய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் முழுமையான இலங்கையை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை முகாம்களில் தங்கவைத்து அவர்களுக்கு ஏராளமான நிவாரணப் பொருட்களை அரச - அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருகின்றது. இதனை குறை என்று சொல்வதா அல்லது குறைவில்லையா என்ற விவாதத்திற்கு அப்பால், அந்த மக்களை தங்கவைத்திருக்கின்ற போக்கொன்று மேலோங்கியுள்ளது என்பது உண்மையாகின்றது. பாதிக்கப்பட்ட மக்களைச் சென்று பார்வையிடும்போது, அவர்கள் கேட்கும் கேள்வி "நீங்கள் என்ன கொண்டு வந்தீர்கள்?, என்ன தரப்போகிறீர்கள்?, பதியப் போகிறீர்களா?" என்பதாகும். இதில் இருந்து அந்த மக்கள் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து இருக்கின்றார்கள், மற்றவர்களில் தங்கியிருப்பதாக தெரிகின்றது. இந்த உதவி செய்வதை தவறென்று சொல்வது நோக்கமல்ல. மாறாக அந்த மக்களை உழைப்பதற்கு சக்தி கொடுக்கவேண்டும். இழந்துபோன நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பவேண்டும். இதுதான் காலத்தின் தேவையாகும்.

மீள் குடியமர்வு பணிகள் கூட பாதிக்கப்பட்ட மக்களைக்கொண்டு செய்விப்பதற்கு பலர் முன்வரவில்லை. குடியமர்வு பணிகளை மேற்கொள்கின்ற நிறுவனங்கள் ஒவ்வொரு கிராமங்களுக்கும் தாம் கூட்டிச் செல்லும் பணியாளர்களைக் கொண்டே செயற்படுகின்றார்கள். இதில் மாற்றம் காணவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களை செயற்பட வைக்கவேண்டும். மீள புத்தெழுச்சியுடன் வாழ நம்பிக்கையூட்ட வேண்டும். அவர்களுக்குள் ஆர்வம் என்ற அக்கினிக்குஞ்சை புதைக்க வேண்டும்.

சுனாமி தாக்கம் உண்டான பிரதேசங்களுக்கு நிவாரணம் கொண்டும், அழிவுகளைப் பார்வையிடவும் செல்லுகின்ற மக்கள் பாதிக்கப்பட்ட மக்களோடு உரையாடுகின்றபோது மீள மீள அவர்களின் பாதிப்பைக் குறித்து கேட்டு வருவதனால் அதிலும் ஒருவித சலிப்புத்தன்மையும், சோர்வும் உண்டாகின்றது. இவற்றை பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்து நன்றாக அறிய வேண்டிக் கூடியதாக இருக்கின்றது. மேலும் பாதிக்கப்பட்ட மக்கள் எழுப்புகின்ற நம்பிக்கையற்ற கேள்விகளுக்கு உரிய முறையில் பதிலளிக்காது நம்பிக்கையை இன்னும் வலுக்குறைய செய்கின்ற தன்மையும் அதிகமாக நடைபெறுகின்றது. இந்த நிலைமைக்கு தெளிவான பதில்களைச் சாதிப்பதே சிரமமானதாகும்.

ஆகவே இன்று தேவையான சிகிச்சை முறை 'நம்பிக்கை உணர்வை வளர்த்தல்' ஆகும். இந்த நம்பிக்கை உணர்வுதான் வாழ்வதற்கான உந்துதலை கொடுக்கும், வாழ்க்கையின் இரகசியத்தை புரிந்து கொள்ளவைக்கும்.

நம்பிக்கை உணர்வு குறைவடைகின்றபோது எதிர்மறையான கண்ணோட்டம் இன்னும் மேலோங்குகின்றது. ஒருவித ஆயுள் காலச் சோகமும் அதிகரித்துச் செல்கின்றது. இந்த நம்பிக்கை உணர்வு அறுபட்டு பயமும் - பதட்டமும் - அச்சமும் குடிகொண்டு வாழ்வே வெறுப்பாகிவிட்டது. இனி வாழ்ந்து என்ன பயன்? இப்படிதான் மேலோங்கி வந்து தற்கொலை முயற்சிக்கு வாழ்வை நகர்த்தி செல்கின்றது. இன்னுமாக மிகை மனஅழுத்தம் ஏற்பட்டு மனநோயாளியாக மாறுகின்ற அபத்தமும் உண்டாகின்றது.

இழப்புக்கள் வாழ்க்கையின் தவிர்க்க முடியாதவை. இந்த இழப்புக்களுக்காக நாம் அப்படியே இருக்கமுடியாது. இழந்தவர்களுக்கு நன்றிக்கடனாக ஏதாவது செய்ய வேண்டும். அவர்களது விருப்பங்களை நிறைவேற்றவேண்டும். இதற்கு பொறுப்புடன் செயற்படவைப்பதும், அக்கறையுடன் சந்தித்து உரையாடுவதும், உணர்ச்சிகளை பகிர வாய்ப்பளிப்பதும், உதவுவதும், வேறு உதவிகளை வழிகாட்டுவதும் வழங்குவதும், வழிகாட்டலின் அவர்களுடன் இருத்தலும் சிறப்பான முறைகள் ஆகும். இவை பாதிக்கப்பட்ட மக்கள் வெறுமனே குறைகளை அல்லாமல் அன்பை உணர்த்தும். அவர்களுக்கு எப்போதும் அன்பு காட்டி ஆதரவு கொடுக்க இந்த சமூகம் இருக்கின்றது என்ற நிலைப்பாடு தோன்றி வாழ்வதற்கு இலக்கு அமைத்துக்கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மறுதலிப்பு தொடர்பாக...

நிலாவன்று எறிக்கவில்லை
நட்சத்திரங்கள் ஜீவிதம் புரியவில்லை

குடலை பருவ வயலில்
வடலி விட்ட பனையில்
வாய் பிளந்த குளத்தில்
படம் கீறும் பனியில்
கவிதை வடிக்க வரவில்லை
காற்று...
காய்ந்து போய் கிடந்தது

கடல்
நுரை தள்ளும் பொழுதுவிட்டு
காயங்களோடு
வசிக்கத் தயாரானது

கடல் அழகு
கடல் தெய்வம்
கடல் கவிதை

கடலென்றால் மீன்
கடலென்றால் தொழில்
கடலென்றால் செல்வம்

மார்கழி 26 .2004 ஐ
மறக்க முடியுமா?
ஒரு மாதம்
பருவமடைந்த 16
பிள்ளை சுமக்கும் 27
பாட்டி வடை சுட்ட கதை சொல்லும் 68
இத்தனையையும்
ஒரு சுடலையாய்
சுமந்து சென்ற
கடலை மறக்க முடியுமா?

நிலவு மழையில்
குளித்து குளித்து
கடல் பாலையை
பரிபாடல் செய்தவர்கள்
கிடங்கு மனிதர்களாய்
மாறிப் போனார்கள்

மண்ணோடும்
வேரோடும்

புழுங்கிக் கொண்டார்கள்

தலை தடவி
சுகம் கேட்கும்
தென்றலை
சுவாசிக்கப் பயந்தார்கள்

கையசைத்து
விடைபெறும்
பனைகளின்
மரணம் பார்த்து
வாய் பிளந்தார்கள்

அந்திப் பொழுதுகளில்
ஆதர்ஸ மானவர்கள்
கடலும்
நிலமும்
கலவரத்திலிடுபட்ட
கண்ணீர் பொழுதுகளில்
சவங்களோடு வசிக்க
வந்திறங்கினார்கள்

வலிகள் அழிந்துவிடுமென்று
யாரும் அழுவதில்லை
கடல் எழுந்து வருமென்று
நானும் நினைக்கவில்லை

கடலே
உன் மழைத்தூறல்
நீர்க்கோலம்
ரசித்திருக்கிறேன்

கடலும்
கரை நுரையும்
படித்திருக்கிறேன்

கடல் வாசம்
கிடைக்காதாவென
தவித்திருக்கிறேன்

கடல் பொழுதுகளில்
ஜீவிக்க
யாசித்திருக்கிறேன்

கடலே
என்னிடம்
கவிதையாய் வந்தாய்
சின்ன சின்ன
யப்பான் ரோசாவாய்
பூத்திருந்த
குழந்தைகளுக்கு மட்டுமேன்
எமனாய் வந்தாய்?

கடலே
உன் மீதான கவிதைகள்
இனி மறுதலிக்கப்பட்டு வரும்
உன் அலைமேல்
பல்லிதான்,
முக்கி முட்டை கொட்டும்
நாங்கள்
உனைவிட்டு
காதருகில் கிணுகிணுக்கும்
நுளம்பைக் கலைத்தபடி
நோவாவின்
சிருஸ்டிக்கப்பட்ட
கப்பலுக்காய் காத்திருப்போம்

ஏனெனில்
இப்பொழுது

கடல்
எமன்

எஸ். யோகலிங்கம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் சீற்றம்
'சுனாமி' பேரலையாய் உருவெடுத்தது
நாடெங்கும் நீறு
மனித உறவுகள் காப்பரணாக
முதற் கட்டப் பணியில்
அர்ப்பணிப்புடன் உழைத்ததை
உலகே வியந்து மெச்சியது.

இழப்புகள், இறப்புகள்
இடப் பெயர்வுகள், முகாம் வாழ்க்கை
மீண்டும், மீண்டும் தொடர்கதையாக...
இயற்கை எதிர்கொண்ட மக்கள்
காட்சிப் பொருளாகி
வானொலி, தொலைக்காட்சி,
பத்திரிகைகள், தொடர்பூடக செய்திகளின்
தேடல்கள் ஒருபுறம்
இருந்தன அரசியல் வாதிகளின்
நாடகமாட்டம், உரிமைப்போரல்
இன, மத, மொழி, பிரதேச எல்லைகளின்
முரண்பட்ட நிலையால்
மக்கள் முயற்சிகளை
கொச்சைப்படுத்தும்
ஆட்சி, அதிகாரத்தால்
பல தடைகளைப் போட்டன.

மீன்பிடியோர்கள், மீன்தொழில் வாய்ப்பு,
மீன்கட்டுமரம், மீன்பாதுகாப்பு – அமைய
கட்டடமும், பொருட்களும்
தொழில் உபகரணமும்
கட்டாய தேவைகள்
அவையுமிட முக்கியம் எதுவென
இனம்காண இன்னமும் தேடல்
மிகமுக்கியமானது.

"பசித்தவனுக்கு மீனைக் கொடுப்பதைவிட
மீன் பிடிக்க கற்றுக்கொடு"
என்ற வாழ்க்கையில் வசனமாய
அர்த்தங்கள் உண்டு
இன்று என்ன முகாம்களிலும்
உணவுக்காக வாழும்
உயிரினங்களாக வாழவைப்பதில்
திட்டங்கள், தீர்மானங்கள் போட அதனை
போராட்டக் களம் கொடுப்பாக மாறி
தங்கிவாழும் மனிதத்தை உருவாக்கி
மனித சக்தியை மழுங்கடிக்க
முனைவதிலுமா
திட்டங்கள் திட்டப்படுகின்றனவா?
மனித இருப்புக்கு அர்த்தம் என்ன?

பலிக்கடாக்களா?
சுனாமி அழிவை விட
அரசியல் சுமை ஏற்றும் புதிய
சுமைகள் பல உருவாகின்றன
பெற்றோர் காலத்தில்
நிவாரணமே இடப்பெயர்வில்
சிறுவர்களுக்கோ திசை தெரியாது
அறிவில், ஆன்மீகத்தில்,
ஒழுக்கத்தில், பாதுகாப்பில்,
உடலாரோக்கியத்தில்
பெண்களின் வாழ்வுக்கு
நண்பர்களோ சுற்றம் மட்டும் என்றால்
இதற்கு நாமே துணை போவதா?

இன்றைய சிறார்களை எதிர்காலத்தில்
சமுதாயத்தை வழிநடத்த விட
எட்டு வயதுக்கு
உரமிட்டு வளர்த்திட்டு
அறுவடை செய்ய நாள் பார்க்கும்
நல்ல பண்பாட்டு நிலம் வளர
வழிகாட்டுவோர் யார்?
இடர் நேரங்களில்
அறிவு, ஆன்மீகம், கலாசாரம்,

இலங்கையர் தாயக அனர்த்தத்தில்
பல்சமய சங்கமம் மனித நேயம் மாறா
மக்கள் சேவையாளர் அவசர தேவைகளை
ஆற்றுப்படுத்துவதில், உதவிக் கரங்களின்
உன்னத பணிகளால், உளச்சுமையும் போக்க
ஒன்றாய் இணைந்தனர்
உறவைப் பகிர்ந்தனர்
உலக நாடுகள் முதல்
உள்ளூர் நிறுவனம் வரை
இன, மத, மொழி கடந்து
மனித உறவுகளால் மனித நேய
காப்பரண் அமைத்தனர்.
மத அமைப்புகளும் மக்கள்
அமைப்புக்களும்
சிறு துளி பெரு வெள்ளமாக
அன்புப் பணியில்
மனித உறவின் புனிதம் காத்தனர்.

சவால்களை வென்று சரித்திரம் படைக்க
புதிய சவால்கள் புற்றாய் தோன்றின

நிவாரணப் பொருள் போரும்
இனக்கலகத்தின் தொலைக்கு மனிதர்
எல்லைப்படுத்துகிறார்களா?
போரின் அழிவும் இடம்பெயர்வும்
தந்த அந்த பாடங்கள் பல உண்டு
இன்றும் அதே அவல வாழ்வோடு
கலந்து போவதா? முன்னைய முகாம்கள்
நினைவுகள் மறையாது.

மீட்சி இன்றி வாழும் சூழலும்
எமக்கு முன்
காட்சி தருகிறது
அவர்களுக்கு மீண்டும் ஓர்
இடம் பெயர்வு அகதி வாழ்வு
இருப்பினை நிரந்தர முகவரி இல்லையா?
மறுபடியும் வேதனைகள் முகங்களை பார்த்திடவா?
உலக நாடுகளிலும் உதவியோடு
உணர்வெழுச்சிக்கு முகாமைக் காட்டி
காத்திருப்பதே நம் மக்களாகும்

சொல்லிக்கொள்வதில் ஏதுமில்லை
சகல மட்டத்திலும் விழிப்படைய
அறிவுபூர்வ ஆசான்களே முன்வாரீர்
பொது பணியை கொச்சைப்படுத்துவோரை
இனம் கண்டு களைந்திட வாய்ப்புதரீர்!

மனிதத்தை சிதைக்க விளையும்
பேதத்தை தவிர்க்க
மதவர்க்கும், மாதவர்க்கும்
சமூக சீர்கேட்டுக்கும்
கலாசாரத்தையும் அகதி வாழ்வும்
எம் சமூகத்தை உயிர்ப்பிக்காது
எமக்குள் புரிந்துணர்வு
பல்வேறு கோணத்தில் உருவான
இடம் கொடாது கைக்க
சகல மட்டத்திலும்
சிறப்புற்றிடும் மக்களாக
விமர்த்திடுவீர்
பொருட்கள் குவியாமல்
பொறுப்பு நோக்குகள் திசைமாறுமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதம் சிதைந்தால் அதனால்
ஏற்படும் விளைவுகள் என்னவாகும்?

கல்வியில், ஆன்மீகத்தில்
சமூக, கலாசார கட்டமைப்பில்
மக்கள் பங்கேற்கும் மனிதத்தை
மலரவைக்க மக்களே
விழிப்புடன், உயிர்ப்புடன்
வாழ்வுடன் மனிதத்தின்
புனிதம் காக்க ஒவ்வொருவரும்
தம் பணி என ஏற்று செயல்பட
ஒன்றிணைந்து செயல்படுவீர்

மனிதம் சிதைக்க முனைவோருக்கு
நாம் உடந்தைகளாவதா?
சிந்திக்கும் நேரமிது
இழப்புகள், இறப்புகள் எம்மை தாக்கியது
இயற்கையின் சீற்றம் எம்மை
சிதறவைத்ததுதான், அதற்காக
எம்மைவைத்து காய்நகர்த்தும்
அரசியல் வியாபாரத்துக்கு
எம் மக்கள்பலிகடாக்கள் ஆவதா?
உடலுழைப்பால் உயிர்பெற்று எழுவோம்
உடல் நோய்கள்
ஊனக்காயங்கள் எல்லாம்
எம்மை ஊனமுள்ள மனிதமாக
மாற்றிவிடாது மனத்தை திடப்படுத்தி
எழுந்து, நடந்து, நம்பிக்கை வாழ்வை
கட்டி எழுப்புவதில் எம்மை முன்
மாதிரிகளாக்கி எம்தேசத்தின்
உறவுகள் சிதைந்திடாது காக்க
எமக்கொரு காப்பரண் நாமே
அமைத்திடுவோமா?

யோசப் பாலா

புத்தக விழா

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் புத்தகக் கொள்வனவை ஊக்குவிக்கும் முகமாக எதிர்வரும் ஓகஸ்ற், 19 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு, வெள்ளவத்தை, உருத்திரா மாவத்தையிலுள்ள தமிழ்ச்சங்க மண்டபத்தில், 'புத்தகப் பண்பாட்டுப் பயணம் 2005' என்ற தலைப்பில் புத்தகத் திருவிழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் கலந்துகொள்பவர்கள் தேசிய கலை இலக்கியப் பேரவையினால் இதுவரை வெளியிடப்பட்ட நூல்களில் ஆயிரம் ரூபாய் பெறுமதியான நூல்களினைக் கொள்வனவு செய்தால் கொள்வனவுச் சிட்டையின் அடிக்கட்டைகள் அன்றைய புத்தக விழாவின்போது குலுக்கப்பட்டு ஐம்பதினாயிரம் ரூபா பணப்பரிசு அன்றே வழங்கப்படவுள்ளது. அத்துடன் வினாவிடைப் போட்டி ஒன்றும் இதன்போது இடம்பெறவுள்ளது. ○

இனியும் வேண்டாம்

ஓ! இந்து மா
கடலே
காலமெல்லாம்
தமிழனை வஞ்சிக்கும்
காரணம்தான் யாதோ!
தென் மதுரையை
தீண்டி
கபாடபுரத்தை
காவுகொண்டு
பூம்புகாரை
புதைத்து
தமிழர் தம்
கண்டமாம்
குமரியை
விழுங்கி
நாடற்றவராக
நம்மை
நடுத்தெருவில்
விட்டவள் நீ
இன்று
ஈழத்தமிழ்
கரையெல்லாம்
இரத்தக்கறை
அன்று
ஆமியை விட்டு
அவன்
அழித்தான்
இன்று
சுனாமியை விட்டு
நீ
சூறையாடினாய்
நீ
இழுத்துச் சென்ற
மழலைகள்
துரத்திச் சென்ற
சிறுவர்கள்
கடத்திச் சென்ற
காளைகள்

துகிலுரிந்து
தூக்கிச் சென்ற
பாவையர்கள்
எத்தனையோ.
அத்தனையும்
கடலுக்கா
காடாத்தினாய்
இங்கே
வீதியெங்கும்
பறையொலி
வீடெங்கும்
ஒப்பாரி
விடிந்தால்
முகாரி
அதோ! அந்த
காதலியின்
கதறல்
இந்த
விதவையின்
குமுறல்
பிஞ்சு
குழந்தையின்
அலறல்
அன்புத்
தாய்மாரின்
புலம்பல்
இன்னும்
கேட்கிறதே
மீண்டும்
எம்மண்ணை
ஏன் தழுவுகிறாய்?
முத்தமிட்டு
எம்மினத்தை
மூழ்கடித்த
வரலாறு
இனியும் வேண்டாம்.

அல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம், மார்ச் திங்கள் 30 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை. நேரம் மாலை 6.30 மணி. யாழ். பல்கலைக்கழக கலைப்பீட வளாக முன்றலில் ஒரு எழுச்சிப்பாடல்; "சந்ததி சந்ததியாய் நாம் போராடிப் போராடி" என்று ஒலி மாறி மாறி ஒலித்துக் கொண்டே யிருக்கிறது. எம் கரங்களும் மெய்மறந்த நிலையில் அத்தாள இசைக்கேற்ப தட்டிக் கொடுத்துக் கொண்டேயிருந்தன. அப்படி ஒரு ஆத்மார்த்தமான ஒன்றிணைவு. பாடல் ஓய்கிறது. எங்கும் ஒரு நிசப்தம்; நாடகம் பற்றிய முன்னுரை தொடர்கிறது. உணர்ச்சியோடு அதனை உள்வாங்கிக் கொண்டு நாடக மேடையை நோக்கி நாம் திரும்புகையில் வானிருந்தே பொழிவைக் குரல்கள்; அங்கும் இங்கும் எங்கும்; ஏன் கூரையின் மேலும்.

இதுவரை எம்மை ஆட்கொண்டிருந்த ஆழ்ந்த ஆத்மார்த்த பிணைப்பில் இருந்து நாம் அறுந்துபோய் ஒரு அங்கலாய்ப்பு நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

செவ்விளக்கு

கூரையின்மேல் ஆமியாக நின்றவனைப் பார்த்த ஒரு வெடிச் சிரிப்பு ஒரு புறம்; சோதனைச் சாவடியில் "டொர்" என்று சத்தம் காட்டி எல்லோரையும் சிரிக்கவைக்கும் இன்னொருவர் மறுபுறம். "இருபது வருடங்களாக இதற்குப் பழக்கப்பட்டவர்கள் நாம்" என்ற குரலில் இன்னொருவர். நிச்சயமாக நெறியாளர் நினைத்தது ஒன்று ஆனால் நடந்ததோ வேறாகி விட்டது. பரவாயில்லை மீண்டும் நாடகத்தோடு நாம் ஒன்றித்தோம்.

செவ்விளக்கு ஆரம்பமாகிறது. இது ஒரு சீன பீஜிங் ஓபேரா வடிவம். ஜப்பானிய ஏகாதிபத்தியம் சீன மக்களை அடக்கியாண்ட பொழுது அவர்களுக்கு எதிராக எழுந்த ஒரு புரட்சி வரலாறே இது. சிறுபெண், தாய், தந்தை, ராணை பிடிப்பவன், ஜப்பானிய ஆளுநர் தலைவன், போர் வீரர்கள், அந்த வீடு, மலையடிவாரம், அரங்கத்தோற்றம் அனைத்துமே இது ஒரு சீன நாடகம் என்ற



உணர்வில் இருந்து இறுதிவரை எம்மைப் பிரிக்கவில்லை. நெறியாளர் மிகத் துல்லியமாக இதில் வெற்றி கண்டுள்ளார். அதேவேளை நமது மண்ணின் நடப்பியல் வரலாற்றிற்கு கட்டியம் கூறவும் செய்துள்ளார்.

தந்தையாக நடித்தவரின் குரல் வளம் உணர்ச்சிமிக்க மொழி நடைக்கு ஏற்றம்



கொடுத்த அவரது ஓபேரா அசைவு, முகபாவம் முற்றிலும் பார்வையாளரை நாடகத்தினுள் மூழ்க வைத்தது உண்மைதான். அந்தச் சிறுபெண் நன்றாகவே செய்தாள். நல்லதொரு தெரிவு. இந்த இருவர் மூலமாகவும் பீஜிங் ஓபேரா தன்மையையே

யாழ். பல்கலைக்கழக Lee Theatre Studies Group இன் ஏற்பாட்டில் Red Lantern என்ற சீனப் பெரு நாடகத்தின் மொழிபெயர்ப்பான இவ் ஆற்றுகை பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவினரும், திரு. க. சிதம்பரநாதனின் நெறியாள்கையில் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட வளாக முன்றலில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பட்டது. இருவரும் நம்மைச் சீனாவுக்கே அழைத்துச் சென்றார்கள். அதேவேளை, நம் மண்ணையும் நினைக்க வைத்தார்கள்.

சாணை பிடிப்பவனின் சாணக்கிய மான ஏற்ற இறக்கக் குரலோசை அப் பாத்திரத்தை மனதில் பதிய வைத்தது.

நம் நாட்டு மொழிகளில் நாம் பார்த்த மேல் நாட்டு நாடகங்கள் பல. ஈடிபஸ், டோல் ஹவுஸ், ஸ்பாட்டக்கஸ், றோஜான் காந்தாவோ, நெல்சன் மண்டேலா, முகில்களின் நடுவே இன்னும் பல. இந்த வரிசையில் 'செவ்விளக்கு' தனித்துவம் வாய்ந்தது என்று கூறத்தான் வேண்டும்.

இந்நாடகத்தின் இலக்கும், நோக்கும் என்னைப் 15 வருடங்கள் பின் நோக்கித் தூக்கிச் சென்று இதே இலட்சியத்தை வெளிப்படுத்த இதே பல்கலைக்கழக அரங்கில் மேடையேற்றப்பட்ட சங்க இலக்கியத்தின் புறநானூற்றுக் காட்சியைக் கொண்ட 'புறம்' எனும் மௌன நாடகத்தை நினைக்க வைத்தது. இங்கே அந்தச் சீனப் பெண்ணும், தந்தையும் மண்ணுக்காக மரணிக்கத் தயாராகி உதிர்க்கும் உணர்ச்சிமிக்க வசனங்களை அங்கே தாயும், தனையனும் போருக்குப் புறப்படும் இறுதிக் காட்சியில் 'புறம்' மௌனமாக அன்று எம் மனதில் பதிய வைத்தது.

நிற்க, நாடகம் புதுமைக்கு நகர பார்வையாளரின் இருக்கை மாத்திரம் பழமைக்குச் சென்றது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. வசதியாக அசௌகரியம் எதுவுமின்றி அமர்ந்திருந்து அணுவணுவாக இரசிக்கவேண்டிய இந் நல்ல நாடகத்தை நிலத்தில் கிடந்து நெளிந்து புரண்டு எட்டி எட்டி நிமிர்ந்துபார்க்வைத்து இரசனையை துண்டாடியமையை இந் நாடகத் தயாரிப் பாளர்கள் பொறுப்பேற்பார்களா?

அல்வி

குருதி கழுவிய குவலயம்

அண்மையில் திருமறைக் கலா மன்றம் மேடையேற்றிய 'குருதி கழுவிய குவலயம்' நாடகம் பார்க்கக் கிடைத்தது. இது கிறிஸ்தவர்களுக்குரிய தவக்கால நிகழ்வின் ஒரு அங்கம்தானே என நினைத்துச் சென்ற எனக்கு மிகப்பெரிய ஆச்சரியத்தையே அதுதந்தது. சாதி, மதபேதங்கடந்து இன்றைய இக்கட்டான காலகட்டத்தின் தேவையையும், மனிதாபிமானத்தின் மகத்துவத்தையும் பார்வையாளர் ஒவ்வொருவரது மனதையும் தென்றலெனத் தொட்டு பசுமரத்தாணி அன்ன பதியவைத்த கலைத்துவமும், அரங்க நுட்பங்களும் நிறைந்த நாடகமாக அது காணப்பட்டது. அந்நாடகம் பற்றிய எனது எண்ணக்கருத்துக்களை இக்கட்டுரைக்கூடாக பகிர்ந்து கொள்ள முற்படுகின்றேன்.

நாடகம் கிறிஸ்துவின் வாழ்க்கையை குறிப்பாக, அவரது பாடுகள், மரணம் என்பவற்றோடு மையப்பட்டிருந்தாலும் அதற்கூடாக, இக்கால வாழ்வியலுக்கு விடைசொல்லப்பட்டிருந்தது. கிறிஸ்துவின்



குருதி பாவப்பட்ட மனிதரை கழுவி தூய்மையாக்கியது. அதுபோலத்தான் பேரலையும், பெருவெள்ளமும் கழுவிச் சென்ற உயிர்கள் எஞ்சி இருப்பவரை, அவரது தீயசெயல்களை மனிதாபிமானம் அற்றுப்போகும் மானிட நிலையை, அவர்களது மனங்களை, அதிரவைத்து கழுவிச்சென்றது என்ற உண்மையை மையப் பொருளாகக் கொண்டதாக நாடகம் பின்னப்பட்டிருந்தது. நாடக நகர்ச்சியின் ஒவ்வொரு கணமும் எம் விழிகளை அகலவைத்து நிகழ்ச்சியோடு இரண்டறக் கலந்து நிற்கவைத்தது.

நாடகத்தின் பாத்திரங்கள் ஒவ் வொன்றும் தத்துரூபமாக நிஜத்திற்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலிற்கும் வேறுபாடுகாண முடியாதவாறு உயிரோட்டமுள்ள பாத்திரப் படைப்புக்களாக அமைக்கப்பட்டிருந்ததை ... மனந்திறந்து பாராட்டாமல் இருக்க முடியாது. ஒவ்வொரு பாத்திரங்களும் நம்மது உணர்ச்சிகளை வெறும் நடிப்பாக வெளிக்காட்டாது அனுபவித்து உண்மையாகவே உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துப் பார்வையாளரிடம் பாயவிட்டது அவர்களின் கடுமையான, உண்மையான உழைப்புக்குச் சான்றாக அமைகின்றது. குறிப்பாக, இயேசு பாத்திரத்தை ஏற்ற நடிகன் யாழ். மக்களுக்கு இறைவனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஒரு யேசுவின் மாதிரிகையேதான். மறுபேச்சுக்கே இடமில்லை. உடலால் மட்டுமன்றி உணர்வுகளாலும் இறைமகனாகக் கைதொழவைத்த பாத்திரம்.

இறைமகன் சிலுவை சுமக்கின்ற காட்சி எமது மனங்களையும் சிலுவை சுமக்கவைத்தது. சிலுவையில் அறைந்த காட்சி பார்வையாளரது உணர்வுகளை கடிவாளம் போட்டுக்கட்டிவைத்தாலும் கட்டுக்கடங்காது கண்ணீராக கரைபுரண்டோடச் செய்தது. அக்கணம் இயேசுமட்டும் சிலுவையில் அறையப்படவில்லை. அனைவரது மனங்களும், முகங்களும் அறையப் பட்டிருந்தது. இயேசுவுக்கு விழுந்த சவுக்கடிகள் ஒவ்வொன்றும் எமது உள்ளத்திலும் அடியாக விழுந்தன. இந்த உணர்வுப்பரிமாற்றங்களுக்கு காரணமான அந்தப்பாத்திரம் உண்மையிலேயே இயேசுதான். அதில் சந்தேகமுமில்லை.

அவ்வாறே சமயத்தலைவர்களாக இருந்தவர்கள் (அன்னாஸ், கைப்பாஸ்) தோற்றத்தில் மட்டுமன்றி பேச்சிலும், நடிப்பிலும் நன்கு முதிர்ச்சி பெற்றவர்க

ளாகவே இருந்தனர். அவ்வாறே இயேசுவுக்காக வாதாடுகின்ற பாத்திரம் (நிக்கொதேமு) உடலாலும், உள்ளத்தாலும் உயர்ந்து நிற்பதை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தினார். அத்தோடு நாடகத்தை உயிர்த்துவம் மிக்கதாக கொண்டுசென்ற பாத்திரமாக கதை சொல்வோன் பாத்திரம் அமைந்திருந்தது. சிறந்த முறையில் அவர்தன் பங்களிப்பைச்

செய்தாலும் சில இடங்களில் உணர்ச்சி மேலீட்டால் அவரது சொற்களை உணர்ச்சிகள் மேவிச்செல்றதனையும் அவதானிக்க முடிந்தது.

மனதை விட்டு நீங்காத மற்றொரு பாத்திரமாக 'பிலாத்து' பாத்திரம் காணப் பட்டது. ஒரு ஆளுநனுக்குரிய கட்டுப்பாடு,

[illegible] ... மார்ச் 14, 15, 17, 18, 19, 20 ஆகிய திகதிகளில் ஆறு நாட்களுக்கு யாழ் திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்பட்டமையு[illegible]

[illegible]

ஆளுமை, அபிநயம், அழகு அனைத்தும் அந்தப்பாத்திரத்தை நினைவில் நிற்க வைத்தன. (அவரது ஆடை உயர்ந்து நின்றது சற்றுச் சங்கடமாக இருந்தது). இவற்றைவிட சமயத்தலைவர்களின் சபையில் இருந்த ஒவ்வொரு பாத்திரமும் (பரிசேயர்கள், சதுசேயர்கள்) அவர்கள்மேல் எமக்கு ஆத்திரம் உண்டாகத்தக்கவாறு மிகவும் உணர்ச்சி பொங்க நடித்திருந்தனர். இவற்றைவிட இயேசுவுக்கு சவுக்கால் அடித்த பாத்திரம், பிலாத்துவின் படையினர் என அனைத்துப் பாத்திரங்களும் மிகச்சிறப்பாக தமது நடிப்பாகங்களைச் செய்திருந்தனர். மொத்தத்தில் பெண்பாத்திரங்களை விட ஆண்பாத்திரங்கள் அனைத்தும் தமது பணியை மிகத்திறம்பட ஆற்றியிருந்தனர்.

நாடகத்தின் வெற்றியில் பங்காற்றிய மற்றுமொரு அம்சம் காட்சி விதானிப்பு ஆகும். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எவ்வாறான சூழல், கட்டடங்கள் இருந்திருக்குமோ அவ்வாறே மேடையின் ஒவ்வொரு காட்சிப்பகுதியும் அமைந்திருந்தது. அரண்மனைகள் போலி யற்ற உண்மையான அரண்மனைகள் என்று சொல்லத்தக்க வகையில் முப்பரிமாண அமைப்பில் சிறப்பாக வடிவமைக்கப் பட்டிருந்தன. அதுபோலவே கோவிலமைப் பும் மிகச் சிறப்பாகவும் அமைதியான வர்ணத்திலும் அழகாக வடிவமைக்கப் பட்டிருந்தது. இவை சித்திரக் கலைஞரின் கலை நயத்தையும் கடின உழைப்பையும் கட்டியங்கூறி நிற்கின்றது. அதேபோல் கல்வாரி மலையமைப்பும் மிகவும் பிரமாத்மானதாக அமைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னால் கொழுந்து விட்டெரிந்த தீ பாவிகளின் கொழுந்து விட்டெரிந்த மனங்களைச் சொல்லாமல் சொன்னது.

மற்றுமொரு முக்கிய அம்சமாக இருந்தது இசையாகும். நடிப்புடன் இரண்டறக் கலந்து நின்ற இசையும், ஒலிகளும் பாடலும் பலசந்தர்ப்பங்களில் புல்லரிக்கவைத்தன. அதனுடன் இணைந்த தாக நின்ற ஒளியும், ஒளிவிளைவுகளும் மிகச்சிறப்பாக தமது பணியை மேற் கொண்டிருந்தன. சிறப்பாக, சுனாமியை நினைவுபடுத்தும் பெரு வெள்ளக்காட்சி ஒரு அதிரடிக்காட்சி. அவலத்தையும், அழிவையும் கட்டியம் கூறும்வகையில் அமைந்த அந்தக்காட்சியில் ஆர்ப்பரித்துச் சினந்தெழும் பின்னணி இசை. எள்ளவும் பிசகாத வெள்ளை நீல வர்ண ஒளிச்சேர்க்கை, மக்கள் அலறி அடிக்கும் அவலச்சூழல் இவை அனைத்தும் அச்சத்தையும் அழுகையையும் அந்தக் கணங்களுக்குள் கொண்டுவந்து உள்ளத்தை உறையவைத்தன.

ஆரம்பத்திலும் இறுதியிலும் இடம்பெற்ற தேவதைகளின் நடனக்காட்சி யும் கண்ணைவிட்டகலாத காட்சிகள். உடலும் உள்ளமும் மட்டுமல்ல உடையும் வெள்ளை யாகவிருந்தது. தூய்மை, பரிசுத்தம், அன்பு, இரக்கம் போன்ற பலவற்றையும் கூட்டாக நினைவு கூரத்தக்கதாக அமைந்த அந்தக் காட்சிகள் பாராட்டப்பட வேண்டியவை. அதில் நடனமாடிய ஆண்களும் மிகச்சிறப்பாக தமது பாவங்களை வெளிப்படுத்தி இருந்தனர்.

இவ்வாறு மனதில் நிறைந்திருந்த காட்சிகள் பெரும்பான்மையாக இருந்தாலும் சில சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்தன. குறிப்பாக, இயேசு செய்த அற்புதங்களில் நடக்க முடியாதவரை நடக்கச்செய்ததைத் தவிர ஏனையவை மனதைத் தொடும்படியாய் காட்டப்பட வில்லை. எதிரிகள் உரத்துச் சிரித்தது நையாண்டி செய்வதும் சில சமயங்களில் பொருத்தமாக இருந்தாலும் பல சந்தர்ப்பங் களில் செயற்கையாகவும், வலிந்து செய்யப் பட்டதுபோலவும் தோற்றம் தந்தது. இறுதிநேர இயேசுவின் வார்த்தைகள் உணர்ச்சி மேலிட்டால் முழுமையாக எம்மால் உணரமுடியாமல் இருந்தன. பல சந்தர்ப்பங்களில் உரையாடல்களுக்குள் இசைமேலோங்கி அவற்றை உணர முடியாமல் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்தத்தில் 'குருதி கழுவிய குலவயம்' தனை சிறந்த தழப்பதிப் [illegible] கலைஞர்களை கட்டியிழ்கின்ற நிகழ்ச்சி ஒரு நாடக வடிவம். ஒவ்வொரு அசைவுகளும் ஒளி ஒலியும், கலைஞர்களின் திறமையையும் உழைப்பையும் காட்டி நின்றன. இயேசுவின் இறப்பு, இறுவை அப்பம், கவலையையும் கலக்கத்தையும் தரும் நிகழ்வுகளாக இருப்பினும் கிறிஸ்துவின் பிறப்பும் இறுதி உயிர்ப்பும் கலக்கத்தை தெளிவித்து, இறப்புக்களையும், சோகங்களையும் தாக்கெறிந்து குருதியாறு ஓடிக் குலவயத்தை புனிதமானதாக, மனிதத்துவம் மிக்கதாக, சமகால வாழ்வியலில் நின்று ஆக்கவுறுமாறு அழைப்பு விடுப்பதாக அமைந்து நின்றன. பார்ப்போரின் மனங்களில் நீங்காத இடம்பிடித்து இனிய செய்திகளையும் அரிய தகவல்களையும் சமூகத்திற்கு வழங்கி நின்று நினைந்தாலே இனிக்கும் அற்புதமான அரங்க அனுபவமாக 'குருதி கழுவிய குலவயம்' இருந்தது என்றால் அது மிகையல்ல.

செல்வி மாலினி பாலகிருஷ்ணன்
உளவியல் சிறப்புக்கலை, மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

[illegible] 'குருதி கழுவிய குலவயம்' [illegible]
11 இல் [illegible] மார்ச் 13
இல் [illegible]
[illegible] 'பலிக்களம்' என்னும் [illegible]
[illegible]

[illegible]

[illegible] மார்ச் 13 இல் [illegible]

பலிக்களம் - [illegible]

கற்பனையில் சிக்காத காட்சி



கறுப்பு கட்டிய விதவை
எலை செய்யப்பட்டு
கற்பனைக்குள் சிக்காமல்
காட்சியளித்தாள்

சவப் பெட்டி காணாத
மரண ஓலத்துடன்
வரையப்படாத ஓவியங்களாய்
பிணக் குவியல்கள்

சோகமாய் இருண்டது
வானம் மட்டுமல்ல
மனங்களுந்தான்

காணாமல் போன
நம்பிக்கைத் துளிகளுடன்
மனித நேயங்கள்
இருப்போரை காக்க
இளைஞரின கூட்டம்
தலை காட்டினர்
ஒளி தேடும் வாழ்க்கைக்கு
வானம் விடிகின்றது
ஆனாலும் எங்களுக்கு நாங்களே
தீருந்துவோம்!

ஜோ. ஜெஸ்ரின்
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

அம்மா

– சி. கதிர்காமநாதன்

"அப்பாவை நினைக்க – நினைக்க எனக்கு அழுகை வருகுது. அப்பா அருகில் இல்லாதது பெரிய கஸ்ரமாக இருக்குது."

அப்பா எப்பதான் வரப்போகிறார்? எனக்குத் தெரியேல்ல. எத்தனை நாளைக்கு நான் இங்கை, வீட்டில், பள்ளிக்கூடத்தில் எல்லாத்தையும் சமாளிச்சுக்கொண்டு இருக்கப்போறன்?

எல்லாத்தையும் நினைக்க "விசர் விசராய் வருகுது, அம்மாவைப் பார்க்க கோபம் கோபமாய் வருகுது. உந்த அம்மாவோட யாரும் இருப்பினமே. ஒரு நேரமும் என்னை அம்மா இருக்க விடமாட்டா. அப்பா வெளிநாடு போக முதலே அம்மா உப்பிடித்தான் - நேரம் காலம் தெரியாமல் "புறு புறுத்தபடி, நச்சரித்தபடி" திரிவா.

எனக்கு என்ன செய்யிறதெண்டு தெரியாமல் இருக்கும்.

உங்கட அம்மா அப்படி என்ன செய்யிறா என்று நீங்கள் கேக்கலாம். என்னெண்டு சொல்லுறன் கேளுங்கோ.

காலேல நித்திரைப் பாயிலேயே கத்தத்தொடங்கி விடுவா.

"என்ன நேரமெல்லோ போகுது இன்னும் படுக்கையோ"

"கெதியாய் எழும்பு, முகத்தைக் கழுவு. புத்தகத்தை எடுத்துப்படி. கணக்கைச் செய். நான் சாப்பிடக் கூப்பிடேக்க வா. என்ன படிக்கேக்க தலைக்குள்ள கை வைக்கிறது. கையை எடு. என்ன காலை ஆட்டிக்கொண்டு சாப்பிடுறாய். நீ பொம்பிளைப் பிள்ளையெல்லே, அடக்க ஒடுக்கமாய் எல்லே இருக்கவேணும்.

"என்ன மேசையில" கிண்டிறாய். சும்மாயிரு. தலையை உப்பிடியே இழுக்கிறது. உன்ர எண்ணத்திற்கு ஒண்டும் செய்யக்கூடாது. இங்க நான் இருக்கிறன் தலையை நான் சொல்லுற மாதிரி இழு"

"இஞ்சை பார் நான் தாற சட்டையைப்போடு. என்ன நித்திரை வருகுதோ. பொம்பிளப்பிள்ளையள் பகலில படுக்கக்கூடாது. சும்மா கதிரையில இரு...

ஓடு..ஓடு.. கெதியாய்போ ரியூசனுக்கு. எவ்வளவு காசைக்கொடுத்து படிக்கவிடுறன். கெதியா ஓடிப்போ...

"காலேல வைரவர் கோயில் மணி ஐஞ்சு மணிக்கு அடிக்கேக்க எழுப்பிவிடுவன். உடன எழும்பிப் போடவேணும். எழும்பேக்க சிணுங்கினி யெண்டால் நொறுக்கிப்போடுவன்.

ஐயோ நான் என்ன செய்யிறது? என்னை சுயமாய் இருக்க விடுறாயில்லையே. நான் என்னசெய்ய வெளிக்கிட்டாலும் தடுத்துக்கொண்டு இருப்பா.

சீ... கொழும்பில இருந்த மாதிரி இருந்திருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும். அப்ப, எங்கட அப்பாவும் கூட இருந்தார். எனக்குப் பெரிய துணையாக இருந்தது.

அப்பா எல்லா இடமும் கூட்டிக்கொண்டு போவார். சாப்பாட்டுச் சாமான்கள் எல்லாம் வாங்கித் தருவார். எவ்வளவு இடங்கள் நான் சுற்றிப் பார்த்தனான். கார், பஸ் என றோட்டில எவ்வளவு பாக்கலாம்."

நான் படிச்ச பள்ளிக்கூடமும் எனக்குப் பிடித்திருந்தது. பெரிய பள்ளிக்கூடம், பெரிய பெரிய வகுப்பறைகள், பெரிய காசுக்காரற்ற பிள்ளையள் எல்லாம் அங்க படிச்சனர். என்ர சிநேகிதிமாரும் காரிலதான் வாறவை எனக்கு அவையளை நல்லாய் பிடிக்கும். அப்பா என்னைக் கூட்டிக்கொண்டு வரப் பிந்தினால் அவையள் தங்கட காரில கூட்டிக்கொண்டுபோய் என்னை வீட்டில விடுவினம். எனக்கு சரியான சந்தோஷமாய் இருக்கும். காருக்குள்ள சரியாய் குளிரும் - நான் குளிரில் நடுங்குவன். அவையின்ர பிறந்த நாள் விழா, பண்டிகைகள் எல்லாம் பெரிசாய் நடக்கும்.

எவ்வளவு சந்தோஷமாய் நான் இருந்தனான். எல்லாத்தையும் "உவதான்" குழப்பிப்போட்டா. அப்பா, தான் வைத்திருந்த "கராஜ்" வேலையை நிப்பாட்டிப்போட்டு வெளிநாட்டுக்குப் போக முடிவெடுத்தார். அந்தக் கையோட அம்மாவும், தான் யாழ்ப்பாணம் போறனெண்டு சொல்லிப்போட்டா. அப்பா போக வேண்டாம் என்றுதான் சொன்னார்.

"கொஞ்ச நாளைக்குச் சமாளியும். நான்போன கையோட எப்படியும் வேலைக்குப் போயிடுவன் ஏன் இப்ப யாழ்ப்பாணம் போறீர்?"

"என்னால இஞ்சை நீங்கபோன பிறகு தனிய இருக்கேலாது. கஸ்ரம், ஒரு பொம்பிளப்பிள்ளையோட தனிய இருக்கேலாது. நான் யாழ்ப்பாணம் போறன்."

கடைசியில் அம்மா கொழும்பை விட்டு யாழ்ப்பாணம் வந்திட்டா. எனக்கு இங்க வந்த பிறகு ஒண்டும் ஒத்துவரேல்ல. எல்லாம் புதுசு புதுசாய் கிடந்தது. வீடு பள்ளிக்கூடம், அயலாட்கள் .... எல்லாத்தையும் பார்க்கப் பார்க்க வெறுப்பாய் இருந்தது.

எல்லாம் வந்தது உந்த அம்மாவாலதான். அப்பா சொன்னமாதிரி கொழும்பிலேயே இருந்திருக்கலாம்.

"இனி கதைத்து என்ன செய்யிறது?" அப்பாவுக்குக் கடிதம் போடுறனான். சிலவேளை போனிலையும் கதைக்கிறனான். கதைக்க கதைக்க எனக்கு அழுகை வரும்.

"அப்பா கேப்பார் "என்ர குட்டிக்கு" என்ன வேண்டி அனுப்பிறது. எனக்கு கார், பஸ் என்றால் சரியான விருப்பம் அதுகளை வைச்சுக்கொண்டு விளையாட லாம். அப்பா எனக்கு நிறைய விளையாட் டுச் சாமான்கள் அனுப்பினார். ஒரு பெட்டி நிறைய வந்தது. ஒவ்வொண்டும் வெவ்வேறு விதமாக. பார்த்து பார்த்து எனக்கு இடத்தில இருக்க முடியல்ல.

துள்ளிக் குதிக்காத குறைதான். எல்லாத்தையும் ஆசையாய் எடுத்து விளையாடப்போனால்,

"என்ன... விளையாட்டுச் சாமான் ஒண்டும் எடுக்கக்கூடாது.. எடுத்தி எண்டால் கையை முறிச்சுப்போடுவன். இப்ப முதலில் படி... கொழும்பில இருக்காம இங்க வந்தது படிக்கத்தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடிறதுக்கு இல்ல. உதைப் பெட்டிக்குள்ள வைச்சுப்போட்டு பேசாம புத்தகத்தை எடுத்துப்படி.

எனக்கு அழுகை வந்தது. அப்பா அனுப்பிய விளையாட்டுச் சாமான்கள் எல்லாம் பெட்டிக்குள்ள தூசி பிடிச்சுப்போய் கிடந்தது.

எனக்கு அம்மா மேல் பெரும் கோபம் கோபமாக வந்தது. அவ எது சொன்னாலும் கோபமாய் வந்தது. இவ எது சொன்னாலும் அதுக்கு எதிராய் செய்ய வேண்டுமென்டு மனம் சொல்லியது.

எதையும் என்னை செய்யவிடாமல் தடுக்கேக்க எதையாவது தூக்கி அடித்து உடைக்கவேண்டும் போல் இருந்தது. யாரேனும் தடுத்தால் அடிக்கவேணும். பேசவேணும், வாய் காட்டவேணும். சண்டைபிடிக்கவேணும், ரீச்சரோட முறைக்கவேணும். அதனால் அம்மா மாதிரி ஒரு பொம்பிளைதான் பள்ளிக்கூடம் போவதைத் தவிர்த்தேன்.

பாப்பம், உவ என்ன இனி செய்யப்போறா. நல்லா கத்தட்டும். ஒன்றும் செய்யாமல் இருந்தாலும் கத்திக்கொண்டு தானே இருக்கிறா.

உவவுக்கு நான் செய்து காட்டுறன் பள்ளிக்கூடத்தில் என்னோட விளையாட வராத மற்ற மாணவரோடு சண்டைக்குப் போவன். அவங்கள் பந்து விளையாடேக்க பறித்துக்கொண்டு வந்திட்டன். ரீச்சரிட்ட சொல்ல அவ என்னைக் கூப்பிட்டு நல்லா அடிபோட்டா"

வாயில வந்தபடி என்னை நல்லாப் பேசினா. ராத்திரி நான் அழுதனான். அப்பாவை நினைக்க அழுகை சரியாய் வந்தது. வகுப்பில இருக்க எனக்கு விருப்பமில்லாமல் இருந்தது. மாணவர்கள் பட்டப்பேர் சொல்லி கூப்பிட்டார்கள்.

"சண்டைக்காரி வாறாள்"

"கொழும்பில இருந்து வந்த சண்டைக்காரி வாறாள்"

எனக்கு பெரிய பொறுமையாய் இருக்க முடியேல்ல. அவங்களோட சண்டைக்குப் போனேன் ஆத்திரத்துடனாய் சண்டை பிடிச்சன், கடைசியில் வகுப்பாசிரியர் அம்மாவைக் கூட்டியரச் சொன்னா. அம்மா பள்ளிக்கூடம் வந்தா.

அம்மா வரேக்க பள்ளிக்கூடம் முடிஞ்சு பிள்ளைகள் வீட்டை போட்டினம். ஒரே அமைதியாய் கிடந்தது. வகுப்பாசிரியர் அம்மாவுடன் கதைத்தா. தொடக்கத்தி லிருந்து நடந்தது எல்லாவற்றையும் சொன்னா.

நான் சின்னனில சகோதரங்களோட கஷ்ரப்பட்டனான். அப்பா சின்னனில வருத்தம் வர செத்துப்போனார். உழைக்க ஒருத்தருமில்லை. நான் நல்லா படிச்சனான். வகுப்பில நான்தான் கெட்டிக்காரி. படிக்க நல்ல விருப்பம். என்ன செய்யிறது. அப்பா செத்ததோட அம்மாவுக்கு வருத்தம் வந்திட்டுது. வீட்டில் பொறுப்பாயிருக்க ஒருத்தருமில்லை. என்னைப் பள்ளிக்கூடம் போகாமல் வீட்டை மறித்துப்போட்டினம். என்ர பள்ளிக்கூட வாழ்க்கை அதோட சரி. என்ர கனவு அப்படியே செத்துப்போட்டுது. அம்மா அழுதா குலுங்கிக் குலுங்கி அழுதா.

அதுதான், நான் தான் வறுமையில படிக்க முடியாமல் போச்சு. என்ர பிள்ளை படிக்கவேணும். நல்லா படிச்சு முன்னுக்கு வரவேணும். நான் விட்ட குறையை என்ர பிள்ளை செய்து முடிக்கவேணும். அதுதான் எப்பவும் என்ர மூளைக்குள்ள படி படி என்று சொல்லிக்கொண்டு நிக்குது. என்ர பிள்ளையில எனக்கு சரியான விருப்பம். "நான் இப்பிடி தனியாக்கிடந்து கஷ்ரப்படுறது அவளுக்காகத்தான். நான் அவளில வைச்சிருக்கிற அன்பை, பாசம், கண்டிப்பு எல்லாம் அவளுக்கு அதிகமாகப்போட்டுதோ? அதான் என்ர பிள்ளை உப்பிடி மூர்க்கத்தனமாய் நடந்து கொள்கிறாளோ? "ரீச்சர் நான் இப்ப என்ன செய்ய? என்ரை பிள்ளை இந்த மாதிரித்தான் இருக்கப்போறாளோ?

'ரீச்சர் நான் என்ன செய்ய?

அம்மா பெரிதாய் விம்மிபொங்கி அழுதா எனக்கு உடம்பெல்லாம் பதறுது. நெஞ்சுக்குள்ள ஏதோ செய்யுது. அழுகை அழுகையாய் வருகுது 'என்ர அம்மா இவ்வளவு கஷ்ரப்பட்டவவோ? நீங்கள் என்னில இவ்வளவு பாசம் வைச்சிருக்கிறியளோ? நான் நல்லா வரவேண்டுமென்று உவ்வளவும் செய்தனீங்கள்? உங்கட கண்டிப்பிற்கு பின்னால்... "அம்மா அழாதேயுங்கோ, நான் நல்ல பிள்ளையம்மா. அப்பா பிள்ளையம்மா பள்ளிக்கூடம் அமைதியாய் இருந்தது. நான் அம்மாவை நோக்கி நடக்கத்தொடங்கினேன்...

மாறாத தழும்புகள்

அன்றுவிழுந்துப்போன
பகல் பொழுது
இன்றும் என்னை வெறுமைப்பின்றது
உறுமி உறுமி எழும்
நினைவுப்பேரலை
இதயத்தின் நான்கு கதவுகளை
அடித்துத் தட்டுகின்றது
மழுங்கிப் பஞ்சடைந்துபோன
குருட்டு விழிகளுடன்
தள்ளாடி தள்ளாடி
போலியான நிமிர்வுடன்
நடக்க முற்படுகிறேன்
ஏனோ பொய்த்துப்போகின்றேன்
புழுதியில் போக்கற்றவனாய்
மறந்து கிடக்கின்றேன்.
என்றும் நினைவுப் பேரோசை
அடங்கவில்லை,
இந்த தழும்புகளுக்கு
இனியார்
ஒத்தடம் கொடுப்பர்...?

யோகவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருகண நொடியில்...

வாழ்வில் வசந்தமே
வரண்டு போய்விட
வாழ்ந்த பூமியும்
வசந்தம் துறந்தது
சிரிப்பு சத்தம்
எங்கோ மறைய
வீரிட்டு கதறும்
ஓசை காற்றில் மிதந்தது

கண்ணிமை மூடும் பொழுதில்
காரியம் முடிந்தது
என்னதான் நிகழ்ந்தது
எம் வீடு எங்கே?
ஓலைக் குடிசையில்
ஒரு நேரப் பசி தீர்த்து
இவ்வளவும்போதுமென்று
நிம்மதியாய் தூங்கி எழுந்த
நாங்கள் இன்று
நட்ட நடு வீதியிலே
நிற்கதியாய்...
நாவரண்ட போதினிலும்
நன்னீரின்றி நாம் அலைய
என்னதான் செய்துவிட்டோம்?

ஒரு கண நொடியில்
அலைகளின் பிடியில்
உறவினை இழந்து
உற்றார் பெற்றார் இன்றி
ஊரும் உறவுமின்றி
உடுக்கத்துணியுமின்றி
உண்ண உணவுமின்றி
அணைக்க அன்னையுமின்றி
ஆதரவற்ற நாங்கள்
என்னதான் பாவம் புரிந்தோம்?

யுத்த அரக்கப் பிடியில்
உசிரை மட்டும் மிச்சப்படுத்தி
ஊர்விட்டு ஊர்சேர்ந்து
ஒருவேளை சோற்றுக்கு
நியே கதி என்று
ஏங்கி வாழ்ந்த எம்மவரை
கோர அலைப்பிடியில் நீ
காவு கொள்ள என்னதான்
செய்துவிட்டோம்?

ஏலேலோ நாம் பாட
எம் வாழ்வில் வளம் ஈந்த
எம் தாயே ஏன் எமக்கு
இப்படி செய்தாய்?
கடல் தாயின் மடியில்
தவழ்ந்து வந்த மழலைகள் நாம்
தாய்மைக்கு இலக்கணம் சொன்ன நீ
பொங்கி எழுந்து சீறியதேன்?

பால் மணம் மாறா
பச்சிளம் குழந்தைகள்
பந்தாடி மகிழ்ந்த பாலர்
பூச்சூடும் பூவையர்
தாலாட்டும் தாயினம்
தள்ளாடும் மூதாதையர்
தரணியர் போற்றும்
பாவலர் காவலர்
கட்டிளம் காளையர்
இவர்கள் எல்லாம் எங்கே?
நீ ஏன் காவு கொண்டாய்
முடிந்தது உன் வேலை
இனியும் வேண்டாம் இவ்வேலை
இயற்கைத் தாயே எம்மை
இனியாவது வாழ விடு

ஜெனோ
கொழும்பு.

அன்னையே இப்படி ஏன் செய்தாய்?

விடியலைத்தேடித்தான்
விழித்தெழுந்தோம் காலையில்
விஷப்பாம்புகளாய்
கடலலை தாக்குமென்று
கனவிலும் நினைக்கவில்லை!

எத்தனை கனவுகள் கண்டோம்
வாழ்க்கை அடித்தளத்தை
வண்ணமாய் அமைப்பதற்கு!

வள்ளங்களில் எம்வாழ்வு
தாலாட்டப்பட்டுத்
தளைத்து வளர்ந்ததைக்கண்டு
சந்தோஷத்தெப்பமாய்
சங்கமித்திருந்தோம்!

கடல் தான்
எங்களுக்கு
கடவுளாயிருந்தது

மணல் வெளிகளில்
அலைநுரைகளில்
எங்கள் சிறுசுகள்
மகிழ்ந்து கழித்தது
மனக்கண்முன்
வந்துபோகிறது!

எங்கள்
கடற்கரைக்கிராமங்களை
போர்வெறியர்
கடித்துக் குதறினாலும்
களைத்துப் போகாது
கணங்களெல்லாம்
தாலாட்டிவைத்த
கடலலையா இப்படிச்செய்தது
எங்களால்
நம்பமுடியவில்லை

அரக்கத்தனமாய்
அன்னை மாறுவாளா என்ன?

அவள் மடிமீதே
எம் வாழ்கை
தேங்கிக்கிடந்தது

"சுனாமி" என்றொரு
வஞ்சக வடிவம் - இவளுக்கு
வந்தது எப்படி?

ஒரு சில மணிகளில்
ஓட ஓட விழுங்கி
கதறக் கதறக் கடித்து
கெஞ்சக் கெஞ்ச கொலைசெய்து
இன்னும் புரியவில்லை
இது எப்படி நடந்தது?

குடும்பங்களை அழித்து
குழவிகளை ஈனம்செய்து
வாழ்வின் அத்திவாரத்தையே
அழிக்குமளவிற்கு
இந்த அன்னைக்கு எப்படி
ஆத்திரம் வந்தது?

துவம்சம் எனும் வார்த்தைக்கு
இப்போது "சுனாமி" என்றுதான்
நாம் அர்த்தம் கொள்கிறோம்!
ஏனென்றால்
நாம் அவள் வசமிருந்ததால்
துவம்சம் செய்யப்பட்டோம்!

சூரியநிலா
ஈச்சமோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மநாப ஐயருக்கு இயல் விருது

ரொறன்ரோ பல்கலைக்கழக தென்னாசியக் கழகமும், கனடா தமிழ் இலக்கியத் தோட்டமும் இணைந்து வழங்கும் – வாழ்நாள் பங்களிப்பிற்கான 'இயல் விருது' இவ்வாண்டு (2004), இலண்டனில் வாழ்ந்துவரும் இலக்கியச் செயற்பாட்டாளர் இ. பத்மநாப ஐயரிற்கு வழங்கப்படுகிறது.

சிறுகதை, கவிதை என எழுதிக் குவித்து பெயரில நூல்களை ஒருவர் வெளியிட்டிருக்க ஒருவித நியாயம் இருக்கிறது. ஆனால், 'பத்மநாப' தான் ஒன்றையுமே எழுதாதபோதிலும்

சக படைப்பாளிகளின் மேன்மை, நல்ல படைப்புகளின் – நல்ல இரசனையின் மேம்பாட்டில், தமிழைப் பேசுவோரிலும் பிற வெளி ... சிறப்பானவர்களின் கொடுக்கல் வாங்கல்கள், ஒரு தேசிய இனத்தின் தனித்தன்மைகளைப் படைப்புகள் வாயிலாகப் பிறமொழியினரிடமும் கொண்டுசெல்லும் மொழிமாற்ற முயற்சிகள் போன்றவற்றால் – முப்பத்தைந்து ஆண்டுகளாக – அமைதியான ஆற்றல் கொண்டிருக்கும் பத்மநாப ஐயரிற்கு 'இயல் விருது' வழங்கப்படுவதானது, என்றும் முன்னிறுத்தவேண்டிய 'பொதுநல அக்கறை'க்கு வழங்கப்படும் உரிய அங்கீகாரமே.

இது அங்கீகாரம் பெறுமைக்குரியது'

அ. யேசுராசா

ஜெயகாந்தனுக்கு ஞானபீட விருது

இந்தியாவின் இலக்கியத்துக்காக வழங்கப்படும் உயர் விருதான ஞானபீட விருதின் 2005 ஆம் ஆண்டுக்கான விருது மிகச்சிறந்த படைப்பாளியும், மூத்த எழுத்தாளருமான த. ஜெயகாந்தனுக்கு வழங்கப்படவுள்ளது. 1975 ஆம் ஆண்டில் 'சித்திரப் பாவை' நாவலுக்காக எழுத்தாளர் அகிலனுக்கு ஞானபீட விருது வழங்கப்பட்டது. அதன்பின் இவ்விருதினைப் பெறும் இரண்டாவது தமிழ்ப் படைப்பாளி இவராவார். தனது தமிழ்ப் படைப்புக்களினூடாக இந்திய இலக்கியத்துக்கு ஜெயகாந்தன் வழங்கியுள்ள மிகச்சிறந்த பங்களிப்புக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.

ஜெயகாந்தன் 1934 இல் கடலூரில் பிறந்தவர். இதுவரை 40 நாவல்கள், 200 சிறுகதைகள், 15 க்கும் மேற்பட்ட கட்டுரைத் தொகுப்புக்களை அவர் எழுதியுள்ளார். இது தவிர, அவரது 10 படைப்புக்கள் திரைப்படங்களாக வந்துள்ளதுடன், அவரது நூல்கள் வெவ்வேறு மொழிகளில் மொழிபெயர்ப்பும் செய்யப்பட்டுள்ளது.

மௌனகுருவுக்கு சம்பந்தன் விருது

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, இலங்கையர்கோன் ஈழத்தின் முன்னோடி சிறுகதைப் படைப்பாளி சம்பந்தா பெயரால் வழங்கப்பட்டு வரும் சம்பந்தன் விருதின் 2004 ஆம் ஆண்டிற்கான விருது கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி. மௌனகுருவுக்கு அவர் எழுதிய 'சங்காரம்' என்னும் நாடகநூலுக்காக வழங்கப்பட்டுள்ளது. இவ்விருது வழங்கும் நிகழ்வு 20.03.2005 அன்று காலையில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மௌனகுரு பற்றிய அறிமுக உரையை கலாநிதி க. குணராசா வழங்க, யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் மௌனகுரு அவர்களுக்கு பொன்னாடை போர்த்து கௌரவித்ததுடன் விருதினையும் வழங்கிச் சிறப்பித்தார்.

இந் நிகழ்வின்போது சம்பந்தனின் 'துறவு' என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலும், துரைராசா ... அவர்களின் 'சைவத் திருமுறைப் பதப்பொருள் அகராதி' என்னும் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

கனகசெந்திநாதன் கதா விருது

ஈழத்தின் மூத்த சிறுகதையாளரும், விமர்சகருமான இரசிகமணி கனக செந்திநாதன் நினைவாக வழங்கப்படும் கனக செந்திநாதன் கதா விருதுக்கு இம்முறை (2004-2005) ஆறு சிறுகதைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றின் விபரம் வருமாறு:

முள்ளை முள்ளால்
[illegible]
தினகரன் வாரமஞ்சரி – 03-10-2004

மாயாவதியின் கனவு
செம்பியன் செல்வன்
நமது ஈழநாடு – 01-10-2004

மீள்தல்
சாந்தன்
நமது ஈழநாடு 03-10-2004

ஜென்மம்
[illegible] பொன்னையா
ஞாயிறு தினக்குரல் 26-12-2004

நாடும் நம் மக்களும்
[illegible]
மல்லிகை – ஜனவரி 2005 (40ஆவது ஆண்டு மலர்)

பொழுது
க. சட்டநாதன்
மல்லிகை – ஜனவரி 2005 (40ஆவது ஆண்டு மலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தத் தேத்தண்ணிக்கடையில கேட்டால் எங்கேயிருக்கெண்டு தெரியும்"

நான் சொன்னவுடன் அந்தத் தேத்தண்ணிக்கடையோரமாக மோட்டார்சைக்கிளை ஒரு வெட்டு வெட்டிவிட்டு, நிறுத்தினான் லக்கி. நீண்டதூரம் ஓடியிருந்ததால் லக்கி மட்டுமல்லாமல் மோட்டார் சைக்கிளும் நன்றாய்க் களைப்படைந்திருக்க வேண்டும். அதனாலோ என்னவோ மூச்சுவாங்குவது போல மோட்டார் சைக்கிளின் 'இஞ்சின்' பக்கமாய் 'டிக்டிக்' என்ற ஒலி கொஞ்சம் பெரிதாகவே கேட்டுக்கொண்டிருந்தது.

கடைமேசையில் ஒரு முப்பதுவயது மதிக்கத்தக்க பெண் சில்லறைக்காசுகளை எண்ணி, ஏதோ கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"அக்கா! இதாலதானே கண்டாவளைக்குப்போறது?"

நாங்கள் ஊருக்குப் புதிசு என்பதனை இந்தக்கேள்வி அப்பட்டமாக்கியிருந்ததால், அந்த அக்கா ஒருமுறை எங்களைக் கூர்ந்து நோக்கிவிட்டுத்தான் ஒற்றைச்சொல் பதிலை உதடுகளிலிருந்து விடுவித்தாள்.

"ஓம்!"

"அப்ப உங்களுக்கு தேவமதியின்ர வீட்டை எதால போறதெண்டு தெரியுமே?"

"தேவமதியெண்டு....?"

"கம்பசில படிக்கிறா! பொதுநிறம். மெல்லிசு. இப்ப அவையின்ர வீட்டில அவான்ர 'பிரண்டின்ர' குடும்பமும் வந்திருக்கினம்"

நாங்கள் ஒவ்வொரு அடையாளமாகக் சொல்லச் சொல்ல, அந்த அக்கா நெற்றியைச் சுருக்கி ஊரிலுள்ள கம்பஸ் பிள்ளைகள் எல்லோரையும் மனக்கண்ணிலே நிறுத்திவைத்தது, ஒரு அடையாள அணிவகுப்பை நடத்துவது தெரிந்தது.

"தகப்பனுக்குப் பேர் சிதம்பரப்பிள்ளையோ?"

அக்கா கேட்டதும், எங்களின் முகத்தில் பிரகாசம் புகுந்து கொண்டது.

"ஓமோம்! தெரியுமே?"

"ம்! அவான்ர வீட்டை போறதெண்டால் இந்தக் 'கிறவல்' றோட்டால நேராப் போங்கோ. ஒரு பள்ளிக்குடம் வரும் அதுக்கிட்டத்தான் வீடு!"

"தாங்ஸ் அக்கா!"

சொல்லிவிட்டு மோட்டார் சைக்கிளில் அமர்கையில், அந்த அக்கா ஏதோ நினைவுக்கு வந்தவராக -

"நீங்களும் கம்பசோ?"

என்று கேட்டாள்

"ஓமக்கா!"

"என்ன விசயமாப் போறியள்?"

"செத்த வீட்டுக்கு!"

"செத்த வீடோ? அங்க அப்பிடியொண்டுமில்லையே?"

"மதியின்ர வீட்டில வந்திருக்கிற அவான்ர சிநேகிதியின்ர தங்கச்சிமாற்ர செத்தவீட்டை இஞ்சகொண்டாடுகினம் அதுக்குத்தான் போறம்"

சிறுகதை

"உந்தக் கடல் வந்து கொண்டு போச்சுது? அதுக்குள்ளேயே?"

"ஓம்"

"அவையள் எந்த இடம்?"

"உடுத்துறை"

தேத்தண்ணிக்கடை அக்கா கேட்கக்கேட்க, நானும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டேயிருந்தேன். ஆனால் லக்கிக்கு இது எரிச்சலை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அடுத்த கேள்வியை அக்கா கேட்பதற்கு வாயெடுக்கமுன்னரே, மோட்டார் சைக்கிள் அந்தக் 'கிறவல் பாதையில்' புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஓடத்தொடங்கியிருந்தது.

"அவாக்கும் வேறவேலையில்லையெண்டு கேட்டுக்கொண்டிருக்கிறா. நீயும் வேலையில்லாதவன் மாதிரி சொல்லிக் கொண்டிருக்கிறாய். பெட்டையளெண்டால் காணுமே! வந்தவேலை மறந்து கதைச்சுக்கொண்டிருக்கிறாய்"

லக்கி என்னைப் பேசியதில் அரைவாசியைக் காற்றின்வேகம் விழுங்கியிருந்ததால் பேச்சின் உக்கிரம் என்னைப் பெரிதாகத் தாக்கவில்லை.

"இல்லையடா! வீடு காட்டினவாதானே! அதுதான் அவா தெரியாததைக் கேக்கேக்க என்னென்டடா பதில் சொல்லாமல் வாறது?"

எதிர்கொள்ளல்

- தபின்

"சொல்றதில பிழையில்லை. ஆனா எங்களுக்கு நேரமெல்லே போகுது. இப்பமூண்டரை. அஞ்சரை மணிக்குள்ள முகமாலை தாண்டவேணும். பிறகு பொயின்ரை பூட்டினால் என்னென்டடா வீட்டை போறது! இதையொண்டும் யோசிக்காமல் கதைச்சுக்கொண்டு நிக்கிறாய்".

"சரி! செத்தவீட்டில இருக்கிற நேரத்தைக் குறைச்சுக்கொண்டு வெளிக்கிடுவம்"

செத்தவீடு என்றதும் - லக்கி சட்டென அமைதியானான். நானும் மெதுவாய் இறுகத் தொடங்கியிருந்தேன்.

"லக்கி!"

"என்னடா?"

"சுதர்சினியோட என்னெண்டு கதைக்கத் துடங்கிறது? அவளின்ர முகத்தை பாக்கிறதை நினைச்சாக்கூட ஏலாமாக் கிடக்குது!"

"நானும் அதைத்தான் யோசிச்சுக்கொண்டு வாறன். எதுக்கும் போனபிறகு யோசிப்பம்!"

எனக்கு யோசிக்கவே முடியாமலிருந்தது.

சுதர்சினி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளாகத்திலேயே கலகலப்பான பெட்டை என்று பெயரெடுத்தவள். எந்தநேரமும் எல்லோரையும் சிரிக்கவைத்துக் கொண்டே இருப்பாள். [illegible] 'ஸ்ரேஸ் பொதுசில்' பொறுப்பாளர் அவள் [illegible] வீட்டு [illegible] அவள் தான் [illegible] ஒருத்தி.

[illegible] பெட்டையாள் என்று [illegible] எல்லோருடனும் கலகலப்பாகப் பழகுவாள்.

மூன்று வருடங்களாக ஒரேபிரிவில் படிப்பவளை எனக்கும் லக்கிக்கும் அவள் கொஞ்சக்காலமாய்த்தான் பழக்கம். என்றாலும் அவளின் கலகலப்பான சுபாவம் அவளையும் எங்களையும் நெருங்கின சிநேகிதராய் மாற்றிவிட்டிருந்தது.

இப்போது -

அந்தச் சுதர்சினியின் முகத்தை எப்படி எதிர்கொள்வது என்பதுதான் எங்களுக்குப் பிரச்சனையாயிருக்கிறது.

சுனாமி அலை — கரையோரங்களை வாரியெடுத்த போது சுதர்சினியின் இரு தங்கைகளையும் தின்றிருந்தது. [illegible] ஒன்றுமே தெரியவில்லை.

எங்களோடு கூடப்படிக்கும் சாண்டியின் அம்மா 'கான்சரால்' செத்துவிட்ட செய்தி வந்தபோது - சூழ்நிலையை மறந்து

'ஐயோ!'

என்று அவள் அலறிய கணத்தில்தான் சுதர்சினிக்கு சிரிக்கவும் தெரியும், அழவும் தெரியுமென்று உணர்ந்துகொண்டோம்.

[illegible] அவள் சட்டென எதற்கும் மனம் [illegible] தன்மை கொண்டவள். அதனை மறைக்கத்தான் வெளியில் சிரிப்பென்ற பொய்முகமூடியை அணிந்திருக்கிறாள் என்று [illegible] எங்களுக்குப் [illegible] -

அவளையும் விட இளைய தங்கைகள் -

அவளோடு சோடியாய் விளையாடி -

பம்பலடித்து -

சாப்பாட்டை சண்டைபோட்டு உண்டு மகிழ்ந்து -

எப்போதும் அவளோடேயே இருந்தவர்களை [illegible] அவளால் தாங்கியிருக்கவே முடியாது.

'[illegible] ரெண்டுநாளா ஒரே அழுகைதான்' [illegible] நாங்கள்தான் பிறகு இழுத்துக்கொண்டு [illegible]'

என்று மாலினி சொன்னதுதான் [illegible] உடைவை [illegible] மாலினி அவளின் [illegible] இந்தநேரத்தில் [illegible] ஆறுதலுந்தான் அவளுக்குத் தெம்பைக் கொடுக்க முடியும் என்ற எண்ணம் எங்களிருவருக்கும் தோன்ற -

மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு வெளிக்கிட்டு விட்டோம்.

இப்போது அவளின் வீட்டை நெருங்குகையில்தான் -

எப்படி அவளை இந்தநிலையில் எதிர்கொள்ளப் போகின்றோம் என்ற பிரச்சனை [illegible]

[illegible] சிரித்துக்கொண்டு கதையைத் தொடக்கலாம்.

ஆனால் இப்போது?

அவளின் துக்கம் [illegible] நாங்கள் கூட உடைந்துவிடக்கூடும். இத்தனையும் யோசிப்பதற்கிடையில் பள்ளிக்கூடம் வந்திருந்தது. அங்கு நின்றவர்களிடம் விசாரித்தபோது, தேவமதியின் வீட்டை அடையாளம் காட்டினார்கள்.

வீட்டை நெருங்க நெருங்க — எங்களின் முகங்கள் இருளடைந்து கொண்டே வந்தன.

[illegible]

[illegible] ஒரு அம்மா!

'[illegible] இருக்கிறாளோ...?'

'ஓமோம்! வாங்கோ! மதி இஞ்சவா! ஆரோவந்திருக்கினம்'

அம்மா உள்நோக்கிக் குரல்கொடுக்க மதி வெளியே வந்தாள். அதற்கிடையில் - நானும் லக்கியும் முற்றத்தில் [illegible] அமர்ந்திருந்தோம்.

[illegible] உள்ளே போனாள்.

என் மனக்கண்ணில் -

சுதர்சினி ஓவென்று அலறும் காட்சி!

தலையை மெதுவாய்க் குனிந்துகொண்டு முற்றத்து மணலைக் கால்களால் கோலமிடத் தொடங்கினேன்.

சுதர்சினி வரும் காலடியோசை!

தொடர்ந்து எமக்கு முன்னாலிருந்த கதிரையில் அவள் இருக்கும் அரவம்!

இத்தனைக்கும் நான் தலை நிமிரவில்லை.

[illegible]

[illegible] எங்கள் மூவருக்குமிடையில் [illegible] மௌனம்! அதனை [illegible] கலைத்தாள்.

'எப்பிடியெண்டு மதி வீட்டைக் கண்டுபிடிச்சனியள்?'

'மாலினிட்ட 'அட்ரஸ்' வாங்கியந்தனாங்கள். பிறகு உதிலையும் ஒரு தேத்தண்ணிக்கடையில விசாரிச்சு வீட்டைப்பிடிச்சிட்டம்'

பதிலும் குனிந்தபடியேதான் [illegible] வெளிவந்தது.

குப்பென்று 'தேயிலை வாசனை'!

அதற்குள் தேவமதி தேத்தண்ணியோடு வந்துவிட்டிருந்தாள். இப்போது தேத்தண்ணியை எடுப்பதற்காகவேனும் தலைநிமிர வேண்டிய கட்டாயம்.

நிமிர்ந்தேன்.

[illegible] எடுப்பதுபோன்ற பாவனையில் இலேசாக சுதர்சினியின் முகத்தை நோக்கினேன்.

அழுதழுது கண்கள் 'செத்துப்போனமாதிரி' வறண்டு போய்க்கிடந்தது. என்றாலும் முகம் இயல்பாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுதர்சினி! எங்களுக்கு இப்பதான் இப்பிடியெண்டு தெரியும் தெரிஞ்சவுடன் வாறம்"

"பரவாயில்லையடா! எங்களுக்கு மட்டுமே நடந்தது. எல்லாருக்குந்தானே! மற்றவையளின்ர இழப்பைப் பாக்கேக்க எங்களுக்கு குறைவெண்டுதான் சொல்லோணும்"

சுதர்சினி பேச்சில் சோகம் இழையோடினாலும், அதனை வென்று விடுவது போல் அசாத்தியமான நிதானம் வெளிப்பட்டு நின்றது.

"அப்ப உங்கட வீடு...?"

"வீடிருந்த அடையாளமேயில்லை. அத்திவாரத்தைக் கூட அடிச்சுக் கிளப்பிக்கொண்டு போட்டுது. அம்மாவையும் அலை இழுத்துக்கொண்டு போட்டுது. அவா ஏதோ ஒரு மரத்தைப் பிடிச்சதாலதான் தப்பினவா!"

சொல்லிவிட்டு அவ்வளவுநேரமும் எங்களுக்கப்பால் மௌனமாய் கதிரையிலிருந்த தன்தாயை நோக்கினாள். உடலெங்கும் ஒட்டப்பட்டிருந்த 'பிளாஸ்ரர்களோடு' அவளின் அம்மா நாங்கள் இருப்பதே தெரியாத மாதிரி இலக்கேதுமில்லாமல் வானத்தை வெறித்தபடியிருந்தாள்.

"வேற ஆரும் எங்களுக்குத் தெரிஞ்ச 'கம்பஸ் காரருக்கு' சேதமே?"

அவள் அக்கறையாய் கேட்டாள்.

"ஓம்! முல்லைத்தீவில செல்வன்ர அண்ணையையும் கடல்கொண்டு போட்டுது!"

"பாவமடா! எங்கட இடத்தைவிட அங்கதான் இழப்புக்கூடவாம். பாவியள் போன இடமெல்லாம் பள்ளந்திட்டியெண்டமாதிரி சண்டையால செத்துச் சீரழிஞ்சுபோய் அந்தச்சனம் இருந்தது பத்தாதெண்டு இப்ப இந்தக்கடலும் அழிச்சுப் போட்டுது"

மற்றவர்களின் இழப்பிற்காய் இரங்குகின்ற அவளின்குணம் இப்போதும் வெளிப்பட்டது.

"வரேக்க சாமான் ஏதாவது எடுத்தந்தனியளே?"

இது நான்!

"உடுத்த உடுப்போடதான் வந்தனாங்களடா. ஒரு சாமானும் எடுக்கேலை. இப்ப தேவமதி வீடுதான் எங்களுக்கு உதவி. அவைக்கும் நெடுகக் கரைச்சல் குடுக்கேலாதுதானே. கிளிநொச்சிப் பக்கமாய் வாடகைக்கு ஏதாவது வீடிருக்குதோ எண்டு அப்பா பாக்கப் போயிருக்கிறார்"

லக்கி மெதுவாய் மணிக்கூட்டைப் பார்த்தான். முகமாலைப் 'பொயின்ற்' பூட்டமுதல் அதைக்கடக்க வேண்டிய கட்டாயத்தில் புறப்பட ஆயத்தமானோம்.

"சரி! நாங்கள் வாறம். ஏதும் உதவி தேவையெண்டால் பயப்பிடாமல் எங்களிட்டகேள்"

"ஒண்டு செய்யேலுமோ?"

"என்ன? சொல்லு".

"எங்கட 'ரூம்' அன்ரியிட்ட என்ர தங்கச்சியளின்ர படமிருக்கு. அதையொருக்கா வாங்கி மாலினிட்ட குடுத்தியெண்டால் அவள் என்னட்டத் தருவாள் என்னட்ட தங்கச்சியளின்ர ஒரு படங்கூட இப்ப இல்லையடா அதுகளைக்கூட அலை கொண்டுபோட்டுது"

"கட்டாயம் வாங்கிக் குடுத்துவிடுறம்"

கொஞ்ச நேரத்தில் 'கிறவல்றோட்' புழுதியை ஊடுருவிக்கொண்டு எங்களின் மோட்டார்சைக்கிள் விரைந்து கொண்டிருந்தது.

மனசெங்கும் சாம்பலிலிருந்து உயிர்த்தெழுந்த பீனிக்ஸ் பறவையாய் சுதர்சினி பறந்துகொண்டிருந்தாள்.

(யாவும் கற்பனையல்ல)

கடற்கோளால் பாதிக்கப்பட்ட மக்களுடன் திருமறைக் கலாமன்றம்

'சுனாமி' இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி மற்றும் நீண்ட காலத் தேவைகளை நிறைவேற்றும் பணியில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் திருமறைக் கலாமன்றம் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. குறிப்பாக, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கொழும்பு மற்றும் காலி, மாத்தறை ஆகிய பிரதேசங்களில் இப்பணிகளில் அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்

இயற்கை அனர்த்தம் நடைபெற்ற நாளிலும், அதனைத் தொடர்ந்து வந்த நாட்களிலும் மீட்புப் பணிகளில் இணைந்து நின்றது முதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடுப்பு வகைகள், உலர் உணவுகள், வீட்டுப்பாவனைப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளதுடன், தொடர்ந்தும் உடனிருந்து உறவாடி ஆற்றுப்படுத்தல், வழிபாடுகள், மற்றும் அரங்கச் செயற்பாடுகள் ஊடாக ஆற்றுப்படுத்தல் என இப்பணி நீண்டு செல்கின்றது. இவற்றுடன் நம்பிகைதரும் வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டு பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் இடங்களில் ஒட்டப்பட்டன.

இச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாக, அனர்த்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு ஆன்ம இளைப்பாற்றி வேண்டி மட்டக்களப்பு திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் 31ஆம் நினைவு நாளில் (26.01.2005) மட்டக்களப்பு மகாத்மா காந்தி சதுக்கத்தில் பல் சமயத் தலைவர்களையும் இணைத்து 'வாழ்வு நம் கையில்' என்ற தலைப்பில் இடம்பெற்ற பிரார்த்தனை நிகழ்வும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கலை நிகழ்வும், அன்றைய நாளில் யாழ் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் மன்ற அரங்கில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வும் குறிப்பிடத்தக்கவையாக அமைகின்றன.

படத்தில் மட்டக்களப்பு திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்கள் மட்டக்களப்பு பிரதேசத்தில் அரங்கிறகூடாக ஆற்றுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மீண்டும் வரும் நாட்கள்" நூல் வெளியீட்டு விழா

திருமறைக் கலாமன்றத்தின் நீண்டகால அங்கத்தவராக இருந்து அதன் கலை இலக்கிய முயற்சிகள் பலவற்றிற்கு தூணாக நின்றதுடன் 'கலைமுகம்' சஞ்சிகையின் ஆரம்பகால பொறுப்பாசிரியராகவும் இருந்து செயற்பட்டு தற்போது லண்டனில் வாழ்ந்துவரும் குருநகரைச் சேர்ந்த கவிஞர் மு.புஷ்பராஜனின் 'மீண்டும் வரும் நாட்கள்' என்ற கவிதை நூலின் வெளியீட்டு விழா, 19.02.2005 மாலையில், யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமை தாங்கினார். திருமறைக் கலாமன்ற ஊடக இணைப்பாளர் கி.செல்மர் எமில் வரவேற்புரையையும், 'தெரிதல்' இதழின் ஆசிரியரும், விமர்சகருமான அ. யேசுராசா வெளியீட்டுரையையும் நிகழ்த்தினர். மதிப்பீட்டுரைகளை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முன்னாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் கலாநிதி சே. திருநாவுக்கரசு, திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் ம. சாம் பிரதீபன் ஆகியோர் வழங்கினர்.

நூலினை மூத்த விமர்சகரான ஏ.ஜே. கனகரட்னா வெளியிட்டுவைக்க, முதற் பிரதியை கவிஞர் வேல்மாறனும், சிறப்புப் பிரதிகளை வி.ஜே. கொன்ஸ்ரன்ரைன், அருள்திரு யோ. ஜெயசீலன் அடிகளார் ஆகியோரும் பெற்றுக்கொண்டனர்.

கலை இலக்கியப் படைப்பாளிகள், ஆர்வலர்கள் அடங்கலாக நூற்றுக்கணக்கானோர் இவ் வெளியீட்டு விழாவில் பங்குபற்றிச் சிறப்பித்தார்கள்.

'மீண்டும் வரும் நாட்கள்' கவிதை நூல் தமிழியல் - காலச்சுவடு இணை வெளியீடாக வெளிவந்துள்ளது. இந் நூலில் 1970 களில் இருந்து பல்வேறு காலப்பகுதிகளிலும் புஷ்பராஜனால் எழுதப்பட்ட 62 கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

வெளியீட்டு விழாவில் இடம்பெற்ற சில உரைகளின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றது.

"கவிஞர் மு.புஷ்பராஜன் அவர்கள் இம் மண்ணில் வாழ்ந்த போது கலை இலக்கிய செயற்பாட்டினால் தன்னை இனம் காட்டிய ஒருவர். இந்தச் சமூகத்திலே ஒரு முற்போக்குத் தன்மையுடன் செயற்பட்ட இளைஞர்களில் அவரும் ஒருவராக அக்காலத்தில் காணப்பட்டார்."

யோ. யோண்சன் ராஜ்குமார்

"இந்நூல் தமிழியல் நிறுவனத்தின் வெளியீடாகும். இந் நிறுவனம் எண்பதுகளில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டது. சுமார் பத்து நூல்களை இந்நிறுவனம் இதுவரை வெளியிட்டுள்ளது. அவற்றில் சில மிக முக்கியமானவை. சிலகாலம் இயங்காதிருந்த இவ்வமைப்பு மீண்டும் செயற்படத் தொடங்கி அண்மையில் இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளது. அதில் ஒன்றுதான் 'மீண்டும் வரும் நாட்கள்' நூலாகும்."

அ. யேசுராசா

"கடந்த இருபத்தி ஏழு வருட காலத்தை உள்ளடக்கியதாக இக்கவிதைகள் அமைந்துள்ளது. கவிஞர் இங்கிருந்தபோது பட்ட அனுபவம் அதுமாத்திரமல்ல, அவரது உள்ளத்திலே இந்த உலகத்தின் துன்பமெல்லாம் அடங்கியுள்ளது. இந்த கவிதைப் புத்தகத்திலே மகிழ்ச்சி என்ற விடயம் மாத்திரம் கொஞ்சம் தேடித்தான் படிக்க வேண்டியுள்ளது."

சே. திருநாவுக்கரசு

"இவரது கவிதைகளிலே பிரதேச சொல்வளங்கள் காணப்படுகின்றது. கடற்தொழில் சார்ந்த சூழ்நிலைத் தாக்கம் நிறையவே வருகின்றது. கத்தோலிக்க சமயப் பின்னணியிலே வருகின்ற ஐதீகத்தில் இருந்து பல கவிதைகளை உருவாக்கித் தொகுத்துள்ளார்."

ம. சாம் பிரதீபன்

"கவிதைக்கு ஓர் ஓசை இருக்கிறது. ஒத்திசைவு என்ற விடயமும் இருக்கிறது. அவற்றையெல்லாம் மெல்ல மெல்ல தமிழ் கவிஞர்கள் கைவிட்டு வருகின்றனர். புதுக்கவிதையின் பிதாமகன் என்று சொல்லக்கூடிய பிச்சமூர்த்தி "மலர்கள் காட்டில் காற்று வீசி ஓய்ந்த ஒலி" என்று கவிதையை வர்ணித்தது போல கவிதைக்குள் ஓர் ஒலி இருக்கும். அந்த ஒலித் தன்மையை புஷ்பராஜனின் 'மீண்டும் வரும் நாட்கள்' என்னும் கவிதைத் தொகுப்புக்குள் கண்டுகொள்ள முடிகிறது."

சோ. பத்மநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது நல்ல சினிமா?

எது நல்ல சினிமா? நல்ல சினிமாவுக்குச் சில அடிப்படை அளவுகோல்கள் உண்டு. இவற்றைத் தெரிந்துகொண்டால்தான் தரமான படங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியும். இலக்கியத்தைப் போலவே நமது சினிமா அனுபவம் ஆழமாவதற்கு நல்ல சினிமா என்றால் என்ன என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாகிறது. எது நல்ல சினிமா என்பதை வரையறுப் பதற்குமுன். எது சினிமா என்ற அடிப்படைக் கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது. நினைவில் கொள்ளுங்கள் - திரையில் வருவதெல்லாம் சினிமா அல்ல; அச்சில் வருவதெல்லாம் இலக்கியம் ஆகாதது போலவே.

சினிமா, திரைப்படமாக்கப்பட்ட நாடகம் அல்ல. இது ஒரு அடிப்படையான வித்தியாசம். நிகழ்ச்சி ஒன்றை அவையோரின் முன் நிகழ்த்திக் காண்பிப்பது நாடகம். சினிமாவின் தன்மையே வேறு. தமிழ்நாட்டில் சினிமா வளராததற்கு ஒரு முக்கிய காரணம் அது நாடகத்திற்கு அடிமைப்பட்டு இருப்பதுதான். இதற்கு வரலாற்று ரீதியான காரணங்களும் உண்டு. பேசும்படத்தின் ஆரம்பக் கட்டத்தைப் பார்ப்போம். அன்று (1930களில்) பிரபலமாக இருந்த புராண நாடகங்களே படமாக்கப்பட்டன. நாடகமேடை மாதிரியே செட்போடப்பட்டு, காமிராவை முன்னால் வைத்து நாடகம் நடிக்கப்பட்டு, நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்து அது படமாக்கப்பட்டது. சென்னையிலிருந்த நாடகக் கம்பெனிகள், கூட்டம்கூட்டமாக கல்கத்தாவுக்கும். பம்பாய்க்கும் சென்று தங்கள் நாடகங்களைப் படமாக்கிக் கொண்டன. அண்மைக் காலம்வரை, இயக்குநர்கள், நடிகர்கள், வசனகர்த்தாக்கள், பாடலாசிரியர்கள் யாவரும் நாடகத் துறையிலிருந்து வந்தவர்கள். நாடகத்தின் இந்த உடும்புப் பிடியிலிருக்கும் வரை ஆரோக்கியமான சினிமா மலர வழியில்லாமல் போயிற்று.

நமது இன்றைய படங்களிலும்கூட நாடகத்தனம் மிகுந்திருப்பதைக் காணலாம். கதாபாத்திரங்கள். சதுரமான திரையின் விளிம்பிலிருந்து வருவார்கள். மேடைக்குள் நுழைவதைப்போல வசனத்தைப் பேசிவிட்டுப் பக்கவாட்டில் சென்று மறைவார்கள். குரலை ஏற்றி இறக்கிப் பேசாமல் கத்திப் பேசுவார்கள்; நாடக அரங்கின் கடைசி வகுப்பில் உட்கார்ந் திருப்பவனுக்கும் கேட்கவேண்டுமே! பாத்திரங்களை ஏற்று நடிப்பவர்கள் காமிராவைப் பார்த்து (பார்க்க வந்திருக்கும் ரசிகர்களைப் பார்த்து) பேசுவார்கள். பேசிக்கொண்டே யிருப்பார்கள்.... பேச்சு... பேச்சு. படம் முழுவதும் பின்னணி இசை ஒலித்துக் கொண்டிருக்கும். நாடகத்தில் மேடையின் கீழமர்ந்திருக்கும் இசைக் குழுவின் இசையைப்போல. இத்தகைய நாடகத்தனம் சினிமாவின் தன்மையைச் சீர்குலைக்கிறது.

சினிமா. காமராவினால் பதிவு செய்யப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியுமல்ல; எந்த ஒரு படத்திலும் இழையோடும் ஒரு மையக்கரு ஒன்று இருக்கும். இந்தக் கருவைச் சாராத எந்தக் காட்சிப் படிமத்திற்கும். ஒலிக்கும் அப்படத்தில் இடமில்லை. அப்படி சம்பந்தமில்லாத காட்சி வந்தால். அது சினிமாவாக இல்லாமல் படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சி ஆகிறது. சினிமா, வாய்ப்பேச்சால், வார்த்தைகளால் சொல்லப்படுவதல்ல, அப்படி இருந்தால் அதற்கு ஒரு திரை தேவையிருக்காது. ஒலி நாடாவிலோ, வானொலியிலோ கேட்டுத் திருப்தியடைய முடியும்.

சினிமா, படமாக்கப்பட்ட நாடகமல்ல; படமாக்கப்பட்ட பல்சுவை நிகழ்ச்சியுமல்ல; வாய்ப்பேச்சால் சொல்ல முடியாதது. அப்படியானால் சினிமா என்பது என்ன?

ஒவ்வொரு கலைக்கும் அதற்கே உரிய சில அடிப்படைப் பண்புகள் உள்ளன. ஒரு படைப்பாளி, இந்தப் பண்புகளைச் சரிவரப் பயன்படுத்தும்போது அந்தக் குறிப்பிட்ட கலை மலர்கிறது. ஓவியத்தைப் பாருங்கள். அது கோடுகளாலும் படிமங்களாலும், வண்ணங்களாலும் ஆனது. "மலர்" என்ற வார்த்தையை ஒரு பலகையில் எழுதி, இது ஒரு ஓவியம் என்று உங்களை நான் ஏமாற்ற முடியாது. ஓவியத்தின் தனித்துவப் பண்புகள் அங்கில்லை. அதேபோல் இசை, தொனியாலும் லயத்தாலும் ஆனது. நடனம் உடல் அசைவை அடிப்படையாகக் கொண்டது. சினிமாவின் சிறப்பு அம்சம், அதற்குத் தனித்துவத்தை அளிக்கும் அம்சம், சினிமா மொழி எனலாம்.

சினிமா மொழி என்றால் என்ன? இதில் மூன்று அம்சங்கள் உள்ளன. முதலாவது அது காட்சிப் படிமங்களால் ஆனது. பாலுமகேந்திராவின் அழியாத கோலங்களில் (1979) ஒரு காட்சித் தொடர்; வாய்க்கால் ஒன்றில் சிறுவர்கள் நீந்தி விளையாடுவது. அதிலொருவன் மூழ்கி இறப்பது. கிராமத்து மக்களின் வருத்தம், அதிர்ச்சி, சிறுவனின் ஈமக்கிரியைகள் எல்லாமே அழுத்தமான, அழகான, வரிசையான காட்சிப் படிமங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன. சினிமா அங்கே தன்னைக் காட்டிக்கொள்கிறது.

இரண்டாவது அம்சம், ஒலி. இது காட்சிப் படிமங்களுக்கு தாங்கலாக வருவது. சினிமாவில் ஒலி பலவிதப்படும். பேசும் வார்த்தைகள் இயல்பான ஒலி (ரயில் ஓடுவது, பறவைகளின் இரைச்சல், ஓடும் நதியின் சலசலப்பு) கடைசியாக, இசை (இசையே இல்லாத படங்களும் உண்டு). எங்கே ஒலி முக்கியத்துவம் பெற்று காட்சிப் படிமங்கள் இரண்டாவது கட்டத்திற்குத் தள்ளப்படுகின்றனவோ அங்கே சினிமா சீரழிந்து தாழ்ந்து போகிறது. ஒலி, காட்சிப்படிமத்திற்குத் துணைபோவதற்கு ஒரு எடுத்துக்காட்டு; பாரதிராஜவின் கல்லுக்குள் ஈரம் (1980) படத்தில் வண்ணான் ஒருவன் குடித்துவிட்டு ஆடும்போது பின்னணியில் "வண்ணான் வந்தானே வண்ணாரச் சின்னான் வந்தானே" என்ற கிராமியப் பாடலின் இசை.

சினிமா மொழியின் மூன்றாவது முக்கிய அம்சம் படத்தொகுப்பு (Editing). தனித்தனியாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட காட்சிப் படிமங்களும். ஒலிப்பதிவுகளும் ஒரு அர்த்தமுள்ள கோர்வையாக அமைக்கப்படுவது. இதை சினிமா இலக்கணத்திற்கு அடித்தளம் எனலாம். எப்படி இந்தக் கோர்வை அமைகிறதோ அந்த விதத்திலேயே அந்த நிகழ்ச்சித் தொடரின் அர்த்தமும் மாறும். ஒரு உதாரணம்: வருத்தம் தோய்ந்த ஒரு மனிதனின் முகம், ஒரு தட்டில் கோழி வறுவல், புன்சிரிப்புடன் அந்த மனிதனின் முகம் என்ற மூன்று காட்சிப் படிமங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] காட்சிப் படிமங்களும் [illegible] இணைகள் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] காட்சிப்படிமங்களை நோக்கித் [illegible] போகுது [illegible].

[illegible] [illegible] (Cut) [illegible] [illegible] (Dissolve) [illegible] சினிமா மொழி [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

இந்த சினிமா மொழியை [illegible] [illegible] [illegible] சினிமா [illegible] [illegible] [illegible] [illegible] 'இசை' [illegible] [illegible].

இந்த சினிமா மொழிக்கு [illegible] [illegible] தொழில் நுட்பக் [illegible] சினிமா [illegible] [illegible] படைப்பாளரும் நம் நாட்டில் [illegible]

கோபாலகிருஷ்ணன், அரவிந்தன், [illegible] கௌல் போன்றோரின் பல படைப்புகளும் [illegible] இதை உணர்த்தும்.

காட்சிப் படிமங்களின் மூலம் [illegible] பொருளை, எளிதில், சுட்டிக்காட்ட [illegible] மனித மனத்தின் [illegible] நிலைகளை ஹிட்ச்காக் [illegible]. காட்சிப் படிமங்கள் மூலம் சொல்லக்கூடிய ஒன்றை வார்த்தைகள் மூலம் கூற முயன்றால் அங்கே சினிமா சிதைகிறது என்றார் ஹிட்ச்காக். தமிழ் சினிமாவில் காட்சிப் படிமங்களால் கதைசொல்லும் முறை சரியாக வளரவில்லை. இது இந்தி சினிமாவுக்கும் பொருந்தும். [illegible] நாளிலிருந்து [illegible] [illegible] வெற்றி [illegible] ஒரு [illegible] எப்படி? [illegible] நாட்களில் புராணக் கதைகளே படமாக்கப்பட்டன. இவை மக்களுக்கு நன்கு தெரிந்த கதைகள். ஆகவே காட்சிப் படிமங்கள் மூலம் கதையை உணர்த்த வேண்டிய அவசியம் இல்லாமல் போனது. [illegible] கதையில் [illegible] முக்கியத்துவம் [illegible] (காட்சிப்படிமமுறைதான் [illegible]) பிறகு 1950களில் [illegible] [illegible]. இப்படி [illegible] (பேச்சு) கொடுக்கும் அதிக முக்கியத்துவமே காரணம். 50களில் திரையில் பேசிக்கொண்டே இருக்கும் மனிதர்களையே அதிகம் கண்டோம் சினிமா [illegible] [illegible].

சினிமா மொழியைப் பல முறைகளில் [illegible] குறியீடுகள் மூலம் (Symbol) [illegible] ஒருமுறை. [illegible] உதிரிப்பூக்களில் [illegible] அவிழ்ந்த [illegible] பெண்ணின் நம்பிக்கையின் குறியீடாகக் காட்டப்படுகிறது. பேர்க்மன் Wild Strawberries (1957) என்ற படத்தில் அன்பு சிறிதளவும் இல்லாத தம்பதியரைச் சித்தரிக்கிறார். அவர்கள் செல்லும் கார் வழியில் பழுதடைந்துவிடுகிறது. இருவரும் அதைத் தள்ள முயற்சிக்கிறார்கள். இங்கே அந்த கார், அவர்களுடைய வாழ்க்கையின் குறியீடாக அமைகிறது.

இசை, நாடகம், நடனம் [illegible], சினிமா முழுக்கமுழுக்க தொழில் நுட்ப வளர்ச்சியின் படைப்பு. காமிரா, லென்ஸ், ஒளிவிளக்குகள், [illegible] (Projection) [illegible] உதவியால் [illegible]. ஆகவே சினிமாவைப் [illegible] அதன் தனித்தன்மைகளை [illegible] வேண்டும்.

அது சினிமாவாக இருக்கிறது என்று, அதை ஒரு கலை [illegible] (இலக்கியம்) அல்லது நாடகத்தை [illegible] சினிமாவை [illegible] [illegible] தேவையே இல்லை என்று [illegible].

இயற்கை [illegible] சினிமா மொழி [illegible] [illegible] அது தனித்துவமான [illegible] அதுதான் சினிமாவின் [illegible] சினிமாவைப் பற்றி [illegible] நம் சினிமாவின் [illegible] படைப்புகளின் [illegible] அழகியலை [illegible] [illegible] (1980)

நன்றி – தமிழ் சினிமாவின் முகங்கள்

க. தியடோர் பாஸ்கரன்

கலைக்கான
பணியில்
திருமறைக் கலாமன்றம்
40 ஆண்டு
நிறைவில்
1965 - 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனித் தேவைக்கு மட்டுமே...

நிலவைத் தொடும் கடலே எம்
கரையைக் கடந்ததேனோ?
கடலைப் பார்த்து வாழும் எம்
கதையை முடித்ததேனோ?

காற்றாய் வருவதும்
கரிநிலவில்
எம்மைக் கலங்கடிப்பதும்
சீற்றமாய் சீறுவதும்
உன் கரைமட்டும் என்றிருந்தோம்
நேற்றுவரை.
முன்னை நாள் தோழனே!
ஊருக்குள் வந்து எம்மை
வாரிக்கொள்ள
பகை உனக்கு என்செய்தோம்
இன்று?

அழகிய காலையின்
அடிவானம் வெளுத்த பின்பு
அந்த பிஞ்சுடல்களை ஏன் பறித்தாய்?
தோற்றுப் போகாதபடி
தோள் வலிமை தந்த கடலே!
வாகை சூடி வாழ்வை நிஜமாக்கும்
வசந்தத்தின் முத்திரையே!
தோகை மயிலாய் எம்முன்
எப்போதும் விரிந்த கடலே!
அத்துமீறியது எதற்காக?
அணைத்த கரம் ஓங்கி
அடித்ததேன்?
உன் சீற்றம் சிதைத்தது எம்
கூடுகளை - அச்
சிதையின் அருகே கதறுகிறோம்.
சிணுங்கி அழ, இங்கே
குழந்தைகள் இல்லை
அவை
சில்லறை சிதறல்களாய்
தம் கல்லறைக்காய் காத்திருக்கின்றன.
பனித்துளிகள் படரும் காலை
தனித்தனி உடல்கள் இங்கே.
யாருக்கு விடை தெரியும்?
ஆறுதல் சொல்ல தாயுமில்லை
வார்த்தையுமில்லை
உலகப்படத்தை
நெளித்துக் கீறும் போதே
நினைத்தேன்.
கலகங்கள் பல விளைவித்திருக்கிறாய் என
முன்னரும்.
தமிழ்த் தாய்க்கு
நான்கு பிள்ளைகள்
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
கடைக்குட்டி மட்டும் ஏன்
காவாலியானது?
ஊதாரி மகன்போல்
சொத்துக்களை அழித்துவிட்டு



சொந்த இடம் திரும்பிவிட்டது
இனி எனக்கு
காதலிக்க குறிஞ்சி
காற்று வாங்க மருதம்
களைப்பாற முல்லை உண்டு.
உன் எல்லைக்கு
என் தேவைக்கு மட்டுமே வருவேன்
எனினும் பழைய அன்பில்லை
வெண்ணுரை காட்டி
சமாதானம் செய்த உன் பொய்முகம்
26 .12.2004 இல் யுத்த பிரகடனத்தால் கிழிந்தது
காயத்திற்கு கட்டுப்போட்டுக்
கொண்டிருக்கிறேன்
மீண்டும் வருவேன்
தேவைக்கு மட்டும் .

எஸ். ஏ. அருட்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்தில் பங்குகொண்ட கலைஞர்கள் நடிகர் [illegible]

திருமறைக் கலாமன்றத்தின் கடல் கடந்த கலைப் பயணங்கள்

1

யோ. யோண்சன் ராஜ்குமார்

அறிமுகம்

கலை இனத்துக்குரியது, பொதுப்போக்கிற்குரியது என்பதுமல்லாமல் அப்பால் அது மானிடப் பொதுமையின் ஆத்மமொழி என்பதை இத்துறையிலீடுபட்டவர்கள் புரிந்துகொள்வர். குறிப்பாக மேலைத்தேசக் கலையுலகில் இக் சிந்தனையோட்டத்தை நாம் அவதானிக்கலாம். இந்த இலங்கையில் இருந்து தனது வரலாற்றை எடுத்துக்கொண்டு தொடர்ந்து செல்லும் 'திருமறைக் கலாமன்றம்' (Centre for Performing Arts) பல்துறை சார்ந்து வருடங்களை எட்டியுள்ள பணியையும், அதன் விரிந்த வளர்ச்சியையும் பாவருமிடம். அவை 'விழுந்த விதை வெடித்து மேலெழுந்து பயிராகி பல் வேறு பாதை கிளைபரப்பி பெருவிருட்சமாய்' மாறிவருவதை இந்த மண்ணின் மக்கள் அனைவரும் அறிவர். உரும்பிராயில் சிறியதாய் ஆரம்பித்த இதன் இயக்கம், இன்று இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில், இதுதவிர இலங்கையின் வெளிநாட்டுக் கிளைகள் என்றும் பல நாடுகளில் பல செயற்பாடுகளைக் கொண்டும் பெருவிருட்சமாக ஒரு நிறுவனமாக மாறியுள்ளது. கலை, பண்பாடு என்ற தளத்திலிருந்து வளர்ந்து நின்றுகொண்டு கலை, இலக்கியம், கலாசாரம், இறை [illegible] இருகரங்கள் பணியாற்றுவர் என பன்முக நோக்குகளுடனும் செயல்வீச்சை கொண்டுவரும் இம் மன்றத்தின் பணிகளும், விளைவுகளும், ஆராயப்படவேண்டியவை. ஆவணப்படுத்தப்பட வேண்டியவை அவசியமானதும். இந்தச் சிந்தனையின் உந்துதலுடன், திருமறைக் கலாமன்றத்தின் 'கலைவழி பணி பாதையமைத்த' கலைப்பயணங்களை, அதிலும் குறிப்பாக கடல் கடந்த பிறநாடுகளில் மேற்கொண்ட பயணங்களையும், அவற்றின் அனுபவங்களையும் இத்தொடர் கட்டுரை மூலமாக ஆராய முயல்கின்றேன்.

பயணத்தின் மூலவர்

'திருமறைக் கலாமன்றம்' என்ற கலை நிறுவனத்தின் ஸ்தாபகராகவும், இன்றுவரை அதன் இயக்குநராகவும் இருந்து செயலாற்றிவருபவர் 'கலைத்தூது' நீ.மரியசேவியர் அடிகள். அவரின் ஆழமான சிந்தனைகளும், தன்னலங் கருதாத சேவை மனப்பான்மையுமே இம்மன்றத்தின் அத்திவாரமாக இருந்து இன்றுவரை இவ்வளவு நிறுவனத்தை இயக்கி வருகின்றது. மிகக்குறைந்த வயதிலேயே குருத்துவத்தில் நுழைந்து கேரளத்திலும், விசேடமாக - உரோம், இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மனி... என தனது பட்டப் பின்படிப்புகளை பலநாடுகளில் மேற்கொண்டு, பல மொழிகள் தெரிந்த, பல நாடுகளின் பண்பாடுகளை அறிந்த, பலரோடுடனும் தொடர்புகளைக்கொண்ட, ஆனால் தமிழையும் கலையையும் அதிகம் நேசிக்கும் ஒரு அற்புத மனிதராக அவர் திகழுகின்றார். அவரது இந்த பின்புலமே கடல் கடந்த பயணங்களுக்கு அடிகோலாக அமைந்தன. "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற ஆர்வத்தால் உந்தப்பட்டு தான்சென்ற நாடுகளின் சிறப்பினை, தனது கலைஞர்களும் நுகர வேண்டும் என்ற எண்ணம் ஒருபுறம், கலைகளினூடாக பல்லினப் பண்பாட்டு மனித உறவுச்சங்கிலியை ஏற்படுத்தும் நோக்கு மறுபுறமுமாக இணைந்த ஒரு சூழ்நிலைகளில் இப்பயணங்கள் நெறிப்படுத்தப்பட்டன.

இலங்கையில் இருந்து கலைஞர் குழுவொன்று வெளிநாடு சென்று மீளுவது என்பது சாதாரணவிடயமே அல்ல. பல லட்சக்கணக்கான நிதி, வீசாவும், அதிலும் தமிழர்கள் என்றாலே அனுமதியை மறுக்கும் தூதராலயங்களின் போக்கு, அதில் பெரும் பிரயத்தனத்துடன் வெற்றிகொண்டிருக்கும் 'விசா' அனுமதிகள், அந்தந்த நாடுகளில் 'பிணை' நிற்கக்கூடிய (Bail) செல்வாக்காளர்கள்; அந்த நாடுகளில் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்கள், பயணத்தின்போது இருப்பிட ஒழுங்குகள்... என நீண்டு செல்லும், நினைத்துப் பார்க்கமுடியாத சங்கடங்களையெல்லாம் எதிர்கொண்டு பயணம் ஒழுங்கு செய்தல் என்பது 'கல்லிலே நார் உரிப்பது' போன்றதும், கடினமானதும், விடாமுயற்சியும் இதற்கு அவசியம் இதை

அனைத்தையும் தனது முயற்சியாலும், உழைப்பாலும் வென்று இற்றைவரை, பத்துக்கும் மேற்பட்ட கலைப்பயணங்களை திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டு மீண்டிருக்கின்றதென்றால் அதற்கு முழுமுதற் காரணம் மரியசேவியர் அடிகளே ஆவர். இவரது இந்த பகிரத்தனம் மிக்க பணிகளை பாராட்டியே 1998ஆம் ஆண்டு ஜேர்மனி ஆன்மீகப் பணியகம் 'கலைத்தூது' என்ற பட்டத்தை வழங்கிகௌரவித்தது.

பயணம் – 1

தென் இந்தியக் கலைப்பயணம் – 1973

கடல்கடந்து திருமறைக் கலாமன்றம் மேற்கொண்ட பயணங்களின் தொடக்கப் பயணமாக அமைந்தது, 1973 இல் மேற்கொண்ட இந்தியக் கலைப்பயணமாகும். ஏறத்தாள இருபது கலைஞர்களுடன் தமிழ் நாட்டுக்குச்சென்று, திருச்சி தேவர் மண்டபத்தில், 'களங்கம்' என்னும் நாடகத்தை நிகழ்த்தி, பல்வேறு கலைஞர்களையும் சந்தித்ததுடன், வெவ்வேறு கலை நிகழ்வுகளையும் தரிசித்து மீண்ட அந்த முதற்பயணம் பல வகைகளிலும் முக்கியத்துவமுடையது.

இந்தியக் கலைப் பயணத்திற்கான பின்னணி

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கலைஞர்கள், அதிலும் குறிப்பாக நாடகக்கலைஞர்கள் வந்து செல்வது புதிய விடயமொன்றல்ல. நாம் அறியத்தக்கதாக, தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், M.S சுப்புலட்சுமி, S.G. கிட்டப்பா, கோவிந்தசாமிப்பிள்ளை, R.S. மனோகர்.... என்றெல்லாம் தமிழ்நாட்டில் பிரபல்யம் பெற்றிருந்த நாடகக் கலைஞர்கள் காலத்துக்குக்காலம் இங்கு வந்து சென்றனர். ஆனால் ஈழத்திலிருந்து கலைக் குழுவாக இந்தியாவுக்கு சென்றவர்கள் என்று யாரும் இருக்கவில்லை. இந்த வரலாற்றை மாற்றி அமைத்த பணியை அன்று திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டது.

மரியசேவியர் அடிகள், துடிதுடிப்பும், வேகமும் பற்றுதியும் மிக்க குரவராகப் பணியாற்றிய காலத்தில் தூரநோக்கோடு பல குருக்களையும் உயர் கல்வி பயில ஊக்கமளித்து வந்த


பிருந்தாவனம் பூங்காவில்...

தமிழ்நாட்டில் பிரபல்யம் பெற்றிருந்த நாடகக் கலைஞர்கள் காலத்துக்குக்காலம் இங்கு வந்து சென்றனர். ஆனால் ஈழத்திலிருந்து கலைக் குழுவாக இந்தியாவுக்கு சென்றவர்கள் என்று யாரும் இருக்கவில்லை. இந்த வரலாற்றை மாற்றி அமைத்த பணியை அன்று திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டது.

அப்போதைய யாழ் மறைமாவட்ட ஆயர் எமிலியானுஸ் பிள்ளையவர்கள் இவரை உயர்கல்வி கற்பிக்க எண்ணங்கொண்ட போது தமிழில் பற்றுறுதிகொண்ட அடிகள் தமிழை தெளிவுறக் கற்கவேண்டுமென்ற அவாவில், அக்காலத்தில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய "வித்துவான் புலவர்" பாடநெறியை தெரிந்து கொண்டார். இந்தப்பயிற்சி நெறியை இந்தியாவில் தொடர்ந்த காலத்தில், பல்வேறு கலை இலக்கிய முயற்சிகளில் ஈடுபடும் சந்தர்ப்பம் கிடைத்தது. குறிப்பாக D.K.S. சகோதரர்கள், R.S. மனோகர் குழுவினர், தி.மு.க வினர் போன்றோரின் பலநாடகங்களையும் அங்கு பார்க்கக்கிடைத்த சந்தர்ப்பங்கள் அவரைப் பலவகைகளிலும் தூண்டின எனலாம். நாடகத்துறையில் தீவிரமாக ஈடுபடுவதற்கான முனைப்பினை ஏற்படுத்திநின்ற அதேவேளை, அத்தகைய நாடகங்களை எம்மவர்களும் காணவேண்டுமென்ற முனைப்பு ஒருபுறமும், ஈழத்தில் இருந்து இந்தியாவுக்கு நாடகமொன்றையாவது கொண்டு சென்று இந்தியக் கலைஞர்களுக்கு ஈழத்தவர்கள் சளைத்தவர்களல்ல என்பதை வெளிப்படுத்த வேண்டுமென்ற பேரவா மறுபுறமுமாக முனைந்து நிற்க அவரது எண்ணத்தில் இந்தியக் கலைப்பயணம் உருவாகியது. இவ்வெண்ணத்தை செயல்வடிவப்படுத்த நினைத்தபோது பல்வேறு சவால்கள் அவருக்கு முன்பாக நின்றன. பயணத்துக்குத் தேவையான பெருமளவான நிதிச்சுமை, இந்தியாவில் நிகழ்ச்சியை பொறுப்பேற்ககூடிய ஆளுமை மிக்கவர்களின் தொடர்பு, நிகழ்ச்சி நடத்தவேண்டிய இடம் என பல்வேறு விடயங்களும் சவாலாக நின்றபோது, அவரது எண்ணத்திற்கு முதற்கிடைத்த ஆதரவு S. சேவியர் என்ற தீவிர கலை ஆர்வலனின் தொடர்பு ஆகும். திரு.சேவியர் திருச்சி மறை மாவட்டத்தில் பலருடனும் தொடர்புள்ள ஒருவராகவும், அதேவேளை பல நாடகக் குழுக்களுடன் உறவை வைத்திருந்த ஒருவராகவும் இருந்தார். அவரது ஆதரவுடன் 'திருச்சி தேவர் மண்டபத்தில்' நாடகம் ஒழுங்கு செய்யப்பட்டது. வேடஉடை முதல், காட்சி விதானிப்பு ஈறாக அனைத்தும் அவரது பொறுப்பிலேயே விடப்பட்டது. அதேவேளை வருகின்ற கலைஞர்கள், பார்க்கவேண்டிய இடங்கள், சந்திக்கவேண்டிய கலைஞர்கள் போன்றவற்றுக்கான தொடர்புகளை மேற்கொள்ள அப்போது பெருமளவில் பிரபல்யமடையாத சினிமா நடிகன் மாஸ்ர் சேகர் நியமிக்கப்பட்டார். இத்தகைய பின்னணி ஒழுங்குகளை மேற்கொண்டபின் மரியசேவியர் அடிகள் யாழ்ப்பாணம் வந்தார்.

இங்கு வந்து பயணத்தில் இணைந்து கொள்ளக்கூடிய கலைஞர்களை ஒன்றுதிரட்டினார். முழுச்செலவையும் திருமறைக் கலாமன்றம் பொறுப்பேற்கக்கூடிய நிலை அப்போது இருக்கவில்லை. எனவே கலைஞர்களும் தங்களது பங்கிற்கு நிதி செலுத்த வேண்டிய தேவை இருந்தது. இந்தச்சுமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கக்கூடியவர்களும், நாடக நிகழ்வைத் திறம்பட செய்யக்கூடியவர்கள் என்ற அடிப்படையிலும் 21 கலைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயணத்துக்கான ஆயத்தம் செய்யப்பட்டது.

இவ்வாறு பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டபோது பயணத்தில் பங்கு கொள்பவர்களாக மன்னார் A.V.ஆனந்தன், உரும்பிராய் S. ஜெகநாதன், அடம்பன்கோட்டை M. யேசுதாசன், நாவாந்துறை N.S. ஜெயசிங்கம், கண்டிக்குளி T. அருள்ராஜ், கொய்யாத்தோட்டம் S.M. யோன், நல்லூர் பிரான்சிஸ் ஜெனம், சுச்சமோட்டை B. இம்மானுவேல், திருநகர் தங்கராஜா இலவாலை N. அருளானந்தம், குருநகர் G.P. பேர்மினஸ், V.J. கொன்ஸ்ரன்ரைன், C.M. ஜெனிசன், A. யோசவ், G. அல்போன்ஸ், A. V. டேமியன் சூரி, S. சின்ராசா, C. அல்வினஸ், C. கிறிஸ்ரியன், J. சேவியர், G. அன்ரன் என இருபத்தியொரு கலைஞர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களில் நிதி, ஏனைய போக்குவரத்து ஒழுங்குகள் போன்றவற்றுக்கு அப்போது செயலாளராக இருந்த திரு. V.J. கொன்ஸ்ரன்ரைன் நியமிக்கப்பட்டார். குறுகிய கால எல்லையில் போக்குவரத்து ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டன. 'சேதுவா' மையத்தின் சூழலில் நாடு இருந்த காரணத்தினால் அப்போது கடவுச்சீட்டு எடுப்பதைவிட சி. ஐ. டி. யினரின் 'கிளியரன்ஸ்' என்றும் அனுமதி பெறப்படுதல் மிகுந்த சிரமமாக இருந்த பின்னணியிலும் V.J. கொன்ஸ்ரன்ரைனின் முயற்சி அவற்றை விரைவுபடுத்தியது. அத்தோடு இரு கலைஞர்களுக்கான அனுமதி அரசாங்க ஊழியர்கள் என்ற காரணத்தால் மறுக்கப்பட்டு பின்னர் நிபந்தனையுடன் வழங்கப்பட்டது. அதுமட்டுமன்றி கடுமையான சோதனைகள், கப்பல் மூலமாக அனுப்பப்படுதல் என்று பல்வேறு கட்டுப்பாடுகள் முடிக்கப்பட்டு பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

அதே நேரத்தில் மேடையேற்றுவதற்குரிய நாடகமாக 'களங்கம்' தெரிவுசெய்யப்பட்டது. திருப்பாடுகளின் வரலாற்றை புதியதொரு அழகுமுறையில் நவீன உத்திகளைக் கையாண்டு உருவாக்கப்பட்ட நாடகமே களங்கமாகும். அதாவது நீதிமன்றத்தில் நின்றுகொண்டு யேசுவின் மரணத்திற்கு யார் காரணம் என விசாரணை செய்கிறார்கள். இரு பக்கங்களும் நீதிபதியும், இந்த விசாரணையில் வருகின்ற ஒவ்வொரு குற்றவாளிகளின் வாக்குமூலங்களூடாக கதை நகருகின்றது. சற்றில் கிறிஸ்துவின் மரணத்தில் களங்கத்துக்குரிய குற்றவாளிகள் பாவத்தில் உழலும் பாவிகளே எனபது தீர்ப்பாகிறது. இதில் கயமை, குரோதங்கள், பழமைகள், போன்ற பலவும் பயன்படுத்தப்படுகின்றன.

சமகாலத்து அரங்கின் நவீன போக்குகள் உருவாக முன்னைய அம்சங்களின் இணைப்பில் உருவான இந்நாடகம் அக்காலத்தில் பெரிய வரவேற்பை பெறவில்லை. நவீன முறைமைகள் என்றும், எமது தேசத்தில் உருவாக்கப்பெறும் காலத்தில் உடனே மதிக்கப்படுவதில்லை. அந்தவகையிலும் வேறுபட்ட அந்த நாடகம் தமிழகத்தில் வரவேற்புப் பெறாமல்

பல்வேறு வியாபாரிகள், பயணிகள் என்றெல்லாம் தேசங்கடந்து பரிமாற்றம் செய்து வந்த அந்த விமானம் முதன் முதலாக நாடகக் கலைஞர்களை சுமந்திருந்து காலியாடி பிப. 3.30 மணிக்கு வானவெளியில் எழுந்தது.

என்ற சிந்தனையுடனும், அவ்வூடகம் கூறப்பட்டு இலங்கையின் பல பாகங்களுக்கும் கொண்டுசென்று மேடையேற்றப்பட்டு பலரின் பாராட்டுக்களையும் பெற்றதான, 'பலிக்களம்' நாடகத்தின் சில பகுதிகளையும் இணைத்து 'களங்கம்' புதிய பெயருடன் உருவாக்கம் பெற்றது. ஏற்கனவே அறுபதிற்கு மேற்பட்ட நடிகர்கள் தேவைப்படும் இந்நாடகத்தை இருபத்தியொரு பேருடன் மேடையேற்றுவதென்பதும் பெரிய சவாலான விடயமாகவே பட்டது. இந்தச்சவால்களை வென்று மிகவும் இறுக்கமான நாடகமாக களங்கம் ஒத்திகைகளின் முழுமை பெற்றது.

இயல்பாகவே நாடகங்களை உருவாக்கும்போது மரியசேவியர் அடிகள் கண்டிப்புடன் செயற்படுவது வழமை. நேரம், ஒழுங்கு, கட்டுப்பாடுகளில் ஒரு சர்வாதிகாரியாகவே காணப்படும் இயக்குநர், கடல் கடந்து கொண்டு செல்லும் நாடகத்தில் இன்னுமொரு படி மேலான கவனத்துடன் நாடக ஒத்திகையில் ஈடுபட்டார். இரவு பகல் பாராது முழுமூச்சுடன் மேற்கொள்ளப்பட்ட ஒத்திகைகளினால் நாடகம் மிகச்சிறப்பான நேர்த்தியுடன் மிளிர்ந்து நின்றது.

பயணத்தின் ஆரம்பம்

16.05.1973 அன்று பலரும் எதிர்பார்த்த அந்தத் தென்னிந்தியப் பயணம் ஆரம்பமாகியது. இயக்குநர் மரியசேவியர் அடிகள் எல்லா ஒழுங்குகளையும் செய்துமுடித்துவிட்டுத் தமிழகம் திரும்பியிருந்தார். மன்ற பொதுச்செயலாளர் V. J. கொன்ஸ்ரன்ரைன், பொருளாளர் பிரான்சிஸ் ஜெனம் போன்றோரின் வழிநடத்தலுடன் பயணம் ஆரம்பமாகியது. பலாலிக்கும் திருச்சிக்குமான குறுகிய விமானசேவை ஆரம்பிக்கப்பட்ட தொடக்ககாலம் அது. பயணத்திற்குத் தயாரான கலைஞர்களைக் காவிக்கொண்டு மோட்டார் வாகனங்கள் பலாலிக்கு விரைந்தன. பயணம் செய்பவரை மனமுவந்து வழியனுப்புவதற்கு மன்றத்தின் கலைஞர்கள் பலரும் பலாலி விமான நிலையத்திற்கு வந்திருந்தனர். பெரியதொரு சாதனையைப் புரியப்போகிறோம் என்ற பெருமிதத்துடன் கலைஞர்கள் விமானத்தை நோக்கி நடந்தனர். பெரும்பாலானோருக்கு அது முதல் இந்தியப் பயணம் மட்டுமன்றி முதல் விமானப் பயணமுமாகும். மொத்தம் இருபத்தியொரு கலைஞர்கள் அந்தப்பயணத்தில் இணைந்திருந்தனர்.

பல்வேறு வியாபாரிகள், பயணிகள் என்றெல்லாம் தேசங்கடந்து பரிமாற்றம் செய்து வந்த அந்த விமானம் முதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாக நாடகக் கலைஞர்களை ஈழத்திலிருந்து காவியபடி பி.ப. 3.30 மணிக்கு வானவெளியில் எழுந்தது. விமானத்தில் இருந்த கலைஞர்களின் மனவெளிகளில் மகிழ்ச்சியும், பாரதத்தை தரிசிக்கப்போகும் பேராவலும் நிறைந்து ஆகாய வெளியில் அவற்றைச் சங்கமமாக்கிக் கொண்டிருந்தனர். நினைத்து முடிப்பதற்குள், 40 நிமிடத்தில் பி.ப. 4.10 க்கு விமானம் திருச்சி விமான நிலையத்தில் தளமிறங்கியது. விமானத்தில் இருந்து இந்தியத் திருநாட்டில் கால்பதித்த கலைஞர்களை வரவேற்பதற்கு இயக்குநர் மரியசேவியர் அடிகளாரும், திருவாளர் சேவியர் அவர்களும் விமானநிலையத்தில் காத்திருந்தார்கள். கலைஞர்களை அன்புடன் வரவேற்றவர்கள் கலைஞர்கள் தங்குவதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். மோட்டார் வாகனத்தில் நகர்ந்து கத்தோலிக்க 'தமிழ் இலக்கிய கழக மண்டபத்திற்கு' அனைவரும் அழைத்து வரப்பட்டனர். அந்தத் தமிழ் இலக்கியக் கழக மண்டபமே அவர்கள் தங்குவதற்கான தற்காலிக இடமாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தது.

தமிழ் இலக்கியக் கழகத்தில் தங்கிய அந்த முதற் பொழுதிலேயே இயக்குநர் மரியசேவியர் அடிகள் பயணத்தின் திட்டங்களை விபரிக்கத் தொடங்கினார். அங்கு நிற்கின்ற குறுகிய நாட்களுக்குள் பெறக்கூடிய அதிஉச்ச அனுபவத்தை பெறவேண்டும் என்பதனை வலியுறுத்தியதுடன் அந்தப் பயணத்துக்குரிய இரண்டு முக்கிய நோக்கங்களான, நாடகத்தை சிறப்பாக மேடையேற்றுதலும், முக்கியமான இடங்களையும், நிகழ்வுகளையும் பார்வையிடலும், என்பவற்றை அடைதலுக்குரிய நோக்கினை முழுமைப்படுத்தவும் வேண்டியவாறான ஆலோசனைகளை வழங்கி 22 ஆம் திகதி நாடக மேடையேற்றத்துக்கு முன்னதாகச் சென்னைக்குச் செல்வதும், அங்கு எல்லோரும் ஒன்றாகச் செல்லாது மூன்று குழுக்களாக வெவ்வேறு இடங்களுக்குச் சென்று வருவது என்றும் விபரித்தார். அனைவருக்கும் அத்திட்டம் ஏற்புடையதாய் இருந்தது. அந்த செயற்திட்டங்களை மனதில் காவியபடி சிலர் தூக்கத்திற்குச் சென்றனர். சிலர் அன்றிரவே அண்மையில் உள்ள திரையரங்கில் "ராஜராஜசோழன்" திரைப்படம் பார்ப்பதற்குச் சென்றனர். எஞ்சிநின்ற சிலர் அண்மையில் இருந்த சிறிய வைரவர் கோவில் ஒன்றில் நடைபெற்ற சீர்காழி கோவிந்தராஜனின் இசைக்கச்சேரியைத் தரிசிக்கச் சென்றனர். இவ்வாறு கழிந்த மாலைப்பொழுதில் பாரதமண்ணில் தாம் தங்கிநிற்கும் பசுமைமிக்க நினைவுகளுடன் நின்றதனை இன்றும் பலர் நினைவுகூருகின்றனர்.

மறுநாள் (17.03.1973) அதிகாலையிலேயே கண்விழித்த அனைவரும் அருகில் இருந்த கன்னியர் மடச்சிற்றாலயத்தில்

மரினா கடற்கரையில்...

திருப்பலியில் பங்கு கொண்டதன்பின் சென்னைக்குப் புறப்படத் தயாராகினர். திருச்சியில் இருந்து மெட்றாசிற்குச் செல்லும் புகைவண்டியில் காலை எட்டு மணிக்குப் பயணம் ஆரம்பமாகியது. புகையிரதத்தில் சந்தித்த வெவ்வேறு மொழி பேசுவோர், தமிழையும் வெவ்வேறாக உச்சரிக்கும் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனப் பலரையும் சந்திக்கும் ஒரு பயணமாக அது அமைந்தது. அதுமட்டுமன்றி வழி நெடுகிலும் தி.மு.க., அ.தி.மு.க. கொடிகள், கருணாநிதி எம்.ஜி.ஆர். போன்றோரின் வானுயர்ந்த கட்டவுட்டுகள் எனத் தேர்தல் காலத்தில் நின்ற தமிழகத்தின் சூழலை விளங்கிக் கொண்ட பயணமாக அது கழிந்தது. இரவு 10.30 மணிக்கு புகையிரதம் சென்னையைச் சென்றடைந்தது.

சென்னையில் புதுவித நகரச் சூழலை அனுபவித்தபடி எத்தனையோ திரைப்படங்களில் பார்த்து இரசித்த தெருக்களையும் உயர்ந்த கட்டடங்களையும் கண்களில் நிறைத்து அன்றைய இரவுப் பொழுதினை தேவாலயப் பங்குத் தளமொன்றில் கழித்தனர். விடிந்ததும் அனைவரும் A.V.M. ஸ்ரூடியோவை சென்று பார்வையிடுவது என்பது அப்போதைய திட்டமாக இருந்தது. கலைஞர்கள் அனைவரையும் அழைத்துச் செல்வதற்கென, அப்போது குட்டி நடிகனாக அறிமுகமாகி பலரின் பாராட்டுக்களையெல்லாம் பெற்றிருந்தவராகிய மாஸ்ரர் சேகர் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தார். அவருடைய தந்தையார் ஒரு உதவி ஒலிப்பதிவாளராய் இருந்ததும் A.V.M இல் அதிக பரிச்சயம் உள்ளவராக இருந்ததும் சேகர் உதவி புரிவதற்கு காரணமாயிருந்தது. நடிகர் சேகரைக் கண்டதுமே கலைஞர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய மகிழ்ச்சி. அன்னை வேளாங்கண்ணி திரைப்படத்தில் 'சப்பாணியாகவும்' மணிப்பயல் படத்தில் குட்டிப் பயலாகவும் பார்த்து ரசித்த அந்த குட்டி நடிகன் அவர்களுடன் நின்றது அவர்கள் அனைவருக்கும் பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது.

ஏ. வி. எம். ஸ்ரூடியோ

மாஸ்ரர் சேகருடன் A.V.M. ஸ்ரூடியோவுக்குச் சென்றதும் அனைவரும் மலைத்துப்போய் நின்றனர். பிரமாண்டமான பல ஏக்கர் நிலப்பரப்புள்ள ஒரு பெரிய பிரதேசமே ஸ்ரூடியோவாகக் காணப்பட்டது. வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பணிகள் தொழில் நுட்பங்களுடன் மேற்கொள்ளப்பட்டுக்கொண்டிருந்தன. ஒரு இடத்தில் டைரக்டர் S.P. முத்துராமனின் இயக்கத்தில் (அப்போது யெரிடப்படாத) திரைப்படம் ஒளிப்பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. நடிகர் ஸ்ரீகாந் நடிக்கின்ற ஒரு காட்சி படமாக்கப்பட்டுக்கொண்டிருந்தது. சினிமா என்ற கலையின் தொழில் நுட்பத்தையும் ஒளிப்பதிவு முறைகளையும், பயன்படுத்தும் கருவிகளையும், குழுவாக மேற்கொள்ளும் செயலொழுங்கையும் கண்டு அனைவரும் பிரமித்துப்போய் நின்றனர். அதேவேளை இயக்குநர் முத்துராமன், நடிகர் ஸ்ரீகாந், இயக்குநர் பந்துலு போன்ற பலருடனும் உரையாடி அவர்களுடன் நின்று புகைப்படங்களும் எடுத்துக் கொண்டனர்.

அது மட்டுமன்றி திரைப்படங்களுக்கென அமைக்கப்பட்ட பிரமாண்டமான காட்சி அமைப்புக்களும் பலருக்கு ஆச்சரியத்தைத் தோற்றுவித்தது. அப்போது அண்மையில்தான் வெளிவந்திருந்ததான 'ராஜராஜசோழன்' திரைப்படத்திற்கு பயன்படுத்தப்பட்ட மாளிகைகள், எரிந்த நிலையில் காணப்பட்ட மாளிகை, எரியூட்டப்பட்ட காட்சித் துண்டங்கள் போன்ற பலவற்றையும் பார்த்தவர்கள் அரங்கிற்குரிய பல்வேறு விடயங்களையும் கற்றுக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை ஒலிப்பதிவுக் கூடத்தில் அந்த திரைப்படத்துக்கான பாடல் ஒன்று ஒலிப்பதிவு செய்து கொண்டிருந்தனர். M.S. விஸ்வநாதன் இராமமூர்த்தியின் இசையில் "உன் காதைக்கொஞ்சம் ஒரு சேதி சொல்வேன்...." என்ற பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. ஜெயச்சந்திரனும், ஜானகியும் அந்தப்பாடலை இசைத்துக் கொண்டிருந்தனர். [illegible] தொழில் நேர்த்தியுடன் அந்த இசை வடிவம் பெற்றது [illegible] இருந்தது. அதேவேளை அவ்வாறான ஒலிப்பதிவுக்கூடம் முதலியவை யாழ்ப்பாணத்தில இல்லையே என்ற ஆதங்கமும் மனங்களில் வந்துசென்றது. அன்றைய நாள் பொழுது முழுவதும் அந்த A.V.M. என்னும் பிரமாண்டத்துள் கழிந்தது. ஆசியாவிலேயே பெரிய ஸ்ருடியோ என்று அழைக்கப்பட்ட அந்த ஸ்ருடியோவை பார்த்தமையானது வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவமாகப் பலருக்கும் இருந்ததென்பது உண்மை.

ஏ. வி. எம். ஸ்ருடியோவில்...

தரிசனம்

மறுநாள் இயக்குநர் ஏற்கனவே கூறியபடி மூன்று குழுக்களாகப் பிரிந்து வெவ்வேறு இடங்களையும் சென்று பார்ப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. கோவில்களையே தரிசிப்பதையே இலக்காகக்கொண்டு ஒரு குழுவும், கலைத்துவமான இடங்களையும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களையும் தரிசிப்பது என்ற நோக்கில் ஒரு குழுவும், நகரத்தின் பிரபல்யமான அங்காடி, வணிக மையங்களைப் பார்வையிடல் என மற்றொரு குழுவாக பயணத்தைத் தொடங்கினர். இந்த நோக்கங்களைப் பொதுமைப்படுத்தினாலும் பல்வேறு இடங்களையும் ஒருமித்து மூன்று குழுக்களும் பார்வையிட்டனர். பொதுவாக அவர்களின் மனங்களை விட்டகலாத அனுபவங்களான சில இடங்கள் வருமாறு:

- ➢ சென்னையில் பல திரைப்படங்களிலும் பயன்படுத்தப்பட்ட 'பிருந்தாவனம்' பூங்கா (மைசூர்)
- ➢ [illegible] பெயர் போன 'சைனா பஜார்'
- ➢ பிரமாண்டமான தேவாலயமான 'சாந்தோம் தேவாலயம்'
- ➢ சாந்தோம் கலைக்கூடப் [illegible]
- ➢ திருச்சி வானொலி நிலையம்
- ➢ தஞ்சைப் பெருங்கோவில்
- ➢ கலையம்சம் நிறைந்த 'ஸ்ரீரங்கம்'
- ➢ தாம்பரம் பல்கலைக்கழகம்
- ➢ அப்போதுதான் சிலைகளினாலும், வடிவமைப்பாலும் சீர்படுத்தி அமைக்கப்பட்ட மரீனா கடற்கரை
- ➢ பிரம்மாண்ட [illegible] 'சாந்தி' திரையரங்கில் 'பாரத விலாஸ்' திரைப்படம் பார்த்தது.

[illegible] அனுபவங்களுடன், அங்கே யாழ்ப்பாணப் பேச்சு வழக்கை கண்டவர்கள் "நீங்கள் கேரளாவா? என [illegible] வியப்பிற்கு. [illegible]. [illegible] பொருள்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் [illegible] பகுதியில் அமர்ந்து [illegible]. "[illegible]" என்று ஓடர் கொடுத்தது அது "[illegible]" [illegible]. '[illegible]' என்பது 'ரோட்டி' என்று [illegible] கொடுத்துச் சங்கடப்பட்டது. 'சைனா பஜாரில்' [illegible] விலைபேசிக் கொடுவிட்டு, அதை கட்டாயம் வாங்கவேண்டிய [illegible]. வழியில் கலைஞன் [illegible] அண்ணாந்து கண்டு பிடித்தது...

[illegible] மறக்கமுடியாததும், மகிழ்ச்சிக்குரியதுமான அனுபவங்களுடன் அந்த நாட்களும் சென்னை மாநகரத்தில் கழிந்தது.

கண்டுகளித்த நாடகங்கள்

இந்தப்பயணத்திலே எப்படியாவது சில நாடகங்களை யாவது மாணவர்கள் பார்க்கவேண்டுமென இயக்குநர் விரும்பி இருந்தார். அந்த விருப்பு நிறைவேற அந்த சிலநாட்களிலும், நான்கு நாடகங்களை அவர்கள் பார்க்கக்கூடியதான சந்தர்ப்பம் கிடைத்தது. அவற்றில் முதலில் சென்னையில், கருணாநிதி [illegible] 'காகிதப்பூ' என்னும் நாடகத்தை [illegible]. பெருமளவில் திரைப்படங்களின் பாவனையை ஒத்த அந்த நாடகத்தில் (காலஞ்சென்ற) கருணாநிதி பிரதான பாத்திரத்தை ஏற்றிருந்தார். அதேவேளை சினிமாவில் நடிக்கும் பல்வேறு துணை நடிகர்களும் அதில் நடித்திருந்தனர். சினிமாவிலும், நாடகத்திலும் பெருமளவில் வேறுபடாத நடிப்பு முறைமை, தொழில் நுட்பம் நிறைந்த ஒளிவிதானிப்பு, மூப்பரிமாண காட்சி அமைப்புகள் என பல்வேறு விடயங்களை அந்த நாடகத்தில் கலைஞர்கள் கண்டிருந்தார்கள். அதேவேளை நாடகத்தின் பின், பிரதான நடிகர்களையும் நடிகர் A.V.M. ராஜன் போன்றவர்களையும் கலைஞர்கள் சந்தித்து உரையாடினர்.

இந்த நாடகத்தைவிட நடிகர் சந்திரபாபுவின் நாடகக் குழுவினரின் '[illegible]', R.S. மனோகர் குழுவினரின் '[illegible]' போன்ற நாடகங்களையும், தெருக்கூத்து வகையில் நடைபெற்ற 'திருப்பாதிகளின் காட்சி' போன்றவற்றையும் பார்த்தனர். இந்த நாடகங்கள் இந்திய அரங்க வளர்ச்சியை அவர்களுக்கு உணரவைத்து நின்ற அதேவேளை, நடிப்பு நாடக ஆக்கத்தில் ஈழத்தவர்கள் எந்தவகையிலும் குறைந்தவர்களல்ல என்ற மனநிலையை உருவாக்கத் தவறவில்லை. ஆனால் தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரையில் தமிழக அரங்க வளர்ச்சி [illegible] நின்றதையும் உணர்ந்தனர்.

திருச்சி தேவர் மண்டபத்தில் 'கலைஞன்'

திட்டமிட்டபடியே 21.05.1973 அன்று இரவு சென்னையில் அனைவரும் புறப்பட்டு திருச்சிக்குச் சென்றனர். 22 இல் திருச்சி தேவர் மண்டபத்தில் நாடகம் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தில் நாடகத்துக்குரிய எல்லா ஒழுங்குகளையும் திருவாளர் சேவியர் அவர்கள் செய்து முடித்திருப்பார் என்ற எண்ணத்துடன் சென்றவர்களுக்கு பெரிய அளவில் ஏமாற்றமே காத்திருந்தது. அதாவது உரோமைய நாடகத்தை வெளிப்படுத்தக்கூடிய காட்சிப் பின்புலங்கள் எதுவும் அரங்கில் இருக்கவில்லை. மாறாக கீழைத்தேச கலாசார மரபை பிரதிபலிக்கும் பின்னணிக் காட்சிகளே வைக்கப்பட்டிருந்தன. அதேவேளை, வேடஉடைகளாக தருவிக்கப்பட்டிருந்தவை அனைத்தும் சபா நாடகங்களுக்குரியவை, அவற்றில் எந்த வேடஉடைகளும் யூத, உரோமைய, மரபைக்கொண்ட 'களங்கம்' நாடகத்திற்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. இந்த முக்கிய இருவிடயங்களுக்கும் உடனடியாக தீர்வு காணப்படவேண்டி இருந்தது. மிகுந்த கற்பனை வளம்மிகுந்த இயக்குநர் துரிதமாக சிந்திக்கத் தொடங்கினார். அங்கு பல 'பெற்சீற்'கள் பெறக்கூடியதாக இருந்தது. உடனே அவற்றைக் கொண்டு தூண்களை மறைந்து, உரோமைய பின்னணி உணரத்தக்கவாறு காட்சித் துண்டங்களை அமைப்பித்தார். அவை வெவ்வேறு தளங்களையும், முப்பரிமாண மாயை நிலைகளையும் தோற்றுவித்து நின்றன. இதுபற்றி மரியசேவியர் அடிகள் 'கலைமுகம்' நூலில் பின்வருமாறு. கூறுகின்றார்

"திருச்சி தேவர் ஹோலில் பலிக்களத்தையும், களங்கத்தையும் இணைத்து சுமார் 1மணி 50 நிமிட நாடகமாக மேடையேற்றினோம். அன்று விடாத மழை செட்டிங்ஸ் எல்லாம்..... இங்கிருந்து கொண்டுபோக வசதியில்லை ஆறு பெட்சீற், ஒருமேசை, இலைகுழைகள், இன்னும் சில தடி பொல்லுகளைக்கொண்டு அவர்கள் மூளைக்கு எட்டியபடி செற்றிங்கை அமைக்கும்படி பையன்களிடம் கூறினேன். அழகாக அமைந்து விட்டார்கள்." (கலைமுகம் நூல் பக், 74)

அதேபோல் பெற்சீற்றுக்களைக் கொண்டும் உடனடியாகச் சேகரித்த சாறிவகைகளையும் கொண்டு வேடஉடைகள் தயார் செய்யப்பட்டன. கைவினை நுட்பங்கள் நிறைந்த பல கலைஞர்கள் குழுவில் இருந்ததால் குறுகிய நேரத்தில் இந்த ஒழுங்குகளை யெல்லாம் செய்யக்கூடியதாக இருந்தது. இரவு 7.00 மணிக்கு நாடகம் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் நாடகம் ஆரம்பிக்கப்படவில்லை இரவு 8.15 க்கே நாடகம் ஆரம்பிக்கப்பட்டது. காரணம் நாடக நிகழ்வை பலவீனப் படுத்தத்தக்க சில விடயங்கள் அன்றையதினம் நிகழ்ந்திருந்தன. நிகழ்வுக்கு வந்த மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்பட்டது. அதற்கான காரணங்களாக, அன்றையநாளில் திண்டுக்கலில் தேர்தல் நடைபெற்றது அந்த தேர்தல் சூழல் பார்ப்போரின் வருகையை பாதித்திருந்தது. ஆனால் அதனைவிட மக்கள் வெளிக்கிடுவதற்கு முடியாதவாறு அடைமழை சோவெனக் கொட்டிக்கொண்டிருந்தது. தேவர் மண்டபத்தின் 'கலரிப்'பகுதியினால் வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. எனவே எதிர்பாத்த அளவிலான பார்ப்போர் சமூகம் அரங்கை நிறைக்கவில்லை. ஆனால் அன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினராக அப்போதைய திருச்சி ஆயர் அதி. வந்தனைக்குரிய ஜோஜ் ஆண்டகை வருகை தந்திருந்தார், பல்வேறு குருக்கள், கன்னியாஸ்திரிகள் போன்றோரும் கலந்து கொண்டனர்.

நாடக மேடையேற்றம் உண்மையில் கலைஞர்களுக்கு மறக்க முடியாத பல அனுபவங்களை வழங்கிநின்றது. பிரமாண்டமான அந்தத் தேவர்மண்டபமும், அதன் ஆற்றுகை வெளியின் பல்பரிணாமத் தோற்றமும். பிரமாண்டத்தன்மையும், கலைஞர்களுக்கு புதிய அனுபவத்தைக் கொடுதத்து. அதேவேளை,

நுட்பம்மிக்க ஒளிவிதானிப்பு நாடகத்தில் ஒரு மொழியாகவே இணைந்து நின்றது. 1971 இல் யாழ். கோட்டையில் 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' நாடகத்தை மேடையேற்றிய போது கொழும்பில் இருந்து 'பராகிரமாஸ்' என அழைக்கப் பட்ட உயர் தொழில்நுட்ப ஒளிவிதானிப்பாளர்கள் கலந்து கொண்டனர். ஆனால் அந்த ஒளி நுட்பங்களைவிட எவ்வளவோ சிறப்பாக அந்த அரங்க ஒளியூட்டுகை அமைந்திருந்தது. நாட்கத்துக்கான பாடல்கள் ஏற்கனவே ஒலித்தட்டுக்களில் பதியப்பட்டு கொண்டு சொல்லப்பட்டிருந்தது. இடை இசை மட்டும் இசையமைப்பாளர் M. யேசுதாசனால் வழங்கப்பட்டது. இவ்வாறு நாடக அரங்கேற்ற அனுபவம் மறக்கமுடியாததாயிருந்தது.

மொத்தத்தில் நாடக ஆற்றுகையானது ஆரம்பம்முதல் இறுதிவரை விறுவிறுப்பாக பார்ப்போரை அரங்குடன் கட்டிவைத்திருக்கக்கூடிய வகையில் அமைந்திருந்தது. பிரதம விருந்தினர் உட்பட அனைவரும் நாடகத்துடன் இரண்டறக கலந்திருந்தனர். ஆனால் நாடகம் முடியும் தருவாயில் ஒரு சிறிய சலசலப்பு. காரணம் இறுதிக்காட்சியில் பார்வையாளர்கள் மத்தியில் இருந்து நடிகர் ஜெயசிங்கம், அரங்கை நோக்கிச் செல்லவேண்டும். அக்காலகட்டத்தில் அவ்வறான உத்திகள் பெருமளவில் பழகக்பட்டிருக்கவில்லை. அதனை அங்கிருந்தவர்கள் தவறாக விளங்கிக் கொண்டனர். இதுபற்றி மரியசேவியர் அடிகள் கலைமுக நூலில் விளக்கமாகக் குறிப்பிடுகின்றார்... "நாடகத்தின் இறுதிக்கட்டம் இயேசுவின் கொலைக்குக் காரணமாக இருந்தவர்களை பிலாத்துத் தொடக்கம் யூதாஸ்வரை நடுவர், ஒவ்வொருவராக விசாரணை செய்ய, அவர்கள் அனைவரும் தாம் நிரபராதிகள் என வாதிட, நடுவர் "பின் யார்தான் களங்கத்தின் காரண கர்த்தா" என்ற கேள்வியை எழுப்ப, பார்வையாளர் மத்தியில் இருந்து நடிகர் ஒருவர் எழுந்து "நான் கூறுகிறேன்" என்று பதிலளித்து மேடையை நோக்கி வரவேண்டும். அந்தக்கட்டம் வந்ததும் நமது நடிகர் ஜெயசிங்கம் ஒரு அசல் இந்தியத் தமிழனைப்போல உடுத்தி, பார்வையாளர் மத்தியில் இருந்து கிளம்பி உரத்துப்பேசிக்கொண்டு மேடைக்கு வந்தார். ஹோலில் ஒரே குழப்பம் நீண்ட மேடையில் இருந்தும் உள்ளே நின்றபலர் ஹோலை நோக்கி ஓடிச் செல்வதைப் பார்த்தேன். நாடகப் பொறுப்பாளர் எஸ். சேவியர் அவர்களும் அதிர்ச்சி அடைந்து 'அடடா என்னடா கலாட்டா இது' என்று முணுமுணுத்துக்கொண்டு ஓடிவந்தார். அவரை மெல்லத்தடுத்து நிறுத்தி விளக்கம் கொடுத்தேன் 'நல்லகாலம் நீங்க சொன்னீங்க, அல்லது அந்தப்பயலை ஒரு கை பார்த்திருப்பேன்' என்று சொல்லி அமைதியாக இருந்தார்...." (கலைமுகம் நூல் பக். 80) இவ்வாறு சிறிய குழப்பம் ஏற்பட்டாலும் அந்த உத்தியைப் பின்னர் பலரும் பாராட்டினர். நாடகமும் நிறைவுபட மழையும் விட்டிருந்தது.

பலரும் பலவாறாக நாடகத்தைப் பாராட்டி இருப்பினும் இயக்குனருக்கோ, நடிகர்களுக்கோ நாடகம் திருப்தியைத் தரவில்லை. எதிர்பார்த்த பார்வையாளர்கள் வராமையும், இயற்கையின் குழப்பமும் நிறைவைத் தரவில்லை. ஆனால் நீண்டநாள் கனவு இந்திய மண்ணில் அதிலும் அதிக பிரபல்யம் மிக்க தேவர்மண்டத்தில் நிறைவேறியது மனநிறைவை அளித்தது.

(பயணம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நனைந்த விழிகள் நினைவுகள் சுமக்க நகரும் மீதி நாட்கள் நம்பிக்கையுடன்...

சிலருக்கு இறுதியாகவும்
பலருக்கு இருண்டதாகவும்
புலர்ந்தது பொழுது.
சேதியறிந்து முகத்தை
திருப்பிக் கொண்டான் சூரியன்.
அக்கினிக் கரங்கள்
முறிந்து விடுமோ! என்ற
அச்சம் ஆதவனுக்கு
'எனக்கென்ன வேலை' என்பதாக
மூச்சுக்கு அளவாக மட்டுமே
வீசியது காற்று
'துன்பத்தில் பங்கெடுத்துக் கொள்கிறேன்'
என்பதாக
கறுப்பு புடவை அணிந்து கொண்டது
வானம்.
மனிதன் தவிர்ந்த
விலங்குகளுக்கும்
பறவைகளுக்கும் நடக்கப்போகும்
வில்லங்கம் விளங்கி விட்டது.
"ஐயகோ" எனக் கத்தி
ஆளுக்கொரு திசை பறந்துவிட்டன.
ஏதுமறியா அப்பாவிகளாக
தன் கரை தழுவியிருந்த
உறவுகளை கொன்று
ஆழி ஊழிக் கூத்தாடி
இன்றுடன்
திங்களொன்றாயிற்று.
கொள்ளியிடக் கூட
கொடுத்து வைக்காப் பாவியராய்-உறவுகளை
மொத்தமாய் குழியிட்டு மூடி
இன்றுடன்
முப்பத்தியொரு நாள்
முற்றிற்று.
அழகாயிருந்த எம் ஜீவிதத்தை
அள்ளிக் கொண்டேகிய கடலே!
மீண்டும்
பொலிவுற்று விளங்குகிறாய் நீ – நாங்கள்தான்
நலிவுற்றுள்ளோம்
நடைபிணங்களானோம்.
இயற்கை பொறாமைப்படாதென்ற கூற்று
பொய்யாகிப் போனதன் மாயமென்ன?
சுமத்திராவில்
பாறைகள் முத்தமிட்டுக்கொண்டால்
சமுத்திரா தேவிக்கு என்னவாம்?
சன்னதங் கொண்டாடிய தேவியே! – பார்
நாங்களிங்கே
சின்னாபின்னமாய்ப் போயுள்ளோம்
வல்லரசுகள் தானே உன்னை
வம்புக்கிழுத்தன - இந்த
சின்னமணித் தீவுனக்கு
என்ன பழி செய்தது?
உறவுகளே!
குந்தியிருந்து ஒப்பாரிவைத்து
கொள்ளியிட்டு
அந்தியெட்டிக்கு
அஸ்திகரைக்கும்
எம் மரபுகளைக் கூட
வந்த கடல் விட்டு வைக்கவில்லை.
எந்த உருவில்
எமன் வருவானென
எவனுக்கு தெரியும் - நேற்று
வந்தான் எமன்
கடல் வடிவில்.
உடல் நனைத்து – உங்கள்
உயிரெடுத்துப் போனான்.
குனிந்த கூரைகளையும்
பணிந்த வேலிகளையும் நிமிர்த்த
நாற்திசையுமிருந்து
உதவிகள்
வந்து குவிகின்றது. – எனினும்
உம்மை மீட்டுத்தருவது யார்?
எம் கன்னக் குழிவழிந்தோடும்
நீரைத்தடுக்கும் சக்தி
எந்த வல்லரசுக்குண்டு?
முடியாது உறவுகளே!
உம்மை இழந்து தவிக்கும்
எம்மை
ஆற்றுப்படுத்தும்
ஆற்றல் - எந்த
போற்றுதற்குரியவராலும் முடியாது.
அழுதழுது கன்னத்தை நனைப்பதாலோ.
நெஞ்சிலடித்துக் குழறுவதாலோ,
இந்தா பிடியென
எமன் தருவானா உம்மை?
இல்லையெனும் உண்மை புரிந்தபின்னர்
எஞ்சிய பிஞ்சுகளுக்காகவும்
மிஞ்சிய வேர்களுக்காகவும்
வாழவேண்டுமென்பது
விழுதுகளுக்கு விதியாகிப் போனதால்
நனைந்த விழிகளில்
உங்கள் நினைவுகளைச் சுமந்து
நடக்கிறோம்
நாளைய வாழ்வுக்காக நம்பிக்கையுடன்.

மு. யாழவன்
திருகோணமலை

இக்கவிதை 'சுனாமி' இயற்கை அனர்த்தத்தின் 31 ஆம் நாள் நினைவாக 26.01.2005 இல் திருகோணமலை திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org